Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර්

ஒக். 15-21, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 378

# கடைசி நேரக் கருத்துக் கணிப்பு தமிழ்க் கட்சிகளின் இறுதிநிலை!



# முரசம்

## அதிகப்பிரசங்கத்தனம்!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இலங்கை அரசியற் சூழலின்
முக்கிய கட்டமொன்று
தற்போது அரங்கேறுகிறது.
ஆம்! அதுதான் இந்தப்
பாராளுமன்றப் பொதுத் தேர்தல்.
இந்தத் தேர்தலின்
வெற்றி தோல்வி
சிங்கள-அரசியல்
தமக்குத் தாமே போட்டுக்கொண்ட
முட்டுக் கட்டைகளில்
முட்டி மோதப்போகிறதா
இல்லையா என்பதைத்
தீர்மானிப்பதாக இருக்கும்.

அதாவது,
பாராளுமன்ற அதிகாரம்
எதிர்க் கட்சியிடம் சிக்குமாயின்
இலங்கையின் அரசாட்சியானது
பாராளுமன்றத்துக்கும்
ஜனாதிபதி மாளிகைக்கும்
இடையிலான கயிறிழுப்பாக
ஆகிவிடும்.
ஜே. ஆர். ஏற்படுத்திய
தற்போதைய அரசியலமைப்பு
இரு ஆட்சிபீடத்திலும்
ஒரே கட்சி அதிகாரத்தில்
இருக்கும் பட்சத்திலேயே
பொருத்தமானதாக அமையும்.

மாறி அமைந்தால்
செயற்படக்கூடிய
அரசியற் பக்குவம்
எமது நாட்டில் இல்லை.

இத்தகைய சூழ்நிலையில்
இனப்பிரச்சனையானது
இரண்டாம் பட்சமானதாக
ஒதுக்கப்பட்டுவிடலாம்.

இதேவேளை
இப்போதுள்ள
தேர்தல் முறையின்கீழும்
அரசியல் சூழ்நிலையிலும்
எந்தவொரு கட்சிக்கும்
மூன்றில் இரண்டு பெரும்பான்மை
கிடைக்கப் போவதில்லை.

சாதாரண பெரும்பான்மையை
ஈட்டுவதற்குக் கூட
சிறுபான்மை இனக் கட்சிகளின்
அனுசரணை தேவைப்படலாம்.
கடந்த பொதுத்தேர்தலிலும்
பொது ஜன மக்கள் முன்னணிக்கு
இத்தகைய ஒரு நிலை ஏற்பட்டு
மலையக மக்கள் முன்னணியே
கைகொடுத்திருந்தது.

இத்தகைய கட்டத்தில்
இந்தத் தேர்தலில்
தமிழ்த் தரப்பினர்
எத்தகைய பங்கை
ஆற்ற வேண்டுமென்பதை
விவேகமாகத் தீர்மானிக்க வேண்டும்.

ஆளுமை மிக்க
அரசியற் கட்சியொன்று
தமிழ்த் தரப்பின் சார்பில்
பிரதிநிதித்துவம் வகித்தால்தான்
அரசியல் சூழ்நிலைகளைச்
சரிவரக் கையாளவும்
இனப்பிரச்சனைக்கான
அரசியல் தீர்வில்
ஆக்கபூர்வமான
மாற்றங்களை நிர்ப்பந்திக்கவும்
முடியலாம்.

இதேவேளை
கையாலாகாத அரசியல்வாதிகள்
புலிகளின் போராட்டத்தைத்
தமது வெற்றிக்காகப்
பயன்படுத்திக் கொள்ள முனைவது
அபத்தமான ஒன்று.

ஏதோ, புலிகள் போராடுவது
தம்மைப் பாராளுமன்றம் அனுப்பத்தான்
என்பதுபோல
இவர்களின் பிரசாரங்கள்
பொய் முழக்கம் செய்கின்றன.

புலிகளோ தாம்
எந்தக் கட்சியையும்
ஆதரிக்கவில்லையென்றும்
தமது பெயரை எவரும்
தேர்தலுக்குப் பயன்படுத்தக்
கூடாதென்றும்
அழுத்தம் திருத்தமாக
அறிவித்து விட்டார்கள்.
அதன்பின்னரும்
தாம் என்னத்தைச்
செய்யப் போகிறார்கள்
என்று தெரிவிக்காமல்
புலிகளின் அபிலாஷைகளை
ஆதரிக்கிறோம் என்றுமட்டும்
பிரசாரத்துக்காக முழக்கமிடுவது
முட்டாள் தனம்.

ஏனெனில்,
தமிழ் மக்களின் அபிலாஷைகளை
ஈட்டிக் கொடுக்கத்தான்
புலிகள் போராடுவதாகக்
கூறிக்கொள்ளும்போது
புலிகளின் அபிலாஷைகளைத்
தீர்த்துவைக்க
இவர்கள் பாராளுமன்றம்
செல்லப்போவதாகக் கூறுவது
அதிகப் பிரசங்கித்தனமானது
அல்லவா?
மேலும்,
போராடுபவர்கள்
தமது நியாயங்களைத்
தாமே கூறிக்கொள்ளத்
தகுதியுள்ளவர்கள்.

தேர்தலில் குதித்துள்ளவர்கள்
தமது மார்க்கத்தையும்
தாம் என்ன செய்யப் போகிறார்கள்
என்பதை மட்டும்
தெளிவுபடுத்துவதை விடுத்து
புலிகளின் போராட்டத்தை
பிரசாரமாக்குவதையே
வழியாகக் கொண்டால்
தமிழ் மக்கள்
ஏமாளிகளல்ல.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஆன்மீகம்



## கடவுள் உருவமா? அருவமா?

கடவுளை உருவம் அல்லது அருவம் என்று சொல்வது நாம்தான்! ஆனால் இறைவன் இந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டவர்! அவரை நாம் வார்த்தைகளின் வரம்புக்குக் கொண்டுவர முடியாது.

கரையில்லா ஒரு பரந்த சமுத்திரத்தை நினைத்துக் கொள்ளுங்கள். அதுதான் பரம்பொருள். அந்த சமுத்திரத்தில் ஆங்காங்கு குளிர் ஏற்பட்டு பனிக்கட்டிகள் உருவாகும். அவை குளிர்ச்சிக்கு ஏற்ப சின்னது, பெரியது என்று பல வடிவங்களாக உருவாகும். அவை தான் நாம் வணங்கும் உருவக் கடவுள்கள்.

இந்த உருவங்கள் கரைந்தால் எல்லாமே சமுத்திரத்தில் கலந்து அருவம் ஆகிவிடும். நம் மனதில் நாம் உருவாக்கும் பக்தி என்ற குளிருக்கு ஏற்ப இறைவன் அதற்குத் தகுந்த வடிவம் எடுப்பார். கடவுளை இப்படி நினைத்துப் பாருங்கள்! எதற்கும் பிடிபடாத, உட்படாத ஒரு வெறுமையை நினைப்பது போல இருக்கும்.

எனவே மனித மனம் மனித வரம்புக்குள், பரம்பொருளை உட்படுத்தி உருவமாகத் தொழுகிறது. அதனால் வடிவங்கள் தேவை. வடிவமுள்ளதில் வரும் பகதி பின்னர் தானாகவே வடிவமற்றதில் போய்விடும். பரம்பொருள் என்பதைச் சற்றே எண்ணிப் பாருங்கள். எங்கும் நிறைந்தது, எந்த உருவமும் அற்றது, குணம், கற்பனை போன்ற எதற்கும் அப்பாற்பட்டது.

தொகுப்பு: ரீ. குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

## குழப்பம் விளைவிக்காதீர்கள்

இன்றைய நவீன காலத்தில் இன வன்முறைகளும் சாதிக் கலவரங்களும் இடம்பெற்றுக் கொண்டிருப்பது மனித குலத்திற்கே மாபெரும் அவமானத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஏதோ ஒரு காரணத்திற்காக நம்மிடையே சண்டைகள் பிளவுகள் ஏற்படலாம். ஆனால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்துவதற்கு முன் தீர்த்து வைக்கப்படவேண்டும். சமாதான உடன்படிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இனங்கள் ஒற்றுமையாக வாழ அரும்பாடுபடவேண்டும். அதைவிடுத்து குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுபோன்று மீண்டும் மீண்டும் குழப்பங்களை விளைவித்து, அதில் சுகம் காண ஒருபோதும் நினைக்கக்கூடாது. குழப்பத்தை விளைவிப்பது முனாபிக்கான செயல் என்பதை மறக்கவும் கூடாது!

மனிதர்களே பூமியில்-சமாதானமும்,அமைதியும் உண்டாகி அது சீர்திருத்தமான பின்னர், அதில் குழப்பம் விளைவிக்காதீர்கள்; இரட்சகனுடைய தண்டனைக்குப்) பயந்து அவனுடைய அருளை ஆசித்தும் அவனிடம் பிரார்த்தனை செய்துகொண்டிருங்கள். நிச்சயமாக குழப்பம் விளைவிப்போருக்கு அல்லாஹ்வின் அருள், நன்மை கிடைப்பதில்லை. *(அல்குர்ஆன்)*

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## நீதிமான்


நீதிமான் என்றால் குற்றமற்றவன் என்பதாகும். "நான் நற்காரியங்களை செய்கிறேன். புண்ணிய கருமங்களில் ஈடுபடுகின்றேன், ஆலயக் கருமங்களில், காணிக்கை கொடுப்பதில் ஒழுங்காக இருக்கிறேன். எனவே என்னுடைய குற்றங்கள் மீறுதல்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றது நான் நீதிமானாக இருக்கிறேன்!". என்ற எண்ணம் கொண்டவர்களைக் காணுகின்றோம்.

"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை, உணர்வுள்ளவன் இல்லை, தேவனைத் தேடுகிறவன் இல்லை, எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை", என்று வேதன் கூறுகிறது.

நாம் பாவ சுபாவிகளாக இருக்கின்ற படியால், எந்த நன்மையான காரியத்தையும், எந்த சூழ்நிலையிலும், எந்த அளவில் செய்தாலும் நம்முடைய பாவங்களுக்கோ, மீறுதல்களுக்கோ ஈடாக்க முடியாது. ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ரோமர் 4:3) நாம் செய்யும் நற்காரியங்கள் யாவும் கடவுளுடைய செயல்களாய் இருக்கின்றது, என்று விசுவாசிக்கும் போது, நாமும் நீதிமான்களாக்கப்படுகின்றோம். ஆபிரகாமை அவன் விசுவாசம் நீதிமானாக்கியது போல, நாமும் நீதிமான்களாக்கப்படுவதற்கு விசுவாசத்தில் உறுதியாக நிற்க முயலுவோமாக.

சகோ. எஸ். யேசுநாதன், மெதடிஸ்த ஆலயம், துறைநீலாவணை.


## கவிதைப் போட்டி இல.378



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 21.10.2000

கவிதைப் போட்டி இல.378
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.375



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### சின்னம்

புகை கக்கும்-
சிகரெட் சின்னத்திற்கு
வாக்களித்து விட்டு-
இலக்கத்துக்கு புள்ளியிட
வேட்பாளரைத் தேடிய போது
கிடைத்த தலை(வர்)கள்.

கு.ஸ்ரீராகவராஜன்-மீசாலை.

### தேவைதானா?

புனிதமானவர்களையும்
நேரம் பார்த்து
புதைகுழிக்குள் தள்ளும்
துரோகி என்பதை அறிந்தும்
இன்னும் உன்னை
இம்மண்ணில்
பூஜிப்பவர்கள் கோடி....!

செல்வி. ரி. சமலசுந்தரி-
எல்டப், பசறை.

### கொள்ளி

உயிரோடு கொள்ளி வைத்து
உயிரெடுத்த, தற்கொலை குண்டுதாரி, இனி
மாண்டவர் மண்டை ஓட்டோடு உடன்-
கட்டை ஏறவோ உளரீதியில் வருகிறான்.

கே.வி மகாலிங்கம்-நோர்வூட்.

### உலகசாதனை!

தேசமது சாதித்த உலகசாதனை
தேடியும் கிடையாத அரிய சோதனை
தேர்தலுக்கு தருதிகாணும் சான்றுகள்.
தேசமெங்கும் மனிதயின ஓடுகள்!

தயாளினி பரமசாமி-கரகம்பிட்டி,
தெஹிவளை.

### எதையென்று தேடுவேன்

சந்தேகத்தின் பேரில் பிடித்து
சென்ற என் அப்பா!
பல வருடம் கழிந்தும்
இருக்கிறாரா? இல்லையா?
என தெரிய வில்லை.
சந்தேகத்தை தீர்ப்பதற்கு
மண்டையோட்டுக் குவியலில்
தேடினேன்;
எல்லாம் தமிழர்களின் மண்டையோடு
அதில் எதையென்று தேடுவேன்.

வ. கலா-மட்டக்களப்பு.

### பீரங்கிகள் மட்டுமல்ல....

எம் உயிர் குடித்தழிப்பது
பீரங்கித் தாங்கிகளின்
பீரங்கிகள் மட்டுமல்ல...,
புகைபிடிக்கும்
'சிகரட்டு'க்களும் தான்!

சி. மதியழகன்-திக்கம்.

### அடையாளம்

புகை கொய்ததா?
போர் கொய்ததா?
அடையாளம் காட்ட
அமெரிக்கன் கம்பியூட்டர்
அவசியம் வேண்டும்!

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### ம(பி)டியில்

உயிரோடிருக்கும் போது
உறங்கினோம்!
போதையின் பிடியில்
உயிரற்றவர்களாய்
விழித்திருக்கிறோம்
புதைகுழியின் மடியில்!

எஸ்.எல்.எம். இர்ஷாத்-
அலவதுகொடை.

### பா(ல்)ழ்

நறுமணத்துடன் கூடிய
தூய வெள்ளை நிறத்தால்
உடையவனே...!
பசுத்தோல் போர்த்திய
புலி நீயா? இப்போதுதான்
தெரிகின்றது
உன் வைரம்....!

சி. சாந்திமதி-பசறை.

### விளம்பரப் பலகை

எதிர்கால மரணத்தை
லஞ்சமாய் வாங்கும்
இன்றைய வாலிபர்களின்
விளம்பரப்பலகை!

பதுளையூர் செல்வம்.

# வாசக[ர்]சாலை



## மூச்சு

அன்பின் முரசே!
ஞாயிறு தோறும் எம் கரங்களில்
வந்து
நல்லவற்றை அறிய வைத்து
நயமாக புரியவைத்து
தொண்டு செய்யும் உந்தன் சேவைதான்
என்றும்....
எமக்குத் தேவை.
முரசு 371ல் அத்தனை அம்சங்களும் அருமையப்பா!
அதில்...
அரசியல் பிழைப்புக்கு அடுத்த வேடம், 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' அத்தோடு 'செய்திச் சிதறல்', 'அதிரடி ஐயாத்துரை', 'தகவல் பெட்டி', 'நில் கவனி முன்னேறு' இதில் மனம் பற்றி அறிய முடிந்தது-நன்றி சிந்தியா அளிக்கும் ஒவ்வொரு பதில்களும் பிரமாதம். உந்தன் திருப்தியான மூச்சுக்கு,
எந்தன் பல கோடி சோபனங்கள்.

புதிய காத்தான்குடி, முஸம்மில், குவைத்.

இன்ப முரசே! என் இருவிழிகளும் பூத்திருக்கும் காரணத்தை நீ அறிவாயோ?
என் விழிகளின் எதிர்பார்ப்பு யாருக்காக என புரிவாயோ?
முரசே! நீ தான் என் மனசாட்சியின் திறப்பு; ஞாயத்தின் கதவு!
எனவே இருண்டுக் கிடக்கும் இவ்வுலகக்காட்டை
ஒளிர்க்க வந்த முரசே வாழ்க வளர்க.

எம்.பராசக்தி-பனாவத்தை.

என் இனிய முரசே!
நீ சுமந்து வரும் அனைத்தும் சுவையாக உள்ளன.
அதிலும் எனக்கு முரசு
கிடைத்தவுடன்
பக்கம் பன்னிரண்டைத்தான் புரட்டுவேன்
'நில் கவனி முன்னேறு' என்னை மிக மிக கவர்ந்துவிட்டது.

ஊட்டச்சத்து மிக்க உணவாகவே
அதை நான் கருதுகின்றேன்! உன்
சேவை மென்மேலும் வளர்ச்சியடைய
வாழ்த்துகின்றேன்.

ஏ.ராசேந்திரன்-தலைமன்னார்.

என் இனிய முரசே!
வியாழன் தோறும் உன் வரவை எதிர்பார்த்து ஏமாறாது என் கரம் வந்து சேரும் முரசே!
உனக்கு கோடி வந்தனங்கள்! உன்னில் என்னைக் கவர்ந்தவைகள் 'தேன் கிண்ணம்', 'அலசுவது ராஜதந்திரி', 'தொடர்கள்', 'சிறுகதைகள்', 'தகவல் பெட்டி', 'வாசகர் சாலை', 'கவிதைப்போட்டி' மொத்தத்தில் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. இலங்கை வாழ் மக்கள் மட்டுமன்றி கடல் கடந்து வாழ அனைத்து மக்களின் மனதைக் கொள்ளை கொண்ட அன்பு முரசு
உனக்குத்தான் எத்தனை சொந்தங்கள் உண்டு?
உலகெங்கும். இனமத பேதம் பாராது நீ என்றும் எங்களுடன் இணைந்திருக்க வேண்டும். புதிய புதிய வாசகர்கள் உனக்கு வருவதால் எங்களை என்றும் மறந்து விடாதே!
அதாவது எங்களுக்குக் கிடைக்காது நீ ஒரு போதும் பறந்து சென்று விடாதே. கடல் கடந்து நீ ஓர் வாரம் வராவிட்டால் எங்கள் உயிர் போய்விடும், நீ தொடர்ந்து வரவேண்டும் என்றும் நீ வாழ்க வளர்க என்று நாங்கள் வாழ்த்துகிறோம்.
இனிமையான உன் வரவும் உன் சேவையும் வளர எங்கள் பாராட்டுக்கள்.

ஜெஸ்மின் றமீஸ்-மருதமுனை 03.

தித்திக்க வைக்கும்
திகட்டாத முரசே!
நீ சுமந்துள்ள உனது
அங்கங்கள் அனைத்தும்
உன்னதம் வாய்ந்தவை.
உன்னை யாராலும் அசைக்கமுடியாது.
உன்னோடு போட்டி போட எதுவுமில்லை.
முரசே!
உன் வரவு என்றும் நிலைத்து
ஆயுசு கூடி வாழ்ந்திட வாழ்த்துமிவள்.

கவிதா சாந்தலிங்கம்-ஏறாவூர் 05.

தங்கத் தேன் மழையாய் வாரத்தில் ஒரு முறையாய்- வந்து என் கரம் சேரும் முரசே!.உன் பல்சுவை அம்சங்கள் அனைத்தும் இனிமை. அதைவிட சிந்தியா பதில்,
'பாப்பா முரசு', 'இலக்கிய நயம்', 'தேன் கிண்ணம்', அனைத்தும் இனிமையிலும் இனிமை.
ஒப்பற்ற உன் சேவையை கார் பெற்ற தோகை போல் கருணை சேவைபடைக்கும் முரசென வாழி! வாழி என இவ்வையகம் உள்ளளவும் வாழ்த்துகிறேன் உன்னை.

எஸ்.இராமச்சந்திரன்-பலாங்கொடை.

அபிமான தினமுரசே.
வாரத்தில் வியாழக்கிழமை என்றதும் நினைவுவருவது தினமுரசு தான்.
'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அலசுவது இராஜதந்திரி'யும். நாட்டின் அரசியல், யுத்தம் பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து தகவல்களை அறியத்தருவதில் முரசு முதலிடம் பெறுகிறது. பல அம்சங்களை ஒன்று சேர்த்து தருவதையிட்டு முரசுக்கு எனது வாழ்த்துக்கள்!.

வே.சிவா-கிரான்.

என் அபிமான தினமுரசே!
உன்னுள் அடங்கும் அனைத்து ஆக்கங்களும் அருமை. முரசு 375ல் வெளிவந்த 'அறிமுகங்கள் அனுபவங்கள்' என்ற புதிய திரையுலக பார்வை விறுவிறுப்பாக உள்ளது 'காதம்பரி பாசு' அவர்களுக்கு எனது நன்றிகள், நீ மென்மேலும் உயர எனது நல்வாழ்த்துக்கள்!.

பதுளையூர் செல்வம்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266


### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# நீதி –நேர்மையாக தேர்தல் நடைபெறாவிட்டால்

# நிதி வழங்கும் நாடுகளால் பாதிப்பு ஏற்படலாம்?

**இம்முறை நடைபெறும் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் அதிக அளவில் இங்கு வந்துள்ளனர். ஐரோப்பிய ஒன்றியம் இரு மாதங்களுக்கு முன்னரே தனது குழுவினரில் சிலரை இங்கு அனுப்பி பூர்வாங்க ஆய்வுகளைச் செய்திருந்தது. தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெறாத பட்சத்தில் இந்நாட்டுக்கு பெருவாரியாக உதவிக்கரம் கொடுக்கும் நாடுகள் தங்களுடைய உதவிகளை நிறுத்திவிடக் கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.**

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு அதிகளவு சர்வதேச கண்காணிப்பாளர்களைக் கொண்ட நிலையில் இத்தடவை பொதுத் தேர்தல் இடம்பெறுகின்றது. வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், தேவையற்ற தலையீடுகளைத் தவிர்க்கும் விதத்தில் தேர்தல் திணைக்களம் கடுமையான நடைமுறைகளையும் அமுல்படுத்தியுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க விடுத்துள்ள அறிவிப்பில், வாக்களிப்புத் தினத்தில் காலை 7 மணிமுதல், மாலை 4 மணி வரை வாக்குச்சாவடிகள் இயங்கும் எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் ஆள்மாறாட்டம். மற்றும் போலிப்பத்திரங்கள், என்பவற்றைக் கண்டுபிடிக்க நவீன சாதனங்களும் இத்தடவை பயன்படுத்தப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரது அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள், தேர்தல் திணைக்களத்துக்கு முழு அளவில் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

பல்வேறு உள்நாட்டு ஸ்தாபனங்களும் தேர்தல்கள் கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட முன்வந்துள்ளன. ஆயினும் தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அவதானிகளுக்கே வாக்குச் சாவடிகளுக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. தேர்தல் முடிவுகள் வெளியானதும் குழப்பங்கள் ஏற்படுவதைத் தடுக்கும் விதத்தில் முப்படைகளும் நாடளாவிய ரீதியில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தலைக் கண்காணிக்க இங்கு வந்துள்ள குழுக்களில் ஐரோப்பிய ஒன்றியம் கணிசமான தொகையினரைக் கொண்ட குழு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. இக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர், பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் இலங்கை வந்து பலதரப்பட்ட மக்களையும் பிரமுகர்களையும் கண்டு கலந்துரையாடியுள்ளனர்.

இம்முறை பொதுத் தேர்தலில் முறைகேடுகள் ஏதாவது நடைபெறுமானால்- இந்நாட்டின் அலங்கோலங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமல்ல, உலகனைத்துக்குமே பறை சாற்றப்பட்டுவிடும். அது மாத்திரமல்லாமல் இந்த நாடுகளிலிருந்து இலங்கைக்குக் கிடைத்துவரும் பொருளாதார உதவிகளுக்கும் பங்கம் ஏற்படலாம். ஆகவே நடைபெறும் தேர்தல் நேர்மையாகவும் நீதியாகவும் நடைபெற வேண்டும் என்பதில் தலைவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

## யாழ் தேர்தல் களத்தில்...!

**பொ**துத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க்கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் மக்களிடம் வெறுப்புத்தன்மையையே உண்டாக்கியுள்ளார்கள். மக்களின் வாக்குகளைப் பிரித்து சின்னாபின்னமாக்குவதே பல கட்சிகளுடைய, நிலைப்பாடாக இருக்கின்றது.

யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரை இதுவரை இப்படியான ஒரு தேர்தலைக் காணவில்லையென்றே சொல்லலாம். தேர்தலுக்கான பிரசார வேலைகள் தொடங்கிய நாட்களில் இருந்து பிரசார வேலைகள் முடிந்த நாள்வரை ஒரு தமிழ்க் கட்சியை இன்னுமொரு கட்சி குறைகூறிய வண்ணமே தேர்தல் பிரசாரம் முடிவுற்றது.

தேர்தலில் வாக்களிப்பதற்காக 6,000,00 வாக்காளர்கள் இருந்தும், பலர் வாக்களிக்கும் நிலையில் இல்லை. தொடர்ச்சியான இடம்பெயர்வுகளையும் பல இழப்புக்களையும் நாளாந்தம் சந்தித்துக் கொண்டிருக்கும் மக்கள் தேர்தலில் எப்படி ஆர்வம் காட்ட முடியும்? இத்தேர்தலில் 1,90,000 ஆயிரம் மக்களே வாக்களிக்கும் நிலமையில் உள்ளார்கள். இப்போது ஒருபுறம் குடாநாட்டில் யுத்தம், மறுபுறம் தேர்தல், இப்படியான இக்கட்டான சூழலில் தமிழ்க்கட்சிகளுக்கோ சுயேச்சைக் குழுக்களுக்கோ மக்கள் முன் வந்து வாக்குக் கேட்க மனச்சாட்சி இல்லையா? என்றும் பலர் கேட்கின்றார்கள். இத்தேர்தலில் வன்செயல்கள் குறைவே. ஆனாலும் பிரசாரக் குத்தல்களே அளவுக்கு மீறிநின்றன. இதனால் அனைத்துக் கட்சிகளுடைய ஊழல்களும் மக்கள் மத்தியில் அம்பலமாகியுள்ளன. அதனால் மக்கள் குழப்ப நிலையில் உள்ளார்கள். அத்துடன் யாழ்மாவட்டத்தில் சங்கிலியன் படையினரால் கைப்பற்றி எரிக்கப்பட்ட அல்லது அபகரிக்கப்பட்ட வாக்காளர் அட்டை மூலம் கள்ளவாக்குப் போட நடைபெறும் முயற்சிகளைத் தடுக்க தேர்தல் அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார். ■

## வடகிழக்கில் செல்வாக்குப் பெற்ற தமிழ்த் தலைவர் டக்ளஸ் தேவானந்தா!

## அபிப்பிராய வாக்கெடுப்பு தெரிவிக்கும் கருத்து

**அ**டுத்த பாராளுமன்றத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கப் போகும் கட்சி பொது ஜன ஐக்கிய முன்னணியே என்று அண்மையில் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கொடுப்புக்களில் இருந்து தெரியவருகிறது. அரசியல், பொருளாதார ஆய்வு மையம் அண்மையில் மேற்கொண்ட அபிப்பிராய வாக்கொடுப்பிலும் பொது ஜன முன்னணியே பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடமேறும் என்று தெரியவருகிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் செல்வாக்கு பெற்ற தமிழ்த் தலைவர் யார் என்று விடுக்கப்பட்ட வினாவுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களே என்றும் அக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளி மக்களின் வாக்குகள் யாருக்கு அதிகமாகக் கிடைக்கும் என்ற வினாவுக்கு திரு.ஆறுமுகன் தொண்டமான் அவர்களுக்கே அதிக வாக்குகள் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கால கட்டத்தில், தேர்தலில் வாக்களிப்பு எவ்வாறு அமையப்போகிறது என்பதையிட்டு முன்கூட்டியே கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகள் நடைபெறுவது பெரும்பாலும் எல்லாநாடுகளிலும் இடம் பெற்று வருகின்றன. இங்கும் இதுவரை பல்வேறு குழுக்கள் இத்தகைய தேர்தலுக்கு முன்னான கருத்துக் கணிப்புக்களை நடத்தி முடிவுகளை வெளியிட்டு வருகின்றன. இத்தகைய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகள் குறிப்பிட்ட சில இடங்களைத் தெரிவு செய்து, ஆங்காங்கேயுள்ள சிலரிடம் கேள்விக் கொத்துகளைத் தொடுத்து அவர்கள் கொடுக்கும் அபிப்பிராயங்களைத் திரட்டி வெளியிட்டு வருகின்றன.

இதுவரை இங்கு நடைபெற்று வந்த அபிப்பிராய வாக்கெடுப்பின் படி, 11வது பாராளுமன்றத்திலும் ஆளுங்கட்சியான பொது ஜன முன்னணியே பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் என்று தெரிவிக்கப் பட்டு வந்துள்ளது.

பொது ஜன முன்னணியே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளப் போகிறது என்று மக்கள் அபிப்பிராயம் கூறுவதற்கான காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால், இன்றுள்ள அரசியல் யாப்பு இந்த நாட்டின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கப் போவதில்லை; ஆகவே இன்றுள்ள அரசியல் யாப்பினை மாற்றியமைக்க வேண்டும்; இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களுக்கு உள்ள பிரச்சனைகளைத் தீர்த்து வைத்து, அவர்களுடைய அபிலாஷைகளையும் தீர்த்து வைக்க வேண்டும் என்று துணிவுடன் பொது ஜன முன்னணி நடவடிக்கை எடுத்து வருவதே முழுமுதற் காரணம் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

அரசியல் பொருளாதார ஆய்வு நிலையம் பரவலாக ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பினை அண்மையில் எடுத்திருந்தது. இதில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் செல்வாக்குள்ள தமிழ்த்தலைவர் யார்? என்றோர் கேள்வி கேட்கப்பட்டிருந்தது. இதற்கு திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கே முதலிடம் தரப்பட்டுள்ளது; இவருக்கு 26 சதவீதமானவரும் திரு.ஜோசப் பரராசசிங்கத்திற்கு 22 சதவீதமானோரும், திரு.வரதராஜப் பெருமாளுக்கு 20 சதவீதமானோரும் திரு. த.சித்தார்த்தனுக்கு 14 சதவீதமானோரும் தங்கள் வாக்குளை அளித்துள்ளனர். எஞ்சிய 18 சதவீதமானோர் எதுவித அபிப்பிராயத்தையும் தர மறுத்துவிட்டனர். ■

## வன்னி செல்ல அனுமதி மறுப்பு

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு முடிவு

"**பு**லிகளின் பிடியிலுள்ள தமது உறவினர்களின் விடுதலை தொடர்பாக வன்னி சென்று புலிகள் இயக்கத்தினரைச் சந்திப்பதற்கு நாம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியிருந்தோம். எங்களது அமைப்பிலுள்ள ஒருவர் வன்னி செல்வதற்கு ஜனாதிபதியும் அனுமதி தருவதாக எமக்கு ஒப்புதல் அளித்திருந்தார். எனினும் இப்பொழுது எதுவித காரணமுமின்றி எமக்கு வழங்கவேண்டிய அனுமதி வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எம்மைக் கருத்திலெடுக்காது எமக்கு வழங்கப்பட்ட உறுதி மொழியையும் மறந்துவிட்டு வேறு நபர்களுக்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருப்பது எம்மை அவமானப்படுத்தும் செயலாகும். அதனை எதிர்த்து எமது அமைப்பு போராட்டம் நடாத்தத் தீர்மானித்துள்ளது," என்று காணாமல்போன படைவீரர்களின் உறவினர் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்புவுடன் தம்மை வந்து சந்திக்க புலிகள் அனுமதித்திருந்தனர். ஆனால் அப்போது மோதல் நடப்பதைக் காரணம் காட்டி பாதுகாப்பு அமைச்சு எமது வன்னிப் பயணத்தைக் தடுத்திருந்தது.

"மீண்டும் நாம் அனுமதி கோரியபோது தற்சமயம் வடக்கில் தொடங்கியுள்ள மோதல் காரணமாக எமது வேண்டுகோளை புலிகள் பிற்போட்டுள்ளனர்!" என்றும் அவர் தெரிவித்தார். ■

## கிழக்கில் இடம்பெற்ற தாக்குதல்கள்

**க**டந்த வாரம் கிழக்கில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் பலர் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு-பட்டிருப்பில் துணைப் படையினரான றாசிக் குழுவினர் இருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். வரதர் அணிக்காகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் சுடப்பட்டிருக்கிறார்கள். புலிகளின் பிஸ்டல் குழுவினர் பதுங்கியிருந்து தாக்கிய போதே இவர்கள் பலியானார்கள்.

கொல்லப்பட்டவர்கள் இருவரும் வி.நேசதுரை (35), எம்.ஜெயராசா (30) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தினிடையே அகப்பட்ட பொதுமகன் ஒருவரும் காயப்பட்டார்.

**சி**த்தாண்டிப் பகுதியில் ந.நல்லசேகரம் (33) என்ற குடும்பஸ்தர் ஒருவர் துணைப்படையினரான றாசிக் குழுவினரால் கொல்லப் பட்டதாக ஊர் மக்கள் தெரிவிக்கிறார்கள். வயல் வேலைக்குச் சென்று இவர் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் பதுங்கியிருந்தவர்கள் சுட்டதில் அவர் பலியானார்.

**அ**ம்பாறை-மத்திய முகாம் மூன்றாம் கொலனிப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் உலாவந்த பொலிஸ் வண்டி மறைந்திருந்த புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. இச்சம்பவத்தில் பொலிஸார் இருவர் பலியாகினர். மேலும் ஆறு பொலிஸாரும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர். சம்பவத்தில் புலி உறுப்பினர் ஒருவரும் பலியானார். அவரிடமிருந்து ரி-56 ரகத் துப்பாக்கியும் மீட்கப்பட்டது.

**தி**ருமலை-ஈச்சிலம்பற்று பூநகரைச் சேர்ந்த ஏழு தமிழர்கள் வெட்டிக் கொல்லப் பட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்ட சமயம் அவர்கள் நெல் அறுவடைக் கூலி வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஈச்சிலம்பற்றுக்குச் சமீபத்தில் உள்ள மஹிந்த புர சிங்களக் கிராமத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த ஊர்காவலர் இருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் ஆறு ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குவர். திருமதி.கி.தயாவதி (30), த.கனகரெத்தினம் (56), சி.நல்லதம்பி (56), த.காளிதாஸ் (36), எஸ்.இராசன் (35), ந.அருளாநந்தம் (18) ஆகியோரே கொல்லப்பட்டோராவர்.

## பலத்த மழையும் வன்முறையும்

## பிரசாரம் பின்னடைவு!

**பொ**துத்தேர்தல் பிரசாரம் தொடங்கிய நாளிலிருந்து நாடு பூராவும் பருவமழையும் அதிகரித்திருந்தது. அத்துடன் தேர்தல் வன்முறைகளும் தலை விரித்தாடத் துவங்கி விட்டன.

நாடு முழுவதும் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக பிரசார நடவடிக்கைகளில் பெரும் பின்னடைவை வேட்பாளர்கள் சந்தித்தார்கள். அத்துடன் நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட வன்முறைகளும் பதில் வன்முறைகளும் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையையே ஏற்படுத்தியிருந்தன.

## இறுதிநேர வாக்கு வேட்டைக்கு

## வேட்பாளர் போடும் வேடங்கள்

**தே**ர்தலில் மக்களின் வாக்குகளைத் தம்வசப்படுத்திக் கொள்வது எங்ஙனம் என்று ஒவ்வொரு வேட்பாளரும் தம்மாலான சகல முயற்சிகளையும் எடுத்து வந்தனர்.

பல ஆண்டுகளாக உதாசீனப்படுத்தப்பட்டு வந்த மக்களின் பல கோரிக்கைகளும் ஆளும் தரப்பாரின் திடீர் கரிசனைக்கு உள்ளாகியுள்ளன. தேவையானபோது செய்யப்படாத பல முக்கிய வேலைத்திட்டங்களையும் உடனடியாகச் செய்யத் துவங்கியுள்ளனர். இதேவேளை வழமையான பருவப்பெயர்ச்சி மழைக்காலத்தில் நிறுத்தி வைக்கப்படும் வேலைகள் கூட மக்களின் கவனத்தைத் திருப்புவதற்காக திடீரென ஆரம்பிக்கப்பட்டன. இதனால் மக்களை விட அரசியல்வாதிகளும் கொந்தராத்துக்காரர்களும், மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அதிகாரிகளுமே அதிகளவு நம்மையடைந்துள்ளனர்.

புனர்வாழ்வு நிவாரணம் என்று கூறி சட்டி, பானை, பாய், தலையணை, பீங்கான் என்பனவும் வழங்கப்பட்டன. உயிர்களையும் உடமைகளையும் இழந்து 10 வருடங்களாகக் காத்திருப்போருக்கு வழங்கப்பட்ட இத்தகைய இழப்பீடுகள் அவர்களைக் கேலிக்குள்ளாக்குவது மாதிரி என்றும் பேசிக்கொள்ளப்பட்டது. அது போதாக் குறைக்கு பாதிக்கப்படாத மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

காலஞ்சென்ற பெரியவர்களின் படங்களுடன் தங்களையும் இணைத்தும், அவர்களின் பேச்சுக்கள் அடங்கிய ஒலி நாடாக்களைப் பயன்படுத்தியும் மக்களை மயக்க முயற்சித்தார்கள்.

மரண வீடுகளுக்கும், மங்கள வீடுகளுக்கும், சமய விழாக்களுக்கும் அரசியல்வாதிகள் தவறாது சென்றனர். இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பற்றி வாய்கிழியப் பேசினர்.

ஆனால் தமது திருவிளையாடல்கள் பயனளித்ததா? என்பதை அறிய இனி ஆவலோடு இருப்பர். அதன் பிறகு மக்களும் மறக்கப்பட்டு விடுவார்கள்.

## கண்டியில் தேர்தல் போட்டாபோட்டி!

(கண்டி நிருபர்)

**க**ண்டி மாவட்டத்தில் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் போட்டா போட்டியுடன் நடத்திய சுவரொட்டிப் போட்டிகள் தொடர்பாக பலர் காயங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உட்படுத்தப் பட்டனர்.

தேர்தல் முடியும் தறுவாயில் இந்தச் சம்பவங்கள் உச்ச கட்டத்தை அடைந்தன. மத்திய மாகாண சுகாதார அமைச்சர் திரு.மகிந்தானந்த அலுத்கமகே கடந்த செவ்வாய் பின்னேரம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கண்டி பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

காளான்கள் போன்று உடனடியாக ஏற்படுத்தப்படும் தேர்தல் கூட்டம் காரணமாக கண்டி நகர் பட்டாசுகளால் அதிர்ந்தது.

முஸ்லிம் காங்கிரஸின் மடவளை உடுநுவரை அலுவலகங்கள் குண்டு வீச்சுக்கு இலக்காகின. வன்முறைச் சம்பவங்கள் பல பொலிஸ்நிலையங்களில் பதியப்பட்டுள்ளன. ■

## ஐ.தே.க. –புலிகள் ஒப்பந்தத்தை எதிர்த்த

## பிக்குமாருக்கு ஜே.பி. பட்டம்!

**ஐ**க்கிய தேசியக் கட்சியும் புலிகளும் இரகசிய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதாக சமீபத்தில் பிரதம மந்திரியால் ஒரு 'புரளி' கிளப்பிவிடப்பட்டிருந்தது.

இதைக் கேள்வியுற்ற 118 பௌத்த பிக்குகள் ஐக்கிய தேசியக் கட்சி மீது சீற்றங் கொண்டு கிளர்ந்தெழுந்துவிட்டார்கள். புலிகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் செய்துள்ளதாகக் கூறப்படும் இரகசிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கண்டித்து பௌத்த பிக்குகள் அடங்கிய குழு ஒன்று ஏக மனதாகத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

பௌத்த மதத்தையும், நாட்டின் சிங்கள மக்களையும் காட்டிக் கொடுக்கும் தீர்மானத்திற்கெதிராக அனைவரும் ஏகோபித்த குரலில் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்றும் கோஷமெழுப்பப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிய 118 பிக்குகளுக்கும் சமாதான நீதவான் பட்டங்கள் வழங்கப்பட்டன. ■

## ஹிஸ்புல்லாவுக்கு மற்றொரு பாதுகாப்புக்கார்!

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் அடுத்தடுத்து விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளான தபால் தந்தி தொலைத் தொடர்புகள் ஊடகத்துறைப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வுக்குத் தற்சமயம் தீவிர பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.

வெளிநடமாட்டங்களையும், அரசியல் வைபவங்களையும், ஏனைய வழமையான நிகழ்ச்சிகளையும் அமைச்சர் தவிர்த்துள்ள, அதேவேளை சற்று ஒதுங்கியும் காணப் படுகிறார்.

இதேவேளை ஏற்கெனவே ஜனாதிபதியால் அமைச்சருக்கு வழங்கப்பட்ட குண்டு துளைக்காத கார் இரு தடைவைகள் தாக்குதலைச் சந்தித்திருந்தது. இதனால் காரின் பின்பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட அந்தக் கார் அமைச்சரிடமிருந்து மீளப் பெறப்பட்டு அதற்குப் பதிலாக மற்றொரு குண்டு துளைக்காத கார் ஜனாதிபதியால் அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ■

## வெடிவிபத்தில் மூன்று புலிகள் பலி!

**த**மது தளம் ஒன்றில் ஏற்பட்ட தற்செயல் வெடிவிபத்தில் புலி இயக்க உறுப்பினர்கள் மூவர் பலியாகியுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

இச்சம்பவம் கடந்த வாரம் வன்னியில் இடம் பெற்றுள்ளது. கொல்லப்பட்டோரில் இரண்டாம் லெப்டினன்ட் தரத்திலுள்ள இரு ஆண் புலி உறுப்பினர்களும், ஒரு பெண்புலிப் போராளியும் அடங்குவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ■

## பொலிஸ்காரர் கட்டிப் புரண்டு

## மல்லுக் கட்டி மாண்டார்

**ம**றைந்திருந்த புலி உறுப்பினர் சிவிலுடையில் கடமை முடிந்து வந்த பொலிஸ்காரரைத் தாக்க முற்பட்ட போது, பொலிஸ்காரரும் புலி உறுப்பினருடன் கட்டிப் புரண்டு மல்லுக்கட்டினார்.

சிறிது நேர மல்லுக்கட்டலின் பின் புலி உறுப்பினர் பிஸ்டலை எடுத்து சுட்டார். பொலிஸ்காரரர் முழங்காலில் காயப்பட்ட போதும் தப்பிச் சிறிது தூரம் ஓடினார். அங்கு மறைந்திருந்த மற்றொரு புலி உறுப்பினர் அவரைச் சுட்டுக் கொன்றார்.

கொல்லப்பட்டவர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஏ.அப்துல் றஸாக் என்பவராகும். பொலிஸ் கடமை முடியும் போது அவர் ஓட்டோ வண்டியில் தொழில் புரிவது வழக்கம். அவ்வாறு ஓட்டோ வண்டியில் சீமெந்து ஏற்றிச் செல்லும் போதே இச்சம்பவம் நிகழ்ந்தது. கடந்த 06ம் திகதி மாலை 6 மணிக்கு மட்டக்களப்பு-ஆறுமுகத்தான்குடியிருப்பில் இச்சம்பவம் நிகழ்ந்தது. ■

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் அனுஜன் 14.10.2000

மட்டுவில் சாவகச்சேரியைச் சேர்ந்த தாமோதரன்-வினோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அனுஜன் தனது முதலாவது பிறந்தநாளை 14.10.2000 அன்று GERMANY SINSHEEM நகரில் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, வவுனியாவிலிருக்கும் அப்பப்பா, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், கிளிநொச்சியிலிருக்கும் அம்மம்மா, டென்மார்க்கிலிருக்கும் பெரியப்பா, பெரியம்மா அண்ணன், சுவிஸிலிருக்கும் பெரியப்பா, பெரியம்மா, ஜெர்மனியிலிருக்கும் பெரியமாமா, லண்டனிலிருக்கும் சின்னமாமா, கிளிநொச்சியிலிருக்கும் பெரியம்மா, சித்தி, குட்டிமாமா மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனுஜன் குட்டியை நல்லூர் கந்தன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : கருணா-கொழும்பு .077-341344

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் கேசவன் 15.10.2000

புலோப்பளை பளையைச் சேர்ந்த புவனேஸ்வரன்-லக்சுமிதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கேசவன் தனது முதலாவது பிறந்தநாளை கனடாவில் ரொறன்ரோவில் உள்ள தமது இல்லத்தில் 15.10.2000 வெள்ளிக்கிழமை வெகுவிமர்சையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா(கனடா), கொழும்பில் உள்ள அப்பம்மா, கனடாவில் இருக்கும் அம்மம்மா, சுவிஸிசில் உள்ள பெரியப்பா-பெரியம்மா, இலங்கையில் உள்ள பெரியத்தை-மாமா, தேவியத்தை-மாமா, கனடாவில் உள்ள யோகுமாமா-மாமி, லண்டனில் உள்ள சித்தப்பா-சித்தி, இத்தாலியில் உள்ள குஞ்சு அத்தை-மாமா, ஜேர்மனியில் உள்ள கலா அத்தை-மாமா, ஃபிரான்ஸில் உள்ள கோமளா அத்தை-மாமா, லண்டனில் உள்ள டயா அத்தை-மாமா, கொழும்பில் உள்ள குட்டி அத்தை, இந்தியாவில் உள்ள மாமா-மாமி, கொழும்பில் உள்ள புனிதச் சித்தி-சித்தப்பா, கனடாவில் உள்ள குட்டிமாமா-குட்டிசித்தி-சித்தப்பா, மச்சான்மார்களான ரூபன், திபா, திலக்சன், பார்த்தி, வித்தி, அபிராம், அனோயன், ஆதிசன், ஈஸ்வரன், பதஞ்சலிராஜ், மச்சாள்மார்களான வதனா, நித்தியா, குகா, கனுஷா, கேமா, அபிதா, நிசா, நிலா, நிதா, ஆதிசா, பிரதுஜா, அண்ணாமார்களான ஜனார்தன், கிரிசார்தன், கபிலன், சேந்தன், அக்காமார்களான சுஜிதா, வஜிதா, லதுஷா, தனா, விதுர்சா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரை பளை அறத்தி அம்பாள் துணை கொண்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறோம்.

தகவல் : (டெய்சி குட்டிஅத்தை) கொழும்பு.

## விளம்பரப் பகுதி




### மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறநத திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ∴பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831


## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19
08
1933



மறைவு
30
09
1997

### இராசசாமி கனகசபாபதி

உங்கள் பாசப் பிணைப்பில் திழைத்தோம் அன்று!
உங்கள் அரவணைப்பை இழந்து தவிக்கின்றோம்
இன்று!
ஆண்டு மூன்றாகிடினும் நீங்காது
உங்கள் நினைவுகள்.

துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப் பிள்ளைகள்

143/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: முரளி (இலண்டன்)


உலகப் புகழ்பெற்ற
## எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984



### கலை அலங்கார வகுப்புக்கள்

- ★ சிகை அலங்காரம்
- ★ அழகுக்கலை
- ★ மணப்பெண் அலங்காரம்
- ★ 4 மாத கற்கைநெறி

Facial Bleaching முடிவெட்டுதல் போன்றவைகளையும் செய்து கொள்ள முடியும்.
வகுப்புக்கள் வார, வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

**ஆரம்பம்: விரைவில்**
சான்றிதழ்கள் வழங்கப்படும்
FASNAZ BEAUTY SALON

142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை. கொழும்பு-06. தொலைபேசி: 589457

### மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY
அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஒக்டோபர் 22 முதல் 28 வரை**
DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.


**கல்முனையில் ஒக்டோபர் 07, 08 திகதிகள்.**
T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் திகதிகள் அறிவிக்கப்படும்.**
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு :
RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
05
12
1928



உதிர்வு
24
09
1999

திதி : 12.10.2000

### அமரர் விசுவநாதர் சிவகுருநாதன்

(ஓய்வு பெற்ற அதிபர்) (செல்லர்)

எங்கள் அன்புத் தெய்வமே
எமக்கு அன்புடன் அறிவை புகட்டி
கண்ணை இமை காப்பது போல
என்றும் எமது நல்வாழ்வுக்கு வழிகாட்டினீர்கள்.
ஓர் ஆண்டு ஒருயுகமென கழிந்ததே
ஊழிக்காலம் வரை உங்கள் நினைவலைகள்,
எங்கள் மனங்களில் மறவாதிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: திருமதி. சிவகுருநாதன்

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10
03
1936



மறைவு
05
10
1998

### கந்தசாமி இரத்தினம்

அம்மா நீ மறைந்தாலும்
எம் மனதை விட்டு மறையவில்லை!
பார்க்குமிடமெல்லாம் உன்னுருவம் தாயே
நீக்கமற நிறைந்திருக்கும்!
பிரிந்து சென்று இருவருடங்கள் ஆனாலும் தாயே!
பரம் பொருளாய் ஆன உன்னை
சிரம்தாழ்த்தி வணங்குகிறோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
*பாசமிகு மகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்.*
*சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்.*

தகவல்: வினோத்-இலண்டன்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கடைசி நேரக் கருத்துக் கணிப்பு

## தமிழ்க் கட்சிகளின் இறுதிநிலை!

இந்த வார முரசு தேர்தல் குறித்து முன்னதாகவே வெளிவருவதால் தேர்தல் பற்றிய இறுதித் தருணக் கருத்துக் கணிப்பொன்றை நாம் ஆராயக்கூடியதாக உள்ளது. அதேவேளை இவ்வாரத்துள் தேர்தல் முடிந்து ஆட்சி பீடமேறப் போவது யாரெனவும் முக்கியமாகத் தமிழ்க் கட்சிகளில் எது முன்னணி வகிக்கப் போகிறது எனவும் எந்தெந்தக் கட்சிகள் பாராளுமன்ற ஆசனங்களைப் பெறப் போகின்றன, எவையெவை மண்கவ்வப் போகின்றன என்பதையும் நாம் கண்டு கொள்ளப் போகிறோம்.

இந்தத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் மிக உற்சாகமாகக் கலந்துகொண்டன. ஒரு தொகையான சுயேச்சைக் குழுக்களும் கலந்து கொண்டன. இவையாவும் ஏதோ ஒரு விதத்தில் தமக்கு பாராளுமன்ற ஆசனங்கள் கிடைக்கும் என்று நம்பிக்கைக் கொண்டிருந்தன.

ஒரு குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே ஒவ்வொரு மாவட்டத்துக்குமாக ஒதுக்கப் பட்டுள்ளன. ஆயினும் இத்தனை தொகையான கட்சிகளும் குழுக்களும் எந்த நம்பிக்கையில் இத் தேர்தலில் குதித்தன என்பது வியப்புக்குரியதாக இருக்கிறது. எனினும் முன்னெப்போதும் இல்லாதவாறு இவ்வளவு தொகையாக அரசியல் அமைப்புகள் ஒரு ஜனநாயக வழி முறைக்கு முனைவது மறுபுறத்தில்-இப்போது இவ் வழிமுறைகுறித்த என்ன நம்பிக்கை தமிழ்த்தரப்பில் உதித்துள்ளது என்ற கேள்வியையும் கூடவே எழுப்பிவிடுகிறது.

ஒருபுறம் சூடுபறக்கும் யுத்தம் கழுத்துக்கு அருகே நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே அருகே தேர்தலுக்காக வரிந்து கட்டிக் கொண்ட பிரசாரத்தில் இத்தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் இறங்கமுடியுமாக இருப்பதும் ஆச்சரியகரமானதாக உள்ளது. இந் நாட்டின் ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கை இழந்த தன் விளைவாகவே யுத்தம் நடைபெறுகிறது. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்ற முடிவினடிப் படையில் இப்போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு தேர்தலில் குதித்திருந்த பல தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தைத் தமது தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நப்பாசை கொண்டிருந்தது வேடிக்கையானது.

எவரொருவர் இந்த ஜனநாயக வழிமுறைகளென இங்கு முன்னெடுக்கப்படும் இப் பாராளுமன்ற வழிமுறைகளில் நம்பிக்கை இல்லையென முடிவுகட்டி ஆயுதப் போராட்டத்தில் குதித்துள்ளாரோ அவரது போராட்டத்தையே பயன்படுத்தி, தாம் அவர் நிராகரித்த அதே பாராளுமன்ற வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இவர்கள் எண்ணமிட்டதுதான் மிக விஷமத்தனமானது.

இவர்களது கணிப்பின்படி, தாம் புலிகளை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டு தேர்தலில் நின்றால் புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் தம்மை ஆதரிப்பார்கள் என்பது எண்ணம். அத்தோடு தம்மை ஆதரிக்காவிட்டால் வேறு யாராவது பாராளுமன்றம் சென்று விடுவார்கள் என்று மிரட்டி புலிகள் தம்மைத் தான் ஆதரிக்க வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தத்தை அவர்கள் மீது சுமத்தலாமெனவும் கருதினார்கள்.

இந்தத் தந்திரத்தைக் கையாள விழைந்த முக்கிய கட்சிகள் இரண்டு. ஒன்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். மற்றையது தமிழர் விடுதலைக் கூட்டணி. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இத்தகைய தந்திரத்தை கிழக்கு மாகாணத்திலேயே அதிகம் பயன்படுத்த விளைந்தனர். வடமாகாணத்தில் இது செல்லுபடியற்ற விடயமாக இருந்தது. முக்கிய காரணம், அங்கு கூட்டணியின் இரு யாழ் மாநகரசபை மேயர்கள் அடுத்தடுத்து புலிகளால் படுகொலை செய்யப்பட்டிருக்கும் நிலையில் புலிகளின் ஆதரவு தமக்கே உள்ளதெனக் காட்டுவது சாத்தியமற்றது. இத்தகைய நிலை திருகோணமலையிலும் காணப்பட்டது. ஏனெனில் கூட்டணியின் மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அங்குதான் புலிகளால் கொலை செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் மட்டக்களப்பில் ஜோசெப் பரராசசிங்கத்தின் தலைமையிலான கூட்டணிக் குழுவினரால் இவ்வாறான ஒரு பிரசாரத்தை மேற்கொள்ள முடிந்தது. அவர்கள் தாம் புலிகளுடன் பேசிக்கொண்டுதான் தேர்தலில் ஈடுபட்டிருப்பதான ஒரு அபிப்பிராயத்தைப் பரப்ப முனைந்தனர்.

தமிழ்க் காங்கிரஸோ கூட்டணியைவிட மேலும் ஒருபடி முன்னே சென்றது. தம்மை புலிகள்தான் தேர்தலில் நிற்க வைத்ததான எண்ணத்தை அவர்கள் ஏற்படுத்த முற்பட்டனர். மேடைகளில் தாம் புலிகளின் அபிலாஷைகளை நூற்றுக்கு நூற்று ஐம்பது வீதம் ஆதரிப்பதாக கத்திக் கத்தி கூறினர். (அதெப்படி நூற்றுக்கு நூற்று ஐம்பது வீதம் ஏற்பட முடியுமென்ற கணிதக் கணக்கை யாராவது பார்த்துக் கொள்ளட்டும்.) ஆனால் புலிகளின் அபிலாஷைகளைத் தாம் ஆதரிப்பதாக இவர்கள் கூறுவதிலுள்ள அபத்தத்தைத்தான் அவர்களே புரிந்து கொள்ளவில்லை. அல்லது புரியாததுபோல் இருந்துவிட்டார்கள்.

மக்களுக்குத்தான் அபிலாஷைகள். அதைத் தீர்க்க முனைபவர்களே புலிகள். புலிகளின் அபிலாஷைகளைத் தீர்க்க இவர்கள் முன்வருவதென்பது வேடிக்கையானது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கத்தான் புலிகள் போராடுகிறார்களென்பதை இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களென்றால் இவர்கள் தேர்தலில் நிற்பதில் அர்த்தமில்லையல்லவா? அதையும் மீறி இவர்கள் தேர்தலில் நிற்கிறார்களென்றால் புலிகளால் தீர்க்க முடியாத ஏதோ ஒருவகை அபிலாஷைகளைத் தாங்கள் தமது வழியில் தீர்க்க முனைவதாக அல்லவா அர்த்தமாகும்.

நிச்சயமாக இவர்கள் தேர்தலில் நிற்பதற்கும் புலிகளின் அபிலாஷைக்கும் சம்பந்தமே இல்லை. இவர்கள் தேர்தலில் நிற்பது இவர்களுக்காகவேயன்றி வேறு யாருக்காகவும் இல்லை. எனினும் தமக்காகத்தான் தாம் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்று கூறிக் கொண்டால் வாக்குகளைச் சுவீகரிக்க முடியாது என்பதற்காக புலிகளின் பெயரை இவர்கள் பாவிக்க விளைந்தார்கள் என்பதே உண்மை. இவர்கள் தங்கள் அபிலாஷைகளை ஈட்டிக் கொள்ளத்தான் தேர்தலில் போட்டியிட்டுக்கொண்டு வேறு யார் யாரதோ அபிலாஷைகளைப்பற்றி விளம்பிக் கொள்வது மக்களை முட்டாளாக்கும் வித்தை மட்டுமே.

தமிழ்க் காங்கிரஸ் இந்தத் தேர்தல் உத்தியை வகுக்கத் துணிந்ததற்கு மூலாதாரமாக அமைந்தது அதன் காலம் சென்ற தலைவர் குமார் பொன்னம்பலத்துக்கு புலிகள் வழங்கிய 'மாமனிதர்' பட்டமே. இந்தப் பட்டத்தை மூலதனமாக்கி புலிகளின் முன்னணி அமைப்புப்போல் தம்மை இனங்காட்டி வாக்குகளை சுவீகரித்துக் கொள்வதே இவர்களின் திட்டமாக இருந்தது.

ஆனால் உண்மையில் குமார் பொன்னம்பலமே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்பினர் சார்பில் தேர்தலில் நிற்க முனைந்த போது புலிகள் அவரை எச்சரித்துத் தடுத்து நிறுத்தியிருந்தனர். அப்படியிருக்க, அதே புலிகளின் பெயரைப் பயன்படுத்தி தாம் தேர்தலில் வெற்றியீட்டிக் கொள்ளலாமெனத் திட்டமிட்ட இவர்களின் புத்திசாலித்தனம்தான் இங்கு மெச்சத்தக்கது. புலிகள் தமது முதுகில் யாரோ சவாரி விடுவதைக் கவனிக்காமல் இருந்து விடுவார்களென இவர்கள் மதிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில்தான் புலிகளின் திட்டவட்டமான அறிவிப்பு இவர்களை செய்வதறியாது திகைக்க வைத்தது. இத் தேர்தலில் தாம் எந்தக் கட்சியையும் ஆதரிக்கவில்லை என்று மட்டுமன்றி தமது பெயரை இத் தேர்தலுக்காக எவரும் பயன்படுத்தக் கூடாது என்றும் அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருந்தார்கள்.

இந்த அறிவிப்பானது தம்மை ஆதரிப்பதாக கூறிக்கொண்டு பலர் தம்மில் அதிகூடிய அனுகூலம் காணப்பார்க்கிறார்கள் என்பது பற்றி புலிகள் விழிப்படைந்துள்ளதை எடுத்துக் காட்டுவதாய் இருந்தது.

இதனால் புலிகளுடன் பேசிக்கொண்டு தான் தாம் தேர்தலில் போட்டியிடுவதாகக் காட்ட முற்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தந்திரமும், புலிகள் தம்மைத்தான் மறைமுகமான தமது பிரதிநிதிகளாக முன் நிறுத்தியுள்ளார்கள் என்ற ஒரு பொய்த் தோற்றப்பாட்டை ஏற்படுத்த முனைந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் குட்டும் உடைந்தன. இந்நிலையில் புலிகளின் முதுகிலில்லாமல் தாமே தமது காலில் நிற்க வேண்டிய நிலை இக் கட்சிகளுக்கு ஏற்பட்டது. ஆனால் இவர்கள் தாம் என்ன செய்யப் போகிறோம் என்ற எந்தவொரு தெளிவான கருத்தையும் முன்வைக்க இயலாதவர்களாக இருப்பதுதான் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டுநிலை.

தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரை இத் தேர்தலில் போட்டியிடும் அமைப்புகளில் முக்கியமானவையாகக் காணப்படுபவை தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எ.ப்பின் இரு அணிகளான வரதர் அணி, சுரேஷ் அணி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியனவாகும்.

இவை யாழ்., வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய தமிழ்ப் பகுதிகளில் போட்டியிடுகின்றன.

அம்பாறையில் கூட்டணியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டதால் அங்கு ஏனைய கட்சிகள் ஒன்று சேர்ந்து கேட்கும் தமிழர் மகா சபையின் சுயேச்சை அணிக்குள்ளேயே கட்சிகளுக்கிடையிலான போட்டி, விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அமையப் போகிறது.

இத் தேர்தலில் தமிழ்த் தரப்பினரின் முக்கியமான தேர்தல் களமாக அமையப் போவது யாழ்ப்பாணமே. இங்கு அதிகூடிய ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதிலேயே இத் தமிழ்த் தரப்புக்களில் முன்னிலை வகிக்கப் போவது யார் என்ற கணிப்பீடு தங்கியுள்ளது.

தேர்தல் சூடுபிடித்து உச்சக்கட்டத்தை அடைந்துவிட்ட இத் தருணத்தில் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான பலம் பலஹீனம் பற்றிய நிலைமைகள் இறுதிநேர மாற்றங்களை எய்தியுள்ளன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஈ.பி.டி.பி.யின் கரம் இறுதித் தருணங்களை எட்டும்போது மிக வேகமாக வலுவடைந்து செல்கிறது. அது அங்கு கையாளும் தேர்தல் உத்தி அதற்கு வெற்றிகரமாக அமைந்துள்ளது. அது வெற்றி தனக்கே என்ற அபிப்பிராயத்தை மக்களுக்கு வெகுவாக ஊட்டியுள்ளது. தானே ஆளுமை மிக்க ஒரு கட்சியாகக் காட்டி அதன் பிரதான எதிராளியான கூட்டணியை ஒன்றுக்கும் லாயக்கற்ற கட்சியாக சித்தரித்துள்ளது.

அதன் கடைசி நேர உத்தியாக ஜனாதிபதியை யாழ். மக்களுடன் தனது ஏற்பாட்டுக் கூடாக நேரடியாகப் பேச வைத்தது. இந்நேரடி சட்டலைட் உரையாடலில் ஜனாதிபதி ஈ.பி. டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றியும் செலுத்தியிருந்தார். இவையாவும் ஈ.பி.டி.பி.க்கான தேர்தல் மவுசை அதிகரிக்கச் செய்யும் நுட்பங்களாக அமைந்திருந்தன.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் அதன் கையில் இருந்த பத்து உள்ளூராட்சி சபைகளையும் பயன்படுத்தி அது உள்ளூர் மக்களோடு ஏற்கெனவே ஒரு நல்ல பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மேலும் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து பல அபிவிருத்தி நடவடிக்கைகளை தனது பகுதிகளில் மேற்கொண்டுமிருந்தது. அத்துடன் பல வேலை வாய்ப்புகளுக்கான ஏற்பாடுகளையும் அது செய்து கொடுக்கக் கூடியதாக இருந்தது.

இந்நிலைமைகள் கூட்டணிக்கு இருக்கவில்லை. அது நீண்ட நாட்களின் பின் ஊர் திரும்பிய ஒரு அன்னியன் போலவே நிலமையை முகம்கொடுத்தது. அதன் கையிலிருந்த மாநகர சபையையும் அது இதுவரை காலமும் சரிவரப் பயன்படுத்தவில்லை. மாறாக நீண்ட காலமாக அதற்கான மேயரைக்கூட நியமிக்காமல் கிடப்பில் போட்டு விட்டது. பிரதி மேயர்கூட கொழும்பிலிருந்து கொண்டே இடைக்கிடை வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போகிறவராக இருந்தார். இதனால் தன்னால் இச் சிறு சபையைக்கூட நிர்வகிக்க முடியாது என்ற கையாலாகாதத் தன்மையை அது மிக அப்பட்டமாக யாழ்ப்பாணத்தில் காட்டி விட்டது. அவையாவும் அதற்கு பின்னடைவான விடயங்களாக இருந்தன.

இந்நிலையில் இத்தேர்தலை முகம் கொள்ள அங்கு அனுப்பப்பட்ட கூட்டணிக் குழுவின் தலைவர் ஆனந்த சங்கரியின் அணுகுமுறை, விடயத்தை மேலும் மோசமாக்கி விட்டது. அவர் முன்னைய நாட்களின் நினைப்பில் தாமே தனிப்பெரும் கட்சியென்ற கற்பிதத்தில் எவரையும் மதிக்காத தொனியில் உரையாற்றத் தொடங்கினார். அவர் தாம் மக்களுக்கு என்ன செய்துள்ளார்கள் என்று கூறுவதை விடுத்து, மாற்றுக் கட்சிகளை வசைபாடுவதையே தனது பிரதான தேர்தல் மார்க்கமாகக் கையாண்டார்.

ஆனால் அத்தகைய அணுகுமுறை யாழ். மக்களுக்கு சினமூட்டுவதாகவே இருந்தது. கூட்டணியினால் மக்களுக்கு என்ன தீர்வையும் அனுகூலங்களையும் பெற்றுத் தரமுடியும் என்பதையும் அவர்களால் தெளிவாக முன்வைக்க முடியவில்லை பதிலுக்கு மாற்று கட்சிகளைத் உச்சஸ்தானியில் தூற்றுவதொன்றையே செய்து வந்ததானது கூட்டணியினரின் பலஹீனத்தின் வெளிப்பாடாகவே வெளித் தெரிந்தது.

இதனால் தாம் தோல்வி காணப்போகிறோம் என்ற அபிப்பிராயத்தையே அவர்கள் அங்கு ஏற்படுத்தினர். இவ்வபிப்பிராயம் தோல்வியை மேலும் மோசமடையச் செய்து விடக்கூடும்.

யாழ்ப்பாணத்தில் வரதர் அணியும் கூடுதலான பிரசாரத்தை மேற்கொண்டது. ஆயினும் அப்பிரசாரங்களால் மாத்திரமே அதிக அளவு வாக்குகளைப் பெற்றுவிடுவது சாத்தியமாகி விடாது.

இந்நிலையில் இறுதி நேர நிலவரத்தைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணத்தில் கிடைக்கக்கூடிய 8 ஆசனங்களையும் ஒரு போனஸ் ஆசனத்தையும் கைப்பற்றும் முயற்சியில் ஈ.பி.டி.பி. பெருமளவு முன்னிலை வகிப்பது உறுதியாகிவிட்டது. கூட்டணி மிகவும் பின்தங்கிய நிலையில் அடுத்து இருக்க, வரதர் அணி ஒரு ஆசனத்தையாவது பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் நிலை காணப்படுகிறது. மற்றைய கட்சிகளுக்கு சந்தர்ப்பம் இங்கு அரிதே.

வவுனியாவில் தமிழ்க் கட்சிகளால் 3 ஆசனங்களையே பெறக்கூடிய நிலையில், டெலோ முன்னிலை வகிக்கிறது. கடந்த காலத்தில் ஈட்டிய வெற்றியின் பலனாக புளொட் அடுத்த நிலைக்கு வர முடியலாம். ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தை பெற்றுக் கொள்ள முயற்சிக்கலாம். ஈ.பி.ஆர்.எல்.எப். உடைபட்டு நிற்கும் நிலையில் எந்த அணியாவது ஆசனங்களைப் பெறுவது அங்கு மிகவும் சிரமமாகிவிட்டது. மற்றைய கட்சிகளால் சாதிக்கக் கூடியதாக எதுவும் இல்லை.

திருகோணமலையில் நிலமை மாற்றமடைந்து வருகிறது. கூட்டணிக்கு நகரப் பகுதியிலும் ஈ.பி.டி.பிக்கு மூதூர் மற்றும் கிராமப் புறங்கள் அகதி முகாம்கள் மத்தியிலும் செல்வாக்கு காணப்பட்டது. தற்போது நகரில் ஈ.பி. டி.பிக்கும் கூட்டணிக்கும் சம அளவு தன்மைக்கு மாறியுள்ளது. அங்கு பல கட்சிகளின் பெயரில் தமிழ் வாக்குகள் சிதையும் அபாயம் காணப்பட்டாலும் இப்போது அந் நிலைமை மாறி இவ்விரு தமிழ்க் கட்சிகளுக்கிடையில் மட்டுமே பிரிபடும் அளவைக்கு நெருங்கி வந்துள்ளது. அங்கு தமிழ் மக்களிடையே வாக்குகள் வீணாகிவிடக் கூடாதென்பதில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இங்கு இவ்விரண்டில் ஒரு கட்சி ஓர் ஆசனத்தைப் பெறலாம். ஏனைய தமிழ்க் கட்சிகள் ஓரங்கட்டப்பட நேரிடும்.

மட்டக்களப்பில் கூட்டணி முன்னிலை வகிக்கிறது. ஈ.பி.டி.பி. அடுத்து நிற்கும் தமிழ்க் கட்சியாக காணப்படுகிறது. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., வரதர் அணி என்பன முயற்சித்தாலும் வெற்றி வெகு சிரமமானது. தமிழ்க்காங்கிரஸ் மிகத் தொலைவில் உள்ளது.

அம்பாறையில் கூட்டணி போட்டியில் இல்லாத நிலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கான போட்டி தமிழர் மகாசபையில் போட்டியிடும் கட்சிகளுக்கு இடையில் அமைந்துள்ளது. இங்கு ஈ.பி.டி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் கடந்த காலத்தில் நின்று செயற்பட்டமை காரணமாக அவர்களுக்கான வெற்றி வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது. தமிழர் மகாசபையின் தலைமை வேட்பாளர் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக வழக்குப் போட்டு அதன் வேட்பு மனுவை நிராகரிக்கச் செய்த காரணத்தால் அப்பகுதி கூட்டணி ஆதரவாளர்களின் வாக்குகள் அவருக்கு எதிராகத் திரும்பும் ஆபத்தை அவர் எதிர்கொள்கிறார். இது ஈ.பி.டி.பி.க்கு மேலும் வெற்றிக்கான சந்தர்ப்பத்தை அதிகரித்துள்ளது.

எவ்வாறெனினும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் இடம் பெற்றுள்ள காரணத்தால் வரதர் அணி சார்பில் வரதராஜப் பெருமாளும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாவது உறுதியாகிவிட்டது. வடக்குக் கிழக்கில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசினதும் ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் அணியினதும் நிலைதான் கவலைக்கிடமானதாக அமையப் போகிறது. இவர்களுக்கு எந்த ஆசனமும் இல்லாமலும் போகலாம்.

மொத்தத்தில் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தரப்பின் முன்னணியிடத்தை ஈ.பி. டி.பி. வகிக்க வாய்ப்புள்ளது. கூட்டணியால் அதைத் தடுத்து நிறுத்துவது மிகவும் சிரமம். இதற்குக் காரணம் கூட்டணி தன்னைக் கையாலாகா தவர்களாக கடந்த காலத்தில் நிரூபித்துக் கொண்டமையே.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை மீண்டும் பொது ஜன ஐக்கிய முன்னணியே ஆட்சியேறும். ஐக்கிய தேசியக் கட்சியால் ஒரு பலமான எதிர்நீச்சலை நடத்த முடியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் எந்த எதிர்ப் பிரசாரத்தையும் மேலெழுப்ப விடாத வகையில் அதனை புலிகளுடன் அடையாளப் படுத்தும் தந்திரோபாயத்தையும் பொ.ஐ.மு. மிக சாமர்த்தியமாகக் கையாண்டது. அதனால் ஐ.தே.க.வுக்கு அந்தப் பழியிலிருந்து மீளுவதே முதலாவது காரியமாகிவிட்ட நிலையில் அரசாங்கத்தின் மீதானகுற்றச் சாட்டுக்களை முனைப்பாக முன்னெடுக்க முடியவில்லை.

மேலும் ஐ.தே.க.வின் தலைமைக் குறைபாட்டால் அதன் மூத்த உறுப்பினர்கள் விலகிச் சென்று பொ.ஐ.மு.யில் இணைந்ததும் மாற்றுக் கட்சி ஆரம்பித்ததும் அதை மேலும் பலகீனமாக்கியுள்ளன. மாறாக பொ.ஐ.மு. தனது கூட்டுக் கட்சிகளைத் தன்னுடன் பிணக்கின்றி வைத்திருக்க முடிந்ததுடன் இத்தேர்தலில் மேலும் புதிதாக மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளையும் இணைத்துக் கொள்ள முடிந்துள்ளது. ஜே.வி.பி.யால் பொ.ஐ.மு.யின் வாக்கு வங்கியில் சிறு பகுதியை உடைக்க முடிந்தாலும், பிரஜைகள் முன்னணி, சிஹெல உறுமய போன்ற கட்சிகள் ஐ.தே.க.வின் வாக்கு வங்கியையே உடைப்பனவாக உள்ளன.

எனவே மீண்டும் பொ.ஐ.மு. ஆட்சியே ஏற்படும். அதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகளும் கூட்டாட்சி வகிக்கும். வடக்கு கிழக்கில் ஈ.பி.டி.பி. முன்னணிக் கட்சியாக வரக்கூடும். வராவிடினும் ஈ.பி. டி.பி.க்கும் அமைச்சுக்கள் அரசாங்கத்தால் முன்வைக்கப்படலாம். ●

**நரன்**


# செய்திச் சிதறல்

✪ பாராளுமன்றப்பொதுக் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்கள் கடந்த 7ம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைந்து விட்டது. அன்றைய தினம் சகல அரசியல் கட்சிகளும் கொழும்பு மாநகரிலும் ஏனைய முக்கியமான நகரங்களிலும் கட்சிகளுக்கான இறுதிப்பிரசாரக் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

✪ இறுதிப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் அரசியல் கட்சித் தலைவர்களைத் தாக்குவதற்கு விடுதலைப்புலிகள் சிறப்புப் பயிற்சி பெற்ற தனது இயக்க உறுப்பினர்களை அனுப்பிவைத்திருந்ததாக தேசிய உளவுத்துறையினர் அரசாங்கத்துக்கும் இராணுவத் தலைமைப்பீடத்துக்கும் முன்னெச்சரிக்கை வழங்கியிருந்தனர். பிரதமமந்திரி ரத்னசிறி விக்கிரமநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், கதிர்காமர், கிங்ஸ்லி விக்கிரமரெட்ன, கருஜெயசூரிய, அனுரா பண்டாரநாயக்க ஆகியோருடன் சிஹல உறுமய கட்சித்தலைவர் எஸ்.எல்.குணசேகர ஆகியோரை இலக்கு வைத்தே புலிகளின் தாக்குதல் திட்டம் வகுப்பட்டிருந்ததாக உளவுத்துறையினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இவர்கள் எவரையும் பொதுக் கூட்டங்களுக்கு செல்லலாகாது என்றும் கேட்கப்பட்டிருந்தனர்.

✪ மட்டக்களப்பு மாவட்டதேர்தல் தொகுதியில் தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடுவதற்கு அக்கட்சியினால் ஒதுக்கப்பட்டிருந்த பெயர்ப்பட்டியலில் தலைமை வேட்பாளராக திரு.செல்லையா இராஜதுரை அவர்களின் பெயரே போடப்பட்டிருந்து. மலேசியாவின் இலங்கைத் தூதுவராக இருந்து விலகியவரும் முன்னாள் அமைச்சருமான செல்லையா இராஜதுரை அவர்கள் தான் தலைமை வேட்பாளரா என்று பரவலாக செய்தி எழுந்தது. ஆனால் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் காலத்தில் திரு.இராஜதுரை அவர்கள் இலங்கைக்கு வந்ததற்கு எத்தகைய சான்றும் இல்லை என்பதனால் நியமனப்பத்திரத்தில் அவருடைய பெயர் கையொப்பம் மோசடியாகப் போடப்பட்டுள்ளது என்று வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேற்படி பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த இராஜதுரை மலேசியாவில் உள்ளவரல்ல என்றும் மற்றுமொருவருடைய பெயர் தான் என்றும் தேசிய ஐக்கிய முன்னணியினர் வாதிட்டதைத் தொடர்ந்து இவ்வழக்கின் தீர்ப்பு கூறப்படுவது திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

✪ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுடன் இரகசிய ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்தியுள்ளார் என்றும், இவ்வுடன்படிக்கை ஒரு தேசத்துரோகமான செயலாகும் என்றும் ஜனாதிபதியும் பிரதமரும் பிரசாரம் செய்து வருகின்றனர். இக்கூற்று பெரும் அபாண்டமான குற்றச்சாட்டு என்றும் விடுதலைப்புகளுக்கும் தனக்குமிடையில் எந்தவிதமான உடனபடிக்கையும் ஏற்படுத்தப்படவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக அறிவித்துள்ளார். ○



முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் ஓர் ஊழல் வழக்கில் குற்றவாளியென தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டு இரண்டு மாதங்களாகின்றன. இன்னமும் அவர் விடுதலை யாவதாய்த் தெரியவில்லை. வாஜ்பேயிக்கு முழங்காலில் அறுவை சிகிச்சை, இரண்டு மாதங்களாவது ஓய்வெடுக்கவேண்டும். ஆனாலும் அவர் அத்வானியை இடைக்கால பிரதமராக்க அஞ்சுகிறார். மருத்துவமனையிலிருந்தே நாட்டை ஆளப்போகிறாராம். ஜெயலலிதா நள்ளிரவில் ஆலயங்களில், தன் தோழி சசிகலாவுடன் யாகம் நடத்திக் கொண்டிருக்கிறார்...

இப்படிப்போகிறது இந்திய அரசியல், மக்கள் துயர்களுக்குப் பஞ்சமில்லை. வடகிழக்குப் பகுதிகளில் வெள்ளம். ராஜஸ்தானில் வறட்சி, இவற்றுக்கிடையே டீசல், மண்ணெண்ணெய், பெட்ரோல் விலை ஏறியிருக்கின்றது.

# பாவம் நரசிம்மராவும் ராஜ்குமாரும்



நரசிம்மராவ் பிரதமராக இருந்த போது அவரது அரசிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்தது. 14 வாக்குகள் வித்தியாசத்தில் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

ராஜீவ் கொலைசெய்யப்பட்டதன் பின்னணியில் நடந்த 1991ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஐந்து ஆண்டுகள் ராவ் ஆட்சியை நடத்தி சமாளித்துவிட்டாலும் கூட, இறுதி வரை உதிரிக்கட்சிகள், சுயேச்சைகள், எதிர்க்கட்சிகளில் அதிருப்தியாளர்கள் போன்றோரை நம்பியிருக்கவேண்டியிருந்தது.

பீகார் மாநிலத்தில் உள்ள ஜார்கண்ட் என்ற பகுதிக்கு தனி மாநில அந்தஸ்து வேண்டும் என்று கோரிவந்த ஒரு கட்சியைச் சார்ந்த நான்கு எம்.பிக்களுக்கு தலா 50 லட்ச ரூபா வழங்கியதாக நரசிம்மராவ் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

1993 ஆண்டு ஜூலை மாதம் நடந்த வாக்கெடுப்பு தொடர்பான வழக்கு இப்போது தான் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. அதுவும் தண்டனை எதுவும் இன்னமும் வழங்கப்படவில்லை. நரசிம்மராவும் அப்போது உள்துறை அமைச்சராக இருந்த பூட்டா சிங்கும் குற்றவாளிகள் என்று புதுடில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதி மன்றம் தீர்ப்பு கூறியிருக்கிறது. என்ன தண்டனை என்பது பிறகே தெரியும்.

லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு எம்.பிக்களும் கடந்த ஆண்டே வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். லஞ்சம் வாங்கியவர்கள் தப்பித்து, கொடுத்தவர்கள் தண்டனைபெறும் ஒரு விநோத வழக்கு இது.

இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு கிரிமினல் வழக்கில் தண்டனை பெறும் முதல் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ்தான் என்பதுகுறிப்பிடத்தக்கது. இதில் வேதனை என்னவென்றால் ராவ் ஒரு பன்மொழி அறிஞர், பல்வேறு சாத்திரங்களை கற்றறிந்தவர். அவர் ஒரு குற்றவாளியாக சித்தரிக்கப்படுகிறார். தண்டனையும் பெறவிருக்கிறார்.

ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழும், இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழும், நரசிம்மராவ் மற்றும் பூட்டா சிங் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டதாக நீதிபதி அஜீத் பாரிஹோக் தீர்ப்பளித்தார். அஜீத் சிங், பஜன்லால், வீரப்ப மொய்லி, சதீஷ் சர்மா உட்பட ஒன்பது பேர் மீதான புகார்களுக்கு ஆதாரமில்லை என்று கூறி அவர்களை பாரிஹோக் விடுதலை செய்தார். முன்னாள் ஹரியானா முதல்வர் பஜன்லால் லஞ்சத்தின், முறைகேடுகளின் மொத்த உருவம்; அவர் ஒரு கிரிமினல் பேர்வழியென்றால் அது மிகையாகாது. ராஜீவ் காந்தியின் நெருங்கிய தோழராக இருந்த சதீஷ் சர்மாமீது பல்வேறு காலகட்டங்களில் ஊழல் புகார்கள் எழுந்துள்ளன. கர்நாடக முதல்வராக இருந்த வீரப்ப மொய்லி மீதும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உண்டு. அவர்களெல்லாம் தப்பிவிட்டனர், நரசிம்மராவ் தண்டனை பெற்றிருக்கிறார்.

முன்னாள் பிரதமர் சரண் சிங்கின் மகன் அஜீத் சிங் ஒருவர்தான் அப்படிப்பட்ட புகார்களில் மாட்டிக்கொள்ளாதவர்.

நரசிம்மராவ் ஒன்றும் புனிதரல்ல. அவரது ஆட்சியில்தான் அவரது மகன் ஓர் ஊழல் வழக்கில் சிக்கினார். சுப்பிர மணிய ஸ்வாமி, சந்திராஸ்வாமி போன்ற அரசியல் வியாபாரிகள் கொழித்தனர். பங்குச் சந்தையில் பெரும் ஊழல் விவகாரம் வெடித்துக் கிளம்பியது. தாராளமயமாக்கல் கொள்கைகளைக் கடைபிடித்து நாட்டில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கிடையேயுமான இடைவெளி அதிகரிக்க காரணமானவர், எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய தவறான அணுகுமுறையே அயோத்தியில் பாபர் மசூதி வீழ்வதற்கு காரணமாயிருந்தது. காங்கிரஸ் முஸ்லிம்களின் நம்பிக்கையினை இழந்தது. அதிவேகமாக கட்சி பல மாநிலங்களில் வீழ்ச்சியடைந்தது. அதன் ஒட்டு மொத்த விளைவே பாரதீய ஜனதா இன்று ஆட்சியிலிருப்பது.

எனவே அவருக்காக கண்ணீர்விட ஒன்றுமில்லை. ஆனால் பிரச்சனை அதுவல்ல; ராஜீவ் காந்தி கொலையினால் நிலைகுலைந்து போயிருந்த இந்தியாவில் ஒரு நிலையான ஆட்சியைத்தந்தவர் ராவ். சிறுபான்மை அரசாக இருந்தாலும் அது கவிழ்ந்துவிடாமல் ஐந்து வருடங்கள் காப்பாற்றியவர்.

நாடாளுமன்ற ஜனநாயக முறையில் அரசியல் கட்சிகள் ஒட்டுப் பொறுக்கிகளாக இருப்பதும், எம்.பி.க்களும், எம்.எல்.ஏ.க்களும் தங்கள் ஆதரவை ஏலத்திற்கு விடுவதும் சகஜம்தானே. அத்தகையதொரு சூழலில் தனது ஆட்சியினைத் தக்கவைத்துக்கொள்ள ராவ் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டது எந்தவிதத்தில் தவறாகும்? லஞ்சம் வாங்கிய எம்.பி.க்கள் விடுவிக்கப்படும்போது, கொடுத்தவருக்கு மட்டும் ஏன் தண்டனை?

மக்கள் பெயரால் ஒட்டு வாங்கி, நாட்டை முன்னேற்றுவதாய் சொல்லிக்கொண்டு தங்களுக்கு வேண்டியவர்கள் சொத்து சேர்க்க வழிவகுக்கும் அரசியல்வாதிகள் ஒரு சிலருக்கேனும் தண்டனை கிடைப்பது சரிதான் என்று வேண்டுமானால் நியாயப்படுத்தலாம். தீர்ப்பு படிக்கப்பட்டபோதோ, அல்லது பின்னரோ அவரால் இலாபம் அடைந்த காங்கிரஸ்காரர்கள் எவரும் அவருக்கு ஆறுதல் சொல்ல வரவில்லை. மாலையில் சோனியா காந்தியும் மற்ற சில தலைவர்களும் அவரைச் சந்தித்தார்கள் தான். ஆனாலும் அதிகாரபூர்வமாக கட்சி தனது முன்னாள் தலைவரை ஆதரிக்க, அவருக்காக வாதாட முன்வரவில்லை. காங்கிரஸ் கலாசாரம் அதுதான் போலும்!

அக்டோபர் 11ம் நாளன்றுதான் என்ன தண்டனை என்று நீதிபதி அறிவிப்பார். சம்பந்தப்பட்ட பிரிவுகளின் கீழ் அதிக பட்சமாக ஏழாண்டு சிறைத்தண்டனையும் குறைந்தபட்சம் ஆறு மாத சிறைத்தண்டனையும் வழங்கலாம்.

அதே நாளன்றுதான் ராஜ்குமாரின் கதி என்ன என்பதும் தெரியவரலாம், உச்ச நீதி மன்றத்தில் வீரப்பனால் கொல்லப்பட்ட ஷகீல் அகமதின் தந்தை அப்துல் கரீமின் மனு அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. வீரப்பன் கோரியபடி 127 கிராமவாசிகள் மற்றும் ஐந்து தமிழ் தீவிரவாதிகள் மீதான அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெறுவதென்ற தமிழக, கர்நாடக அரசுகளின் முடிவினை எதிர்த்துத்தான் கரீம் வழக்கு தொடுத்திருக்கிறார். அந்த முடிவுகளுக்கு உச்சநீதி மன்றம் தடைவிதிக்க பிரச்சனை மேலும் சிக்கலாகியிருக்கிறது. தங்கள் தரப்பு நியாயங்களை இரு மாநில அரசுகளும் இப்போது எடுத்துரைத்திருக்கின்றன. மத்திய அரசும் அவற்றின் முடிவுகளுக்கு தனது ஆதரவைத் தெரிவித்திருக்கின்றது.

வேறுவழியில்லாமல் அக்டோபர் 11ம் நாளன்று உச்சநீதிமன்றம் தனது தடையினை விலக்கிக்கொள்ளும் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட ஆவணங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு நக்கீரன் கோபால் நான்காவது முறையாக காட்டிற்குள் சென்றார். இம்முறை எப்படியும் ராஜ்குமாரை வீரப்பன் விடுதலை செய்துவிடுவார் என்று பலரும் நம்பினார்கள்.

ஆனால் வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்தது போல், திடீரென்று ராஜ்குமாரின் உதவியாளர் நாகப்பா வீரப்பனிடமிருந்து தப்பி வந்துவிட்டார். அவராக தப்பி வந்தாரா அல்லது வீரப்பனே அவரை அனுப்பிவைத்துவிட்டாரா என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

"மற்றவர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள், நான் ஓடி வந்துவிட்டேன்" என்கிறார் நாகப்பா. அடர்ந்த காட்டுப்பகுதியில் பாதையினைக் கண்டறிந்து அவர் எப்படி வெளியே வரமுடியும், என்பது புதிராகத்தான் இருக்கிறது. அதுவும் அவர் ராஜ்குமாரின் விசுவாச ஊழியர். ராஜ்குமாரை வீரப்பன் கடத்திச் சென்றபோது, தானாகவே அவருடன் கூடச் சென்றவர் நாகப்பா. அப்படிப்பட்டவர் ஏன் தனியாகத் தப்பி வரவேண்டும்? அதுவும் தான் தப்பிப்பதால் ராஜ்குமாருக்கு ஆபத்து ஏதும் நேரக்கூடும் என்ற சூழலில் அவர் அப்படி செய்யக்கூடியவரா? ஒரு வேளை கர்நாடகத்தில் பதற்றம் அதிகரிப்பதை அறிந்து, அதனைச் சற்று தணிப்பதற்காக வீரப்பனே நாகப்பாவை திருப்பியனுப்பியிருக்கலாம் என்று கூட சில ஊகங்கள்.

நாகப்பா தப்பிய இரண்டு நாட்களுக்குள் சென்னைக்குத் திரும்பிய நக்கீரன் கோபால், வீரப்பன் மிகவும் ஆத்திரமுற்றிருப்பதாகவும், தொடர்ந்து அவருடன் பேசுவதில் பயனில்லை என்றுணர்ந்தே தான் திரும்பிவிட்டதாகவும் கூறினார். தான் ஏறத்தாழ ராஜ்குமாரையும் மற்றவர்களையும் விடுதலை செய்யுமாறு வீரப்பனை சம்மதிக்கவைப்பதில் வெற்றி கண்டுவிட்ட நேரத்தில் தேவையில்லாமல் நாகப்பா தப்பியோடி சிக்கலை அதிகப்படுத்திவிட்டார் என்று குற்றஞ்சாட்டினார் கோபால்.

கோபால் காட்டிற்குள் நுழைந்த நேரம் வீரப்பனிடமிருந்து விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளர் பழ.நெடுமாறனுக்கு ஒரு ஆடியோ காசட் வந்து சேர்ந்தது. தான் இப்போது தமிழ்நாட்டு விடுதலைக்காகப் போராடுகிற ஒரு போராளியாக மாறிவிட்டதாகவும் நெடுமாறனின் போராட்டங்களுக்கு தனது ஆதரவினையும் வீரப்பன் அதில் தெரிவித்திருக்கிறார்.

உச்சநீதிமன்றத்தையும். பொதுவாக நீதித் துறையினையும் கடுமையாக சாடியிருக்கிறார்வீரப்பன். இந்திரா காந்தி கொலைக்குப் பிறகு ஆயிரக்கணக்கில் சீக்கியர்கள் கொலை செய்யப்பட்டார்களே, காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பினை அமுல் படுத்த கர்நாடக அரசு தொடர்ந்து மறுத்து வருகிறதே, அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத நீதிமன்றம் 51 தடா கைதிகளை விடுவிப்பதென்று கர்நாடக அரசு முடிவெடுத்த போது அதற்கு மட்டும் ஏன் தடை விதிக்க வேண்டும் என்று வினவியிருக்கிறார் வீரப்பன். தான் பொறுமையிழந்து வருவதாகவும் ராஜ்குமார் நல்லபடியாகத் திரும்புவது அரசுகளின் கைகளில்தான் இருக்கிறதென்றும் அவர் அதில் கூறியிருக்கிறார்.

அதாவது தான் கோரியபடி தடாகைதிகளெல்லாம் விடுதலையாகவில்லையானால் தான் ராஜ்குமாரை விடுவிக்கப்போவதில்லை என்று மறைமுகமாகக் கூறியிருக்கிறார் வீரப்பன். இந்த காசட்டில் கோபாலைப்பற்றி அவர் குறிப்பிடவில்லை.

நக்கீரன் அலுவலகத்திற்கு அதைப்பற்றி எதுவுமே தெரியாது. திரும்பி வந்த கோபாலிடம் நெடுமாறனுக்கு அனுப்பப்பட்ட காசட் பற்றி கேட்டபோது தெளிவாக பதிலெதையும் அளிக்க மறுத்துவிட்டார்.

பொதுவாக வீரப்பனின் கோரிக்கைகளுக்கு நெடுமாறன் ஆதரவு தெரிவித்துவந்தாலும் கூட, இதுவரை அவர் நேரடியாக வீரப்பன் விஷயத்தில் கருத்தெதையும் தெரிவித்தது கிடையாது. தற்போது வீரப்பனுடனிருக்கும் தமிழ் தீவிரவாதக் குழுக்களின் தூண்டுதலின் காரணமாகவே அவர் நெடுமாறனின் உறைவை நாடுகிறார்.

நெடுமாறன் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவராயிருக்கிறார். தமிழினவாதம் பேசும் பல்வேறு குழுக்கள் அவருடன் இணைந்து செயலாற்றுகின்றன. இந்த கூட்டணியில் வீரப்பனும் இணைய முயல்கிறார் என்பது கண்கூடு.

நெடுமாறன் மிக கவனமாக செயல்படுகிறார். காசட்டில் கூறப்பட்டிருப்பதை பத்திரிகைகளுக்கு செய்தியாக அளித்தாரேயொழிய தானாக கருத்தெதையும் கூற முன்வரவில்லை. ஆனால் புதிய ஒரு தமிழ் தீவிரவாதக் கூட்டமைப்பு பிறக்கிறது என்பதில் ஐயமில்லை. ராஜ்குமார் என்னாவார்? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**கானகன்**

# கூட்டணி காட்டப்போகும் பாதை எது?

அழிவு.... அழிவு.... பேரழிவு!

திரும்பிய பக்கமெல்லாம் இரத்த ஆறு பெருகுவதையும் சோககீதம் எங்கும் ஒலிப்பதையுந்தான் கேட்கக் கூடியதாகவிருக்கிறது.

இத்தகைய காட்சியை நான் கூறும் போது, தேர்தல் வன்முறைகளைப் பற்றித்தான் வர்ணிக்கிறேன் என்று கருதிவிட வேண்டாம். வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அவல நிலையைப்பற்றித்தான் இங்கு குறிப்பிடுகிறேன்.

"தமிழ் மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!" என்று தந்தை செல்வா அன்று தீர்க்கதரிசனம் சொன்னார். ஆனால் இன்றுள்ள எமது நிலையை எண்ணிப் பார்த்தால் எம்மை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என்பது புலனாகிறது.

இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையின மக்களான சிங்கள மக்களுடன் சரிநிகர் சமானமாக வாழ வேண்டுமானால் இந்த நாட்டில் சமஷ்டி முறையிலான கூட்டாட்சி முறை ஒன்றுதான் நல்ல பலனளிக்கும் என்று கண்ட தந்தை செல்வா அவர்களும் கோப்பாய் கோமான் கு.வன்னியசிங்கம் அவர்களும் அப்போதிருந்த சில தமிழ்த் தலைவர்களும் வகுத்த திட்டம்தான் சமஷ்டி ஆட்சிமுறை. இதனடிப்படையிலேயே தமிழரசுக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது.

இந்த அமைப்பைச் சிதறடித்து ஈழமொன்றே இங்கு தமிழ் மக்களுக்கு சிறப்பான வாழ்வைத் தரவல்லது என்று வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழரசுக்கட்சி முடிவெடுத்தது. தந்தை செல்வா இம்மாநாட்டில் பிரசன்னமாக இருந்தார் என்பது உண்மைதான். ஆனால் தனித்தமிழீழம், என்ற கோரிக்கைக்கு அவர் மனப்பூர்வமாக ஒப்புதல் அளித்தாரா?

நிச்சயமாக தந்தை செல்வா அத்தகையதொரு முடிவுக்கு ஆதரவளிக்க உடன்பட்டிருக்க மாட்டார். "தமிழ் பேசும் மக்களுக்கு உரிய உரிமைகள் மறுக்கப்பட்டால் பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை!" என்றும் தந்தை செல்லி வந்தார் என்பதை மறுப்பதற்கில்லை. இருப்பினும் அவருடைய கூற்றில் ஓர் உண்மை ஆழமாக பொதிந்திருந்தது. தனித்தமிழீழம் கேட்டாலாவது பெரும்பான்மை அரசில்வாதிகள் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக்கொள்ளக் கூடும் என்ற நோக்கம் தான் அவர் உள்மனதில் பதிந்திருந்தது.

தமிழ் பேசும் மக்களின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், அந்தக் குறிப்பிட்ட காலத்தில் தந்தை அவர்கள் தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்த முடியாத நிலையிலிருந்தார். அவரால் பேசவும் முடியாத-எழுதவும் முடியாத நிலை. அவருடைய வாயருகில் தனது செவியைச் செலுத்திவிட்டு தந்தையின் கருத்தைக் கேட்டறிந்துவிட்டதாக மற்றவர்களுக்கு தன்னுடைய சொந்தக் கருத்தைக் கூறுவதில் தான் சில தலைவர்கள் எல்லாவற்றையும் குழப்பியடித்தார்கள்.

மேடைக்குமேடை வீராவேசப் பேச்சுக்களைப் பேசி இளம் சமுதாயத்தினரை வெறிகொள்ள வைத்தனர். நடைமுறை சாத்தியமில்லாத பாதையில் அப்பாவி இளைஞர்கள் வீர நடை போட்டனர். இத்தகைய சூழ்நிலையை உருவாக்கியவர்கள் அதே சூழலுக்குத் தம்மையே பலியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களுக்கு உரிமையுடன் வாழ அருகதை இருக்கிறது என்ற நல்லெண்ணத்துடன் செயற்படும் பெரும்பான்மை அரசியல்வாதிகளுடன் சார்ந்து, மறுக்கப்பட்ட உரிமைகளையாவது வென்றெடுக்க இடையூறாக நிற்கும் பெரும்பான்மையின அரசியல் வாதிகளுடன் இணைந்து எல்லாவற்றையும் குழப்பியடிக்கும் கூட்டணியினர், தமிழ் பேசும் மக்களுக்கு எந்தப் பாதையைக் காட்டப் போகிறார்கள்?

இதே வினாதான் இன்றைய தமிழ் பேசும் மக்களின் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருக்கிறது.

சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; எல்லாரையும் எப்போதும் ஏமாற்ற முடியுமா?

–'ஆயிலியன்'–

# ஆரோக்கியமான பாராளுமன்ற ஆட்சி உருவாகுமா?

## அலசுவது - இராஜதந்திரி

இலங்கையின் 21 வது நூற்றாண்டுக்கான முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் பாராளுமன்ற ஆட்சியின் முக்கியத்துவத்தை இழந்த நிலையிலேயே இடம் பெறுகின்றது.

20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம், நடுப்பகுதி என்பவை உலக மகாயுத்தங்களினால் சூழப்பட்டிருந்தது. அப்போது இலங்கை பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டதாக தனது இறைமை, சுதந்திரம், என்பவற்றை இழந்ததாகவே விளங்கியிருந்தது.

இரண்டாம் உலக யுத்தம் நிறைவுற்ற தறுவாயிலேயே இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியும் முடிவுக்குவந்திருந்தது. 1948ம் ஆண்டு சுதந்திரமடைந்த இலங்கை கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் எட்டிய வளர்ச்சியை விட அழிவுகளும், அனர்த்தங்களுமே ஏராளமானவையாக இருக்கின்றன.

ஜனநாயக பாரம்பரியங்களைப் பேணி, இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை உறுதி செய்து, பொருளாதார ரீதியாகவும் இலங்கை கடந்த 50 ஆண்டுகாலத்தில் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் ஜனநாயகம் என்பது பெயரளவில் மட்டுமே இருக்கின்றதே தவிர, எவ்வகையிலும் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் ஓர் அரசாங்கம் இலங்கையில் இதுவரை தோற்றம் பெறாமலேயே இருக்கின்றது.

ஆட்சியதிகாரங்களுக்கு வருவோரின் நடவடிக்கைகள் இனவாதம், பிரதேசவாதம் போன்ற குறுகிய கண்ணோட்டங்களுக்கு இடமளித்தவையாகவே இருந்து வருகின்றன.

இலங்கையர்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாத்து, அனைத்துமக்களையும் சமத்துவமாக நடத்தும் போக்கு இலங்கையில் இதுவரை காலமும் பதவிக்கு வந்த ஜனாதிபதிகளிடமோ அல்லது பிரதம மந்திரிகளிடமோ காணப்பட்டிருக்கவில்லை.

இத்தகைய மிகவும் பிற்போக்கான அரசியல் சூழ்நிலையிலேயே இலங்கை 21 ம் நூற்றாண்டின் முதலாவது பொதுத்தேர்தலுக்கு முகங்கொடுக்கின்றது.

1977ம் ஆண்டிலிருந்து இலங்கைப் பாராளுமன்றம், அதன் முக்கியத்துவத்தை இழக்கலாயிற்று. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையே ஜனநாயகப் பாரம்பரியங்களுக்கு வேட்டுவைப்பதாக பாராளுமன்ற ஆட்சியை ஓரந்தள்ளியிருந்தது.

1994ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியாக இருந்து போட்டியிட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கிப் பாராளுமன்ற ஆட்சியைக் கொண்டு வருவதாக உறுதியளித்திருந்தது.

ஆனால் தற்போது இரண்டாவது தடவையாகவும் பாராளுமன்ற பொதுத்தேர்தல் இடம்பெறும் தறுவாயில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி, முன்னரைவிடப் பலம் மிக்கதாகவே இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

பாராளுமன்ற ஆட்சியை மீளவும் ஏற்படுத்தி விவாதங்களில் நேரடியாகவே பங்குபற்றும் ஒரு பிரதமராகத் தம்மை மாற்றப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா கடந்த பொதுத் தேர்தலின் போது குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அவர் தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகைக்குள்ளேயே தமது அரசியல் நடவடிக்கைகளைப் பெரிதும் மேற்கொள்வதோடு, பிரதமராகிப் பாராளுமன்றம் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டவராகவே இருக்கின்றார்.

எனவே அரசியல்விடயங்களில் மட்டுமல்ல. சமூக பொருளாதார நடவடிக்கைகளில் கூட பிரதான கட்சிகளின் வாக்குறுதிகளை நம்பி மோசம் போனவர்களாகவே நாட்டுமக்கள் இருக்கின்றனர்.

இத்தடவை பொதுத்தேர்தல் சர்வதேச சமூகத்துக்கே இலங்கையில் நிலவுகின்ற அரசியல் வன்முறைகளைப் படம்பிடித்துக்காட்டுவதாக இருக்கின்றது.

ஒலிம்பிக் பந்தயத்தில் 52 ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்கு இத்தடவை வெண்கலப்பதக்கமொன்றை ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க வென்று கொடுத்திருந்தார்.

அவரது இவ் வெற்றி சர்வதேச கவனத்தைப் பெற்ற தறுவாயிலேயே, மஞ்சள் நிறத்தில் சுசந்திகா ஜயசிங்க ஓட்டப்பந்தயத்தின் போது கையில் கட்டியிருந்த மஞ்சள்நிறப் பட்டியும் உலகின் கவனத்தைப் பெற்றிருந்தது.



இலங்கையில் தேர்தல் வன்முறைகளைக் கண்டித்துத் தடுத்து நிறுத்தும் அமைப்பினரது வேண்டுகோளுக்கமைவாகவே சுசந்திகா ஜயசிங்க தமது கையில் மஞ்சள்பட்டி அணிந்திருந்தார்.

இந்த நடவடிக்கை, நியாயமாகச் சிந்திக்கத் தெரிந்த சாதாரண பொதுமக்களின் உணர்வுகளை ஆட்சியதிகாரங்களில் இருப்போரால் தடுத்து நிறுத்த முடியாதென்பதையே புலப்படுத்தியிருந்தது.

இத்தடவை பொதுத் தேர்தலைக் கண்காணிக்க முன்பொருபோதுமில்லாதவாறு சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் இலங்கை வந்துள்ளனர்.

இக்கண்காணிப்பாளர்களில் ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த அவதானிகள் முக்கியமானவர்களாவர். ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு நாடுகளும் இலங்கைக்கு கோடிக்கணக்கில் உதவிகளை வழங்கிவருகின்றன.

இந்நிலையில் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த பிரதிநிதிகள் முதல் தடவையாக இலங்கையில் தேர்தல் கண்காணிப்பாளர்களாக வருகை தந்திருப்பதுடன் யுத்தம் மூண்டுள்ள வடபகுதிக்கும் ஐரோப்பிய யூனியன் கண்காணிப்பாளர்கள் தேர்தல்களை அவதானிக்கச் சென்றிருந்தனர்.

வடபகுதியைப் பொறுத்தவரை தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் அதேசமயம் அங்கே இடம்பெறும் யுத்த நிலவரங்களையும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளால் தெளிவுற அறிய முடியுமென்றே கருதலாம்.

தென்னிலங்கையில் தேர்தல் வன்முறைகளை அவதானித்த ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகள் குழுத்தலைவர் எச்சரிக்கையொன்றையும் விடுத்திருந்தார். அந்த எச்சரிக்கையில் தேர்தல் வன்முறைகள் குறித்து ஐரோப்பிய பாராளுமன்றில் தாம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், இலங்கை மீது ஐரோப்பிய சமூகம் அதிருப்தி கொள்ளும் சூழ்நிலைகளும் ஏற்படலாம். அத்துடன் எதிர்காலத்தில் உதவித்திட்டங்கள் தொடர்பாக ஐரோப்பிய சமூகம் தனது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ள முடியுமெனவும் அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதுதவிர ஜப்பானிய அரசாங்கம் கூட இலங்கையில் நேர்மையான, சுதந்திரமான தேர்தல்களை நடத்த உதவிசெய்யும் பொருட்டு 40 லட்சம் ரூபாவை பவ்ரல் என்றழைக்கப்படும் இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்கு வழங்கியுள்ளது.

தேர்தல்வன்முறைகள் என்பது கடந்த மாகாணசபைத் தேர்தல்களின்போதே மூர்க்கமடைந்து, ஜனாதிபதித்தேர்தலின்போது மிகவும் பூதாகரமான கட்டத்தை எட்டியிருந்தது.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் யுத்தத்தை தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் ஒரு பயங்கரவாதமென்று கூறிக்கொள்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஆனால் அரசியல் அடாவடித்தனங்கள், மற்றும் தேர்தல்வன்முறைகள், அவற்றினால் ஏற்படுகின்ற உயிர், உடமைச் சேதங்களைப் பூசி மெழுகி தம்மைப்பாதுகாத்துக் கொள்வதிலேயே ஆட்சியதிகாரங்களில் இருப்போர் முனைப்பாக இருக்கின்றனர்.

இத்தடவைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு கடந்த ஒரு மாதகாலத்தில் நாடளாவிய ரீதியில் தேர்தல் வன்முறைகளின் தொகை ஆயிரத்தையும் தாண்டியதாகவே இருக்கின்றது.

கொலைச்சம்பவங்கள், அடிதடி, தீவைப்பு, குண்டு வீச்சு, தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் எனப் பல்வேறு ரகத்திலும் இத்தடவை தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றுள்ளன.

மூதூர், மதவாச்சி ஆகிய இடங்களில் நடந்த குண்டுத்தாக்குதல்கள் அப்பாவிப் பொதுமக்கள் பலரைப் பலிகொண்டுள்ளன.

பொதுமக்கள் தாம் விரும்புகின்ற அரசியல் பிரமுகரை, மற்றும் அரசியல் கட்சியை தமக்கு விரும்பியவாறு எவ்வித அச்சுறுத்தலோ, குறுக்கீடுகளோ இன்றி தெரிவுசெய்வதையே ஜனநாயகப் பாரம்பரியங்கள் வலியுறுத்துகின்றன.

ஆனால் இந்த மக்கள் ஆணை என்பது அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்குமுள்ளானதாக இருப்பதையே தேர்தல் வன்முறைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அரசியல் கோதாவை எடுத்து நோக்கும் பட்சத்தில் இத்தடவை கூட ஆளுங்கட்சித்தரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய பேச்சுக்களே பெருமளவில் அடிபட்டதை அவதானிக்கமுடிந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளைக் கண்டித்த அதே சமயம், ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவையும் புலிகள் இயக்கத்தோடு சம்பந்தப்படுத்தி ஆட்சியாளர்கள் பிரசாரக்கணைகளைத் தொடுத்திருந்தனர்.

இப்பிரசாரத்தை முன்னெடுப்பதில் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே முனைப்பாக இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

கடந்த பொதுத்தேர்தலின் போது பொது ஜன ஐக்கிய முன்னணி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புகழ்பாடுவதாகவே விளங்கியிருந்தது.

ஆனால் அதே பொது ஜன ஐக்கிய முன்னணி இத்தடவைப் பொதுத்தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கடுமையாகவே விமர்சித்துள்ளதையும் காணமுடிகின்றது.

பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எவ்வித சமாதானப் பேச்சுக்களும் நடத்தப் படமாட்டாது. அவர்கள் இராணுவரீதியாகவே முறியடிக்கப்படுவார்கள். இதற்காக தமது அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று கூறியிருந்தார்.

புலிகளை ஒடுக்குவதற்கு இராணுவநடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தப்போவதாகக் குறிப்பிட்ட திரு.ரட்ணசிறி விக்கிரமநாயக்க, மற்றுமொரு விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

நோர்வேயின் சமாதான நடவடிக்கைகள் பயனற்றவை என்ற வகையிலும் பிரதமர் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார்.

பொதுத்தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்ற ஒரே குறிக்கோளில் நாட்டின் பிரதான பிரச்சனையான வடக்கு-கிழக்கு விவகாரம் குறித்து பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அவசரப்பட்டுக் கருத்துக்களை வெளியிட்டிருப்பது, சமாதான விரும்பிகள் மத்தியில் கவலையைக் கொடுப்பதாகவே இருக்கின்றது.

புலிகளை ஒடுக்க வேண்டுமென்று இன்றைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மட்டுமல்ல. அவருக்கு முன்பிருந்த பிரதமர்கள், ஜனாதிபதிகள் ஆகியோர் கூட சூளுரைத்திருந்தனர். ஆனால் அவர்களால் தாம் கூறியவற்றைச் சாதிக்க முடிந்ததா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

தேர்தல் வெற்றிகளைப் பெற வேண்டுமென்ற ஒரே காரணத்துக்காக முள்ளின் மேல் வீழ்ந்த சேலையைப் போலிருக்கும் இனப்பிரச்சனை பற்றியும், அதில் சம்பந்தப்பட்டோர் பற்றியும் அவசரப்பட்டு கருத்துக்களை வெளியிடுவது, எவ்வகையிலும் ஆரோக்கியமான அரசியலாக இருக்கமுடியாது.

வடக்கு-கிழக்கில் கடந்த 17 வருடகாலமாக இடம் பெற்று வரும் யுத்தம் கூட, அரசியல் ரீதியான அணுகுமுறைகள் பலவீனமுற்றதாலேயே இன்று பூதாகரமான கட்டத்தை எட்டிவிட்டுள்ளது.

இப்பூதாகரமான நிலையிலிருந்து விடுபடுவதற்கு அரசியல் மதியூகத்தை தகுந்த வகையில் பாவிக்க வேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.

இன்றைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் கூட ஒரு காலத்தில் பிரதமராக இருந்தவர். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தம் நடத்தப்படுவதை அவரும் தமது ஆட்சிக் காலத்தில் நியாயப்படுத்தியே இருந்தார்.

ஆனால் இலங்கையை 17 ஆண்டுகள் வரை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சியினாலோ, அதன் பலம் வாய்ந்த தலைவர்களினாலோ தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்கவும் முடியவில்லை. மறுபுறத்தே இலங்கையின் இனப்பிரச்சனைக்கும் உறுதியான அரசியல் தீர்வைக் காணமுடியவில்லை.

அரசியல் சிந்தனைகள், அச்சிந்தனைகளை வெளிப்படுத்தும் முறை என்பவை நிதானமானவையாகவும், பொறுப்புள்ளவையாகவும் இருக்கவேண்டும்.

இதைவிடுத்து ஆத்திரங்கொண்ட நிலையிலும், உணர்ச்சிவசப்பட்ட முறையிலும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் அணைக்கப்பட வேண்டிய பிரச்சனைகளை மேலும் கொளுந்து விட்டெரியச் செய்பவையாகவே இருக்கும்.

புதிதாகப் பதவியேற்கவிருக்கும் பாராளுமன்ற ஆட்சி அர்த்தமுள்ளதாகவும், இலங்கையில் ஜனநாயகத்தை மீளவும் கட்டியெழுப்பி அச்சமோ, அச்சுறுத்தல்களோ இல்லாத ஓர் அரசியல் சூழலைக்கட்டி எழுப்பவேண்டுமெனறே நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் இந்த எதிர்ப்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிகுறிகள் எவ்வகையிலும், அல்லது எவ்வடிவிலும் தோற்றம் பெறாதிருப்பதையே அவதானிக்கமுடிகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



தமிழ் அழகானது, சுவையானது, கம்பீரமானது. ஆனால் நம்ம பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் தமிழை அழகுறப் பேசுவதற்குப் பதிலாக அதனைக் கொச்சைப்படுத்துகிறார்கள். இதனால் தமிழ் மக்களின் அபிமானத்தையல்ல; அதிருப்தியைச் சம்பாதிக்கிறார்கள் அவர்கள். தமிழைச்சரியாகப் பேசமுடியாவிட்டால் வாயை மூட வேண்டியதுதான். ஆனால் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுக்கிறார்கள் இந்த உளறுவாயர்கள்.

யானைக்கும் அடிசறுக்கும். உலகக்கிண்ண சம்பியனான அவுஸ்திரேலியா இந்தியாவிடம் கென்யாவில் நொக் அவுட்டாகி விட்டது. என்னசெய்வது? உலக மகா ஒலிம்பிக் பந்தயத்தை நடத்தி முடித்த களைப்பில் வந்த அவுஸ்திரேலிய அணி, கென்யாவில் இளம் இந்திய அணியிடம் மண்கவ்விக் கொண்டது.

தென்னிலங்கை அரசியல் மேடைகளில் இசைக்குழுவினருக்கே அதிக மவுசு. சகல அரசியல் கட்சிகளும் கூட்டங்களை நடத்தும் போது இசைக்குழுக்களையும் மேடையேற்றி விடுகின்றன. சனங்கள் சலித்துப்போன பேச்சுக்களைக் கேட்டு ஓடிவிடாது இறுதிவரை நிற்கவேண்டுமென்றுதான் இந்த இசை ஏற்பாடு.

ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் யுத்தகளத்தில் போரிட்டு உயிரிழக்கிறார்கள். காயமடைகிறார்கள். ஆனால் யுத்த கோஷம் போடும் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் ஆயுதங்களுடன் சண்டித்தனம் செய்கிறார்கள். வன்முறைகலாசாரம் நாட்டைப்படாதபாடு படுத்துகிறது.

வெள்ளவத்தை மார்கெட் வியாபாரிகள் மரக்கறி வியாபாரம் மட்டுமல்ல தமிழ்ப்பெரு மக்களுக்கு சமயக் கொண்டாட்டங்களுக்கு வாழையிலை, மாவிலை, கரும்பு விற்றுக் கூட பிழைத்துக் கொள்கிறார்கள். சில சிங்கள வியாபாரிகளுக்கு சமயப் பண்டிகைகள், விரதங்கள் அனைத்துமே அத்துப்படி.

**‘அவ தந்திரம் தனக்கு அந்தரம்’ என்பார்கள். அடுத்த வீட்டில் வாழ்ந்த ஒண்டிக்கட்டையான பூசாரியாரை ஏமாற்றிக் கொலை செய்து அவருடைய சொத்தைத் தனதாக்கிக் கொள்ளத் திட்டமிட்ட பேராசைக்காரன் தான் செய்த பாவத்தை மன்னிக்கும்படி பாதிரியாரிடம் கோரிக்கை விடுத்தான்.**

**அவனால் ஏமாற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பூசாரியின் உருவமாக பாதிரியாரே தோற்றமளித்தார். தன்னைத்துரத்தி வரும் பூசாரியாரின் ஆவியிடமிருந்து தப்பிப் பிழைக்க ஊரைவிட்டே ஓட முயன்ற பேராசைக்காரனுக்கு என்ன நடந்தது....? மாயாஜாலக்கதை மன்னர் இருகூரான் தரும் இன்னொரு இருவாரத் தொடர்.**

# பட்டத்திரியின் வட்டக்குடை



“ஜெபியும்; கர்த்தரின் கருணை கிடைக்கிறவரை அவரின் நாமத்தை ஜெபியும். நாமும் உம் பாவத்துக்காக ஜெபிக்கிறோம். ஜெபத்தை ஏற்று மன்னித்தருள வேண்டியவர் கர்த்தர் ஒருவர் தான்!” என்று ஆறுதல் சொன்ன போதுதான் அந்த முகத்தில் பாதிரி யாரின் வடிவம் தெரிந்தது.

“ஏதாவது ஒரு பரிகாரம் சொல்லுங்க பாதர்! எனக்கு எந்த முகத்தைப் பார்த்தாலும் பயமாக இருக்கிறது...”

“அப்படியானால் பட்டத்திரியின் ஆன்மாவுக்கு சாந்தி கிடைக்கிறவரை, உமது மனச்சாந்திக்காக வேறு ஊர் போய் வாருங்களேன்.....”

மாதா கோவிலை விட்டு வெள்ளி மலை திரும்பும் வழியில், ஒரு திருப்பத்தில், குடும்பத்தினரை நிறுத்தி விட்டு வண்டிக்கு சொல்லி விட்டு வந்தார் ஐஸாக்.

“எதுக்குப்பா வண்டி?” என்றான் மூத்த மகன் கேபிரியல்.

“கொஞ்ச நாள் நாமெல்லாரும் வல்லநாடு போய் பாட்டி வீட்லே தங்கப் போறோம்!”

இளைஞனான கேபிரியலுக்கும் அவன் தங்கை மேரிக்கும் இந்தச் செய்தி இனித்தது.

சதா வெள்ளிமலை அடிவாரத்தி லேயே மண்ணைக் கொத்துவதும்; களை வெட்டுவதும்; ஏதேதோ பயிர்களை போட்டுச் சாகுபடி செய்வதும்; அவற்றைச் சந்தைப் படுத்தி நாரணன் துறைக் கடை வீதியில் மளிகைப் பொருட்கள் வாங்குவதுமே தொழிலாக இருந்த எந்திரமயம்.... ஒரு சில நாட்களுக்காவது வல்லநாடு போய் சொந்த பந்தத்தோடு அளவளாவிமிருக்கலாமே என்கிற ஆவலில் அவர்களின் மனங்கள் துள்ளிய போது–

தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாம் எடுத்துத் தனித்தனியாக அப்பாவும் அம்மாவும் மூட்டைக் கட்டிக்கொண்டிருந்தது திணறச்செய்தது.

“என்னம்மா...? என்ன ஆச்சு? எல்லாத்தையும் எதுக்காக இப்படிக் கட்டிக் கட்டி வைக்கறீங்க?” மகள் மேரி கேட்டாள். பிலோமினாவுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

“என்னவோ தெரிலேம்மா. உங்கப்பா வெட்டச் சொன்னா வெட்டறதையும் கட்டச் சொன்னா கட்டறதயும் தவிர நான் வேறென்னத்தைக் கண்டேன்?”

பெருமூச்சு விட்டாள் பிலோமினா.

**அ**ன்று இரவு அந்த வீட்டில் யாருமே தூங்கவில்லை. விடிகாலையில் வெள்ளி மலையை விட்டுப் புறப்பட்டால்தான் சூரியன் எழுவதற்குள் நாரணன் துறையைக் கடக்க முடியும்? அதற்குப் பிறகு வல்லநாடு போய்ச் சேர ஒரு பகல் பயணம்!

எனவே எவ்வளவு சீக்கிரம் இடம் பெயர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அங்கிருந்து

**இருகூரான்**

புறப்படுகிற ஆயத்தத்தில் இருந்தார்கள் அனைவரும்.

கட்டி வைத்த பொருட்கள் முற்றத்தில் இருந்தன. விடிகிறபோது தெரிகிற வெள்ளி வெளிச்சத்தைக் கூடப் பிரபஞ்ச இருள் மூடிப் போர்த்துக் கொண்டிருந்தது!

“என்ன ஆச்சு இன்னிக்கு? ஏன் இந்த இருட்டு? வண்டிக்காரரையும் காணலே!” என்று முனகினார் ஐஸாக், அவருக்குப் பயம்–

‘முன் தினத்தைப் போல் அந்த வட்டக் குடை வாசல் வழியாகப் போகுமோ? இன்றும் அதைக் காண நேரிட்டால் எல்லாச் சுறுசுறுப்பும் போய் விடுமே!’

ஐஸாக்கின் நாக்கு உலர்ந்தது.

எங்கிருந்தோ– ஒரு சிலிர்காற்று வந்து இதமாகத் தடவியதைப் போல் உணர்வு. திரும்பிப் பார்த்தார். யாரும் அருகில் இல்லை! ஆனால் சந்தனமும் பன்னீரும் மணக்கிறது?

நாசியைத் தேய்த்துக் கொண்டார், ஐஸாக்.

கேபிரியல் முன்னே ஓடினான்!

முற்றத்தின் படலையை அகலமாகத் திறந்து வைத்தான்.

“அப்பா.... அப்பா! வண்டி வருது!”

அவன் இப்படி கூவிய பிறகு எல்லாரிடமும் ஒருவிதச் சுறுசுறுப்புத் தெரிந்தது.

“என்னய்யா முனீஸ்வரன் நீரு? சாவதானமா பீடியைப் பிடிச்சுகிட்டு வரீரு?”

“இன்னிக்கு அமாவாசை ஆச்சே! அதான் வழியிலே திக்குத் தெரியாம திணறிகிட்டு வந்தேன். சீக்கிரம் எடுத்து வையுங்க! சீக்கிரம் போய்ச் சேர்ந்துடுவோம்!” என்று வண்டியில் அடுக்குவதற்கு வசமாகத் திருப்பி நிறுத்தினான் வண்டிக்காரன்.

“சீக்கிம்.... சீக்கிரம்! ஆளுக்கு ஒண்ணை எடுத்து வைச்சுத் தொலையுங்க!” கத்தினார் ஐஸாக்.

வைக்கப்பட்ட பிறகு வண்டி புறப்படுகிற போதும் தொண தொணத்துக் கொண்டே இருந்தார் அவர். மன வேகத்தோடு வண்டி வேகம் அண்டவில்லை!

“ஏண்ணே? பீடி குடிக்க இதுவா நேரம்! தூக்கி அந்த எழவைப் போட்டுட்டு விரட்டுங்கண்ணே!” என்றான் கேபிரியல், அப்பாவின் தொணதொணப்புத் தாங்க முடியாமல்.

வண்டியோட்டி காளையின் வாலை வளைத்தான். பீடி நெருப்பை அதன் பின்பக்கம் தேய்த்தான்! அவ்வளவுதான். உடனே காளை வேகம் எடுத்து, தாறுமாறாக ஓடியது. வழி தப்பி.... திசை கெட்டு... ஏதோ ஒரு குறுக்கில் புகுந்து.....

நுகத்தடி விட்டுத் தன்னை விடுவித்துக் கொண்டு.... அது நழுவிய மறுகணம்..

அத்தனைபேரும் தலை குப்புற விழுந்து தண்ணீருக்குள் தாழ்ந்து கொண்டிருந்தார்கள்! ஐஸாக் மட்டும் திமிறி எழுந்தார். அடையாளம் பார்த்தார்! கேசவன் பட்டத்திரியைக் கட்டி இறக்கிய அதே பாழ்கிணறு! தப்பிக்கத் தட்டுத் தடுமாறி நீந்தினார். தலையையும் தூக்கினார். ஆனால் வண்டிக் குடையா அல்லது பட்டத்திரியின் ஓலைக் குடையா எதுவென்று புரியாமல், அவர் மீண்டும் உள்ளேயே அழுத்தப் படுவதை உணர்ந்தார்.

அப்புறம்?

–வேறு எந்த உணர்வுமில்லை!

**கை** நீட்டிப் பணம் வாங்கி ஒப்புக் கொண்டபடி அடிவாரத்து முனீஸ்வரன் வந்து வண்டியை வளைத்தபோது ஐஸாக்கின் வீட்டு முற்றப் படலை அகலமாகத் திறந் திருந்தது. சாவதானமாக இறங்கி வீட்டைப் பார்த்தான். வீடு பூட்டப்பட்டிருந்தது.

தலையைச் சொறிந்தான் அவன்.

“விடியக்காலை வரச் சொல்லிட்டு எங்கே போனாரு ஐஸாக்கு? ஒருத்தரையும் காணலியே” என்று முனகிக் கொண்டிருந்தான் அவன்.

எல்லோரும் எங்கே போனார்கள் என்று அந்தப் பகுதியில் தெரிந்தவர்களை எல்லாம் விசாரித்தான்.

ஐஸாக்கைப் பற்றியோ அவர் குடும்பத்தைப் பற்றியோ யாருக்கும் தெரியவில்லை. ஏன்? வெள்ளி மலையில் அவர்களைப் பற்றி மட்டுமில்லை, கேசவன் பட்டத்திரி பற்றிய விவரமும் வெகுநாட்கள் தெரியவில்லை.

(முற்றும்)

## ஷக்கலக்க பேபி தத்தெடுத்த பேபி



**பி**ரபஞ்ச அழகிப் பட்டம் பெற்ற சுஷ்மிதா சென்னை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். அதை விட ‘ஷக்கலக்கபேபி....’ பாட்டில் ஆட்டம் போட்ட சுஷ்மிதா என்றால் உடனே ஞாபகத்திற்கு வந்து விடுவார்.

இப்போது அவர் ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டார். இன்னமும் கல்யாணமே ஆகவில்லை என்கிறீர்களா?

பெற்றால் தான் அன்னையா? இந்த ஷக்கலக்க பேபி, அண்மையில் இன்னொரு பேபியைத் தத்தெடுத்துள்ளார்.

சுஷ்மிதா சென் இப்போது மிகவும் மாறி விட்டார். அமைதி, சமூகசேவை என்று அடிக்கடி பேசிக் கொள்கிறார். ஓர் அன்னை தெரேசா மாதிரிவாழ வேண்டும் என்றும் கூறுகிறார்.

குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்து வரும் சுஷ்மிதா இப்போதைக்குத் திருமணம் செய்ய மாட்டாராம்.

## ஒரு கோப்பிக்கு ஒன்று இலவசம்

**இ**த்தாலியில் உள்ள புகழ் பெற்ற கடற்கரைப் பகுதி ஒன்றின் அருகே இருக்கிறது ஒரு கோப்பிக்கடை. கடற்கரைக்குப் பக்கமாக இருப்பதால் காதல் ஜோடிகள் கூட்டம் இந்தக் கடையில் அதிகம்.

ஞாயிற்றுக் கிழமை என்றால் கூட்டம் இன்னும் அதிகம். அண்மையில் இந்தக் கடையைப் பற்றி சூடான செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

அப்படி என்ன செய்தி என்கிறீர்களா? அந்தக் கடையில் எக்கச்சக்கமான ஆணுறைகள் இருக்கிறதாம். ஒரு கோப்பி குடித்தால் ஆணுறை ஒன்று இலவசமாம்.

“கடையில் தான் இவ்வளவு கூட்டம் கூடுகிறதே. இதற்கு மேலும் கூட்டம் சேர்ப்பதற்காகவா இப்படி இலவச இணைப்பு?” என்று அந்தக் கடைக்காரரைக் கேட்தற்கு,

“விற்பனையை அதிகரிப்பதற்காக அல்ல. மக்களை எய்ட்ஸ் நோயிலிருந்து பாதுகாக்க எமது கடையினாலான சிறு உதவி!” என்று கூறியுள்ளார்.

உண்மையிலேயே இது ஓர் உன்னதமான உதவிதான்.

## அரசியலுக்கு வரும் செல்ஸியா



**அ**மெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் முடிவடைகிறது. இந்த நிலையில் புதிய செய்தியொன்று அங்கு பரபரப்பாகப் பரவி வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மகள் செல்ஸியா அரசியலில் குதிக்கப் போகிறார் என்பதுதான் அது.

அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகத்தான் செல்ஸியா தனது தந்தையுடன் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று வருகிறார் என்றெல்லாம் பேசப்படுகிறது.

அமெரிக்கா செல்லும் வெளிநாட்டு அரசியல் தலைவர்களை வரவேற்பதிலும் மிருந்த ஆர்வம் காட்டி வருகிறார் செல்ஸியா.

கல்லூரியில் படித்து வரும் செல்ஸியா, படிப்பைத்தவிர ஏனைய விஷயங்களிலும் ஆர்வம் உள்ளவர். அரசியல் பற்றித் தெரிந்து கொள்ள அடுத்த ஆண்டில் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அரசியல், சரித்திரம் போன்ற பாடங்களைக் கற்றுக் கொள்ளப்போகிறார். இதனை வெள்ளை மாளிகை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

தனது தாயாருடன் இருக்கும் நேரத்தை விட தந்தையுடன் தான் அதிக நேரத்தைச் செலவிடுகிறார் செல்ஸியா. இதற்குக் காரணம் அரசியல் ஆர்வம்தான் என்று பலர் கருதுகிறன்றனர்.

செல்ஸியாவின் அரசியல் பிரவேசம் பற்றி வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறும் போது,

“செல்ஸியாவின் இலட்சியமே மருத்துவராவதுதான். அவர் அரசியலில் நுழைவதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனாலும் அவர் தற்போது அரசியலில் காட்டி வரும் ஆர்வம் தான் இப்படிச் சர்ச்சைகளைக் கிளப்பி இருக்கிறது!” என்று தெரிவித்துள்ளார்.

## நினைத்தது ஒன்று நடந்தது வேறு

**ர**ஷ்யத் தலைநகர் மொஸ்கோவைச் சேர்ந்த ஒருவர் தன் வீட்டுக் கதவில் வெடிகுண்டு ஒன்றைப் பொருத்திக் கொண்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக வெடித்து இறந்து விட்டார்.

எதற்காக இவர் கதவில் வெடிகுண்டைப் பொருத்த முற்பட்டார் தெரியுமா?

இவரது மனைவியைக் கொலை செய்வதற்காகவே.

ஏன் மனைவியைக் கொலை செய்ய வேண்டும்?

சந்தேகம் தான் காரணம். இவரது மனைவிக்கும், இவர்கள் வசிக்கும் வீட்டுச் சொந்தக்காரருக்குமிடையே கள்ளத் தொடர்பு இருக்கும் என்று சந்தேகித்து, அவர்களைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டார்.

அதன்படி கதவில் வெடிகுண்டு பொருத்தும்போது, அவரே பரிதாபமாக வெடித்துச் சிதறிவிட்டார்.

## பதக்கம் பெற்ற முதல் பெண்கள்



**ந**டந்து முடிந்த ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக சுதந்திகா வெண்கலப் பதக்கம் வென்றார். இலங்கையின் சார்பாக பல ஆண்டுகளுக்குப் பின் கிடைத்த ஒலிம்பிக் பதக்கம் இது. அத்துடன் இலங்கை சார்பாகபெண் ஒருவர் பெற்ற முதல் பதக்கமும் இதுதான்.

இலங்கையைப் போல் இந்தியாவும் இம்முறை ஒரேயொரு ஒலிம்பிக் பதக்கத்தைப் பெற்றது. பளுதூக்கும் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார் கர்னம் மல்லேஸ்வரி.

25 வயதான கர்னம் மல்லேஸ்வரி ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர், மல்லேஸ்வரியுடன் கூடப்பிறந்தவர்கள் நால்வர். நால்வரும் பெண்கள். மல்லேஸ்வரியையும் சேர்த்து ஐந்து பெண்பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூவர் பளுதூக்கும் வீராங்கனைகள்.

சுசந்திக்காவைப் போல் மல்லேஸ்வரியும் ஒரு பெருமையைப் பெற்றிருக்கிறார். இந்தியா சார்பாக ஒலிம்பிக் பதக்கம் பெற்ற முதல் பெண் மல்லேஸ்வரிதான்.

14 வயதில் இருந்தே பளுதூக்கும் பயிற்சி பெற்ற மல்லேஸ்வரியும் இலங்கைக்குப் பெருமை தேடித் தந்த சுசந்திக்காவும் இனிவருக்காலங்களில் அழிக்க முடியாத சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

# தகவல் பெட்டி



## சிகிச்சை பெறும் குரங்குக் குட்டி

மருத்துவமனையில் சிறுகுழந்தை ஒன்றுக்கு சிகிச்சை அளிப்பது போல், இங்கு 'ஒராங் உட்டான்' என்ற சிறியரகக் குட்டிக்கு மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைஅளிக்கப்படுகிறது.

இப்பொழுதெல்லாம் சில நாடுகளிலுள்ள அடர்த்தியான காடுகளில் தீப்பிடித்துக்கொள்கிறது. இயற்கையில் காட்டுத் தீ ஏற்படுவது குறைவு; ஆனால் மனிதன் செயற்கையாகவே காடுகளுக்குத் தீமூட்டி விடுகிறான். பெரும்பாலும் சுயநலநோக்கோடுதான் தீ மூட்டப்படுகிறது.

காடுகளில் தீ மூண்டால் சுலபமாக அத்தீயை அணைத்துவிட முடியாது. மிக வேகமாகப் பரவும் தீயினால் இக்காடுகளில் வாழும் சகல வன விலங்குகளும் கருகிப் போகும்.

போர்ணியோ நாட்டில் சில காலத்துக்கு முன்னர் ஏற்பட்ட காட்டுத்தீயில் பல விலங்கினங்கள் கூண்டோடு அழிந்து போயின. போர்ணியோவில் காணப்படும் ஒராங் உட்டான் குரங்கினமும் பெருவாரியாக மாண்டு போயின. தீயில் காயம் பட்ட ஒராங் உட்டான் குட்டி ஒன்றினை எப்படியோ கண்டெடுத்து வந்து, அதற்கு அந்நாட்டின் வனரிசிற் சம்போஜா சரணாலய மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கின்றனர்.



## உயிருக்குப் போராடும் மீனுக்கு உதவி


சமீபத்தில் மக்காவ் நாட்டில் பதிவானது தான் இந்தப் படம். தென் சீனாவில் உள்ள 'கான்டோன்' ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள மிகச்சிறிய நாடுதான் மக்காவ். இந்த நாட்டின் சனத்தொகை சுமார் 5 இலட்சம்.

அதிக உல்லாசப்பயணிகளைக் கவர்ந்திருக்கும் இந்நாடு, சூதாட்டத்திற்குப் பெரும் பேர் போனது.

இங்கு சமீபத்தில் ஏற்பட்ட தாழமுக்கத்தினால்

12 மீட்டர் நீளமுள்ள 'கூரே' என்னும் சுறா போன்ற பெரிய மீன் ஒன்று கரை ஒதுங்கி உயிருக்குப் போராடியது. இதைப் பார்த்த மீனவர்கள் அம்மீனை மறுபடி கடலுக்கு அனுப்பும் உதவியில் ஈடுபடும் காட்சிதான் இது.

(பட உதவி: அஹமட் நியாஸ்-கொரியா)



## பூசணிக் கொடி

தலையில் பூசணிக்காய் கொண்டையுடன் நடந்து வரும் இந்தக் கொடியிடையாளைப் பார்த்ததும், 'பூசணிக்கொடி தரையில் வந்ததெப்படி?' என்று பாடத் தோன்றும். அந்த அலங்கார (சிலருக்கு அது அலங்கோலமாகப்படலாம்) உடையுடன் அமெரிக்காவில் நடந்த ஃபாஷன் ஷோவில் ஒயிலாக வந்தார் இந்த அழகி.

புதிய படமொன்றின் பட வெளியீட்டிற்காக இந்த ஃபாஷன் ஷோ அண்மையில் நியூயோர்க் நகரில் நடத்தப்பட்டது.




## கண்ணிவெடிகள் எதிர்ப்பு

உலகின் பல பாகங்களிலும் நடைபெறும் போரால் பல மனித உயிர்கள் அநியாயமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

போரில் கண்ணிவெடிகளால் பலர் கால்களை இழந்து அங்கவீனர்களாகி வருகின்றனர். சர்வதேச அளவில் கண்ணிவெடிகள் எதிர்ப்பு தினம் அண்மையில் கடைப்பிடிக்கப்பட்டது.

கண்ணி வெடிகளில் சிக்கி கால்களை இழந்தவர்களுக்கு உதவுவதற்காக ஃபிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரம் முன்பாக தமது பாதணிகளை ஃபிரான்ஸ் நாட்டு மக்கள் மலைபோல் குவித்துள்ளனர்.



முரளி-பிரதிக்ஷா
படம்: மனுநீதி

## சம்மதம் கொடுத்தார் ஷாலினி

அஜித்-ஷாலினி திருமணத்திற்கு முன் ஷாலினி ஒப்புக் கொண்ட படங்களில் ஒன்று 'பிரியாத வரம் வேண்டும்'. மற்றப் படங்களை எல்லாம் திருமணத்திற்கு முன் நடித்துக் கொடுத்து முடித்து விட்டார் ஷாலினி.

பிரசாந்த் ஜோடியாக ஷாலினி 'பிரியாத வரம் வேண்டும்' படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது படத்தின் இயக்குனர் கமலுக்கு விபத்து ஏற்பட்டது.

இதனால் படப்பிடிப்புத் தள்ளிப் போனது. ஷாலினியின் திருமணமும் நடந்து முடிந்து விட்டது. அஜித்-ஷாலினி தேனிலவை முடித்துக் கொண்டு திரும்ப, இவர்களுக்காக காத்திருந்தார் இப்படத்தின் தயாரிப்பாளர்.

திருமணத்தின் பின் ஷாலினி நடிக்க மாட்டார் என்று எடுத்த தீர்மானத்தைப் படம் வெளிவருவதற்காகக் கொஞ்சம் தளர்த்தியிருக்கிறார் ஷாலினி. இப்போது அப்படத்தை நடித்துக் கொடுக்க சம்மதம் தெரிவித்து விட்டார்.

## நீர்வாணமாகக் கமல்

புதுமையாகச் செய்யவேண்டுமென்ற வெறியில் படத்துக்குப் படம் வித்தியாசம் காட்டி வருகிறார் கமல். கலைப்புலி தாணு தயாரிக்க சுரேஷ் கிருஷ்ணா இயக்கும் 'ஆளவந்தான்' படத்திலும் கமல் ஏற்றிருப்பது வித்தியாச வேடம் தான்.

'ஆளவந்தான் படத்தில் விளம்பரத்திற்காக சமீபத்தில் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. அதற்காக கமல் மொட்டையடித்து, புஜத்தில் பச்சை குத்தியபடி நிர்வாணமாக போஸ் கொடுத்துள்ளார்.

ஹொலிவுட்டைக் கலக்கிய 'டெர்மினேட்டர்' ஆங்கிலப் படத்தின் முதல் பாகத்தில் அர்னோல்ட் ஸ்வாஸ்னேக்கர் தலையைக் குனிந்தபடி உடலில் ஆடையேதுமின்றி தோன்றுவார். அதேபோன்று 'ஆளவந்தான்' படத்திலும் கமல் ஒரு காட்சியில் தோன்றுகிறார்.

## அம்பலமான அறை சமாச்சாரம்

திரையுலக மறுபக்கம் (170)

தமிழ்நாட்டிலிருந்து மயன்

தமிழ்த்திரையுலகில் கதாநாயகிகள், கவர்ச்சி நாயகிகள் என்று பலர் இருந்தாலும் உலகப் புகழ்பெற்ற இத்தாலி நடிகையின் சுவர்ணமான மந்திரப் புன்னகை அரசியின் பெயரில் முடிவடையும் படத்தில் அறிமுகமான இந்த நடிகைக்கு இப்போது தனி மவுசு.

அதனால் தானோ என்னவோ காந்தமான இயக்குநர் ஒருவர் தற்போது இயக்கி வரும் 'நட்சத்திர'மான படத்தில் இந்த நடிகையை சிறிய வேடம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தம் செய்தார்.

நடிகையை இயக்கும்போதெல்லாம் 'கட்டிப்புடி கட்டிப்புடடா' என்ற பாடல் இயக்குநரின் மனதில் ஒலித்தபடி இருக்கும். நடிகை முதல் நாள் நடித்த பின் வேறொரு படப்பிடிப்பில் கலந்து கொண்டுவிட்டுத் தான் தங்கியிருக்கும் ஹொட்டலுக்குச் சென்றார்.

ஹொட்டலுக்குப் போன நடிகை தூங்கிக் கொண்டிருந்தபோது அறைக் கதவைத் தட்டினார் காந்த இயக்குநர். கதவைத்திறந்த நடிகைக்கு அதிர்ச்சி. இருப்பினும் இயக்குநராயிற்றே. வரவேற்று உள்ளே அமரவைத்தார் நடிகை.

உள்ளே சென்று அமர்ந்த இயக்குநர் படத்தைப் பற்றியோ, படத்தின் கதையைப் பற்றியோ பேசாமல் மோகத்தின் தாகத்தைப் பேசி வழிந்தார்.

இந்த விஷயத்தில் என் என்னுமுன்பே என்னென்னயாகி விடும் நடிகைக்கு அன்று 'மூட்' நன்றாக இல்லை. எனவே 'எனக்குத் தூக்கம் வருகிறது. நாளைக்குப் பார்க்கலாம்' என்று சூசகமாகச் சொல்லி அனுப்பி விடப்பார்த்தார்.

இருப்பினும் இயக்குநர் கேட்பதாக இல்லை. உடனே நடிகை அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருந்த தனது சிகையலங்காரப் பெண்ணிடம் சென்று ஏதோ கிசுகிசுத்தார்.

சிறிது நேரத்தின் பின், சிகையலங்காரப் பெண் இயக்குநரிடம் வந்து, 'அம்மா உங்களைப் போகச் சொல்லிட்டாங்க' என்று சொல்ல வேறு வழியில்லாமல் இடத்தைக் காலி பண்ணினார் இயக்குநர்.

மறுநாள் படப்பிடிப்புக்குச் சென்றார் நடிகை. முந்தின இரவு ஏமாந்து போன கோபத்தில் வேண்டுமென்றே நடிகையைக் காக்க வைத்து, விட்டு, வேறு காட்சிகளைப் படமாக்கினார் இயக்குநர்.

காத்துக் காத்துப் பொறுமையிழந்த நடிகை, முந்தின இரவு ஹொட்டலில் நடந்ததை படப்பிடிப்புத்தளத்தில் எல்லாருக்கும் பகிரங்கப்படுத்தி விட்டார்.

## மினி சினி

★ அஜித்-ஜோதிகா நடிக்க 'முகவரி' படத்தை இயக்கிய துரை, அடுத்து இயக்கும் படத்திற்கு 'காதல் சடுகுடு' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் விக்ரமும் மாதவனும் இணைந்து நடிக்கிறார்கள்.

★ பாண்டியராஜன் இயக்கிய 'டபுள்ஸ்' படத்தைத் தயாரித்த ராஜன், அடுத்த படத்தைத் தொடங்கி விட்டார். இந்தப்படத்தில் பார்த்திபன்-தேவயானி ஜோடியாக நடிக்கிறார்கள்.

★ கன்னடப்படங்களில் நடித்து வரும் இஷா கோபிகர், இந்தியில் ஹ்ரித்திக் ரோஷன் கதாநாயகனாக நடித்து அண்மையில் வெளியான 'பிஷா' படத்தில் கதாநாயகியின் தோழியாக நடித்துள்ளார்.

★ இப்போதெல்லாம் படங்களில் ஒரே ஒரு பாடல் காட்சியில் முன்னணி நாயகிகள் நடனமாடுவது சாதாரண விஷயம். அர்ஜுன்-அபிராமி நடிக்கும் 'வானவில்' படத்தில் ரவளி ஒரு பாடல் காட்சியில் நடனமாடியுள்ளார்.

★ மணிரத்னம் தயாரிக்க, அவரது உதவியாளர் அழகப் பெருமாள் இயக்கும் 'டும் டும் டும்' படத்தில் மாதவன் கதாநாயகனாக நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக ஜோதிகா நடிக்கிறார்.

★ சிரஞ்சீவி ஜோடியாக சிம்ரான்-சங்கவி இணைந்து நடிக்கும் தெலுங்குப் படம் 'மிருகராஜ்'. இப்படத்தில் சிரஞ்சீவிக்கு இணையாக சிங்கம் ஒன்றும் நடித்து வருகிறது.

★ ராமராஜன் தயாரித்து நடிக்கும் 'சீறி வரும் காளை' படத்தில் 'சேது' அபிதா கதாநாயகியாக நடித்து வருகிறார். இரண்டாவது நாயகியாக கௌசல்யாவை நடிக்க வைக்கப் போகிறார்கள்.

★ அஜித்குமார் சீக்கும் மேற்பட்ட கெட்-அப்களில் நடித்து வரும் படம் 'சிட்டிசன்'. இதில் இவருக்கு ஜோடியாக நடிக்கும் சமீரா ரெட்டி 'கலைவ்' இசை அல்பம் ஒன்றில் நடித்திருக்கிறார்.



கமல்
படம்: தெனாலி



ஆகாஷ்-திவ்யாஸ்ரீ-கணேஷ்-பார்வதி
படம்: பெண்கள்

## கவர்ச்சியால் பறிபோன வாய்ப்பு

வசுந்தரா தாஸின் அறிமுகம் என்னவோ 'ஹேராம்' படத்தின் மூலம் தான். இருப்பினும் 'ஷக்கலக்க பேபி' பாடல்தான் இவருக்குப் பெரும் புகழைக் கொடுத்தது. 'ஹேராம்' படத்தின் பின் இவரைப் படங்களில் காணமுடியவில்லையே தவிர, பாடல்களில் இவர் குரலைக் கேட்கக் கூடியதாகவுள்ளது.

இவர் 'ஹேராம்' படத்தில் 'நெருக்கமாக' நடித்ததால் புதிய படமொன்றில் நடிக்கும் வாய்ப்பை இழந்தார். தற்போது தமிழகமெங்கும் ஓடிக் கொண்டிருக்கும் 'பாரதி' படத்தில் செல்லம்மாளாக நடிக்க வசுந்தரா தாஸைத் தெரிவு செய்தார் இயக்குநர் ஞானராஜசேகரன்.

இந்த நேரத்தில் தேவயானியின் பெயரும் பரிசீலனைக்கு வந்தது. இருவரில் யாரைப் போடலாம் என்று குழம்பிய போது, உதவியாளர்கள் சிலர், வசுந்தரா தாஸ் 'ஹேராம்' படத்தில் கவர்ச்சியாக நடித்திருப்பதால் செல்லம்மா பாத்திரத்தைப் பாதிக்கும் என்று கூற, இயக்குநர் தேவயானியை நடிக்க வைத்துவிட்டார்.

பாரதியாக நடித்த 'ஷாஜி ஷிண்டே' இந்திப் படங்களில் வில்லனாக நடித்துள்ளார். பாரதியாக நடிப்பதற்கு இயக்குநர் ஞானராஜசேகரனால் முதலில் அணுகப்பட்டவர் யார் தெரியுமா? கமலஹாசன்.

## குட்டித் தளபதி பெய...

விஜய்-சங்கீதா தம்பதிக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு சங்கீதாவின் வீட்டார் விஜய்-சங்கீதாவின் பெயர்களை இணைத்து சஞ்சய் என்று பெயர் வைத்தார்கள்.

விஜயின் பெற்றோரான சந்திரசேகரன்-ஷோபா இருவரும் விஜய்-சங்கீதாவின் பெயர்களை இணைத்து ஜோசப் என்ற கிறிஸ்தவப் பெயரைச் சூட்டியுள்ளனர்.

## இசையமைப்பாளர்

...கம்' படத்தை இயக்கி நடித்த ரேவதியின் ...ஜிமேனன். அதன் பின் 'பாசமலர்கள்' படத்தை ...அப்படம் பெரிதாகப் போகவில்லை. சின்னத் ...ளம் செலுத்த ஆரம்பித்தார்.

... மறுபடி பெரியதிரைக்காக இவர் இயக்கி ... 'புதிய பார்வை'. இப்படத்தில் சுரேஷ் ...ஜோடியாக மலையாள நடிகை ஒருவர் நடிக்க...

...னனின் சின்னத்திரைத் தொடரான 'பூம் ...கா'வுக்கு இசையமைத்த கனில் மில்னர் இப் ... இசையமைப்பாளராகிறார். கனில் மில்னர், ...ருமானிடம் கீ-போர்ட் வாசித்தவர் என்பது ...

## ...ராஜ் நடிக்கும் ...மிஸ்டர் நாரதர்'

...டேயா சார்பில் யாதவ் தயாரிக்கும் புதிய ...நாரதர்'.

...கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் இவ...ாக திவ்யா உன்னி நடிக்கிறார். அப்பாஸ்-...னோடு ஜோடி.

... எம்.எஸ்.விஸ்வநாதன், விவேக், தேவன், ...ிஜம், அலெக்ஸ், கோவை சரளா, காக்கா ..., குயிலி, இந்து, மதன்பாப், பாரதி மற்றும் ...டிக்கின்றனர்.

...சையமைக்க, நிவாஸ் ஒளிப்பதிவு செய்கிறார். ...கதைக்கு, திரைக்கதை வசனம் எழுதி இயக்கு...ந்தம்பரம்.

...நடித்து அண்மையில் வெளியாகி வெற்றி ...ணோக்கண்ணு' படத்தின் பின் சத்யராஜ்-... இணையும் இரண்டாவது படம் இது. ...சீல் பாதி என்ற வாசகத்துடன் உருவாகும் ...பொங்கலுக்கு வெளியாகவுள்ளது.



ஜோதிகா-ஷப்ராணி முகர்ஜி
படம்: சிநேகிதியே

சினி விசிட்



# ரமேஷ் அரவிந்தின் 'வஞ்சம்'

தந்தையின் இறப்புக்குக் காரணமான இரண்டு தீயவர்களை மகன் வளர்ந்து பழிவாங்குவதை மையமாக வைத்து உருவான கன்னடப்படமொன்று தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

தமிழில் 'வஞ்சம்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தின் கதாநாயகனாக ரமேஷ் அரவிந்த் நடித்துள்ளார். இதில் ரமேஷ் அரவிந்திற்கு ஜோடியாக சுவேதா என்ற மும்பாய் அழகி நடித்துள்ளார்.

இப்படத்தின் கதை, திரைக்கதை அமைத்து இயக்கியுள்ளார் பிரசாத்.

# தயாரிப்பாளராகும் குஷ்பு

கார்த்திக்-பிரபுதேவா நடிக்கும் 'உள்ளம் கொள்ளை போகுதே', கார்த்திக்-சிம்ரான் நடிக்கும் 'அழகான நாட்கள்' ஆகிய படங்களை இயக்கி வரும் சுந்தர்.சி விரைவில் சொந்தமாகப் படமொன்றைத் தயாரித்து இயக்கத் திட்டமிட்டுள்ளார்.

இப்படத்தைத் தனது காதல் மனைவி குஷ்புவின் பெயரில் தயாரிக்கவுள்ளார். இதில் கதாநாயகனாக நடிக்க மாதவனை அணுகியிருக்கிறார்கள்.

# சூர்யா இயக்கும் 'நியூ'

'வாலி' படம் மூலம் பரபரப்பாக அறிமுகமாகி, 'குஷி' படத்தை வெற்றிப்படமாக்கியவர் இயக்குநர் எஸ்.ஜே.சூர்யா. இவர் தற்போது 'குஷி' படத்தை தெலுங்கில் இயக்கி வருகிறார்.

இது முடிவடைந்ததும் இவரது முதல் படநாயகன் அஜித்குமாரை வைத்து அடுத்த படத்தை இயக்கவுள்ளார். இதன் மூலம் இவர் தயாரிப்பாளராகவும் உயர்கிறார்.

இப்படத்திற்கு 'நியூ' என்று பெயரிட்டுள்ளார். முதலிரு படங்களைப் போன்று இப்படத்திற்கும் இரண்டெழுத்துப் பெயர். இப்படத்தில் பல புதிய விஷயங்கள் இருப்பதனால் தான் இந்தப் பெயராம்.

'வாலி'யில் வக்கிரம், 'குஷி'யில் ஈகோவைப்பற்றிச் சொன்ன சூர்யா இதில் குழந்தைத்தனங்களைப் பற்றிச் சொல்லப்போகிறார்.

இசை-தேவா, ஒளிப்பதிவு-முதலிரு படங்களிலும் பணியாற்றிய ஜீவா அல்ல, அவரது குரு பி.சி.ஸ்ரீராம். நாயகி-அநேகமாக ஜோதிகா.

# காதோடு சொல்லுகிறோம்

ஷாருக்கானின் காதல் மனைவியின் பெயரைக் கொண்ட நடிகையைப் பற்றித் தமிழ்த்திரையுலகம் புகைமூட்டமாக புகைந்து கொண்டிருக்கிறதாம். பொதுவாகப் படப்பிடிப்பு முடிந்ததும் நடிகர்கள், இயக்குநர்கள் தான் நடிகையைத் தமது அறைக்குள் அழைப்பார்கள். ஆனால் மேற்படி நடிகையோ படப்பிடிப்பு முடிவடைந்ததும் தானே வலியச் சென்று அவர்களது அறையில் ஆஜராகி விடுவாராம்.

ரீன் நடிகையை ஆட்டம் காண வைத்த 'ஜோதி'மயமான நடிகை இப்போது பயந்தால் ஆடிக் கொண்டிருக்கிறாராம். தெலுங்கு தேசத்தில் இருந்து 'பூமி' என்று தொடங்கும் கா நடிகை ஒருவர் வருகிறாராம். அவரது வரவுதான் இவரை ஆட்டம் காண வைக்கிறதாம்.

தனது மகனை நாயகனாகப் போடுவதாகச் சொல்லித் தற்போது வேறு ஒரு இளம் நாயகனை வைத்துப் படமெடுத்து வரும் இயக்குநர் மீது கடும் கோபத்தில் இருக்கிறாராம் நட்சத்திரக் குடும்பத்தின் தலைமை நடிகர். அண்மையில் கூட இயக்குநரின் இல்லத்திற்குச் சென்று, அவரது சட்டையைப் பிடித்து நாலு சாத்து சாத்தி விட்டு வந்தாராம்.

உயரந்த நடிகரின் அன்புப் பிடியில் இருக்கும் 'வாணி' நடிகைக்கு நடிகர் இடையிடையே தனது படங்களிலும் வாய்ப்புக்கள் வாங்கிக் கொடுப்பார். இப்போது நடிகை தான் தயாரிக்கும் படத்தில் உயர நடிகரை இலவசமாக நடித்துத் தரும்படி அன்புக் கட்டளை போட்டிருக்கிறாராம்.

# தாடிக் கார்த்திக்

பிலாக இயக்கத்தில் கார்த்திக் நடிக்கும் 'நம்பிக்கு ஒரு பாட்டு' படத்தின் பெயரை 'சீனு' என்று மாற்றிவிட்டார்கள்.

இப்படத்திற்காக நிஜத்தாடியுடன், பயங்கர முரடனாக நடிக்கிறார் கார்த்திக். அண்மையில் தனது 39வது பிறந்தநாளைக் கொண்டாடிய கார்த்திக் தாடியுடனேயே தோன்றினார்.

மலையாளத்தில் வெற்றிகரமாக ஓடிய 'பரதம்' என்ற படத்தின் தமிழ்ப் பதிப்புத்தான் 'சீனு'. சிறந்த நடிகருக்கான தேசிய விருதை மோகன்லாலுக்குப் பெற்றுக் கொடுத்த வேடத்தில் கார்த்திக் நடித்து வருகிறார்.

## ...பிரபுவைத் தடுத்த பாண்டி

...புகைப்படப்பிடிப்பாளர் ராஜன், முதலி...த்துத் தயாராகிக் கொண்டிருந்த குமரே...னைப்பார்த்து 'இப்படி போகக்கூடாது' ...ன்று கூறித் தடுத்தார். பின் அவர் குமரே...யின் காதில் ஏதோ கூறி, தான் சொல்லும் ... படிக்கட்டுமுறைக்குச் செல்லவேண்டாம ...று மறுபடி தடுத்தார்.

இதைக் கேட்ட குமரேசன், ராஜனைத் ...க்கிகொண்டு ஓடினார். இந்தக் காட்சி ...ாவி காத்த அம்மன்' படத்திற்காகப் பட...மாகியது. இதில் குமரேசனாக பிரபுவும், ...ாஜனாகப் பாண்டியராஜனும் நடிக்க ...மைந்தர் சோமசுந்தர் இயக்கினார்.

## ...கை விட்டார் காவேரி

...'வைகாசி பொறந்தாச்சு' படத்தின் ...க அறிமுகமாகி, அதன்பின் ஒரு ...டங்களில் நடித்தார் ஆங்கிலோ-இந்தியப் ...பெண்ணான காவேரி. பெரிய திரையில் ...ெதுவுமின்றியிருந்த இவர் சிலகாலத் ...ன் முன் சின்னத்திரையில் கால்பதித் ...தார்.

அண்மையில் இவரது இலண்டன் காதலன் ...யைக் கைவிட்டு வரும்படி கண்டிஷன் ...ட்டார். காவேரியும் கைவிட்டுவிட்டார். ...யை அல்ல காதலனை.

...ப்பில் > பிரசாந்த்-ஷாலினி

...ம் : பிரியாத வரம் வேண்டும்



பிரேம்-குஷ்பு-ராஜீவ்
படம்: குரோதம் 2

## அபூர்வ புகைப்படம்



**பு**கைப்படப்பிடிப்பாளர்கள் சிலர் தந்திரக்காட்சிகளை தமது கமராவுக்குள் நுழைத்து பெயர் வாங்கிவிடுவார்கள். அப்படங்களில் போலித்தனம் குடிகொண்டிருக்கும். ஆனால் நீங்கள் பார்க்கும் இப்படம் உண்மையான காட்சியாகும்.

பூனைகள் குட்டி போட்டால், தமது குட்டிகளை நான்கு தடவைகளாவது இடமாற்றம் செய்யும். பொதுவாக ஒவ்வொரு குட்டியையும் தனது வாயினால் கவ்விக் கொண்டு புதிய இடத்தில் கொண்டுபோய் பத்திரமாக வைக்கும். இதோ குட்டி ஒன்றை தாய்ப் பூனை தன் எஜமானருடைய வீட்டு மாடியிலிருந்து அருகிலுள்ள மரக்கிளைக்கு வாயில் கௌவிக் கொண்டு பாய்வதை அமெரிக்காவின் டென்னசி மாநிலத்திலுள்ள நொக்ஸ்வில்லி என்ற இடத்தைச் சேர்ந்த மிக்கி கிரீகர் என்ற படப்பிடிப்பாளர் இவ்வபூர்வமான படத்தைப் பிடித்துள்ளார்.

குட்டியை ஈன்று 21வது நாளில் தாய்ப்பூனை தன் முதலாவது குட்டியை இவ்வாறு வாயில் கவ்விக்கொண்டு மாடியிலிருந்து மரக்கிளைக்கு மிகவும் பத்திரமாகத் தாவியதைக் கண்டார். இதே மாதிரி தனது ஏனைய குட்டிகளையும் பூனை கவ்விக் கொண்டு தாவும் என்பதைத் தெரிந்து கொண்ட படப்பிடிப்பாளர் அத் தருணத்துக்காகக் காத்திருந்து இந்த அபூர்வமான படத்தைப் பிடித்திருக்கிறார்.

இப்படம் இன்று நேற்றுப்பிடிக்கப்பட்டதல்ல, 40 வருடங்களுக்கு முன்னர்-1960ம் ஆண்டு பிடிக்கப்பட்டது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

## ஏக்கம்

உயிர் ஓவியமே!
உன்னை எண்ணி
உள்ளத்தால்
உருகுகின்றேன்!
என் கனவுகளைக்
கவி வடிக்க
உன்னைத்தேடி
ஏங்குகின்றது
என் நெஞ்சம்!

ஆர். கோணேஸ்வரன்-
நுவரெலியா.

## கவிதை பி(இ)றக்கிறது

கருவுக்கு
உயிர்கொடுத்து
கற்பனைக்கு மேனிதந்த
கவிதை
***
வலியே இல்லாமல்
குமரியாகவே
பிரசவமான
கவிதை
***
கனவுகளை எல்லாம்
கசக்கிப் பிழிந்து
கண்விழித்து,
கலந்து வடித்தெடுத்த
கறுப்புக் கவிதை.
***
மேகம் இல்லாமலே
பெய்யும் அமுதமழை.
வானம் இல்லாமலே
தோன்றும் வட்டநிலா.
பேனா இல்லாமலே
பிறந்த பெரியகவிதை.
***
மனசு குளிரும்போது
புன்னகை சிந்தும்.
பூக்களை சொரியும்.
சமயத்தில் புயலாக மாறி
அக்கினியை
கொப்புளிக்கும்.
புதிர்க் கவிதை.
***
காலையில் குளிர்ந்து
கடுகம் பகல் சூடாகி
மாலையில் மயங்கவைக்கும்
மரபுக் கவிதை.
***
சமயத்தில் புரிந்ததுபோலவும்
தோன்றும்
புரியாதது போலவும்
தோன்றும்
புதுக்கவிதை.
***
புயல் அடித்து மழை
கொட்டும் போது
பூவில் வந்து அமரும்
வண்ணாத்துப் பூச்சியாக
யாரோ எழுதிய
ஹைகூ கவிதை.
***
பார்த்தவுடன்
படிக்கத் தூண்டும்
படித்தவுடன்
பார்க்கத்தோன்றும்
படித்தாலும் பார்க்காமலே
பார்த்தாலும் படிக்காமலே
வாசகராக்கிவிடும்
வாசமுள்ள கவிதை
***
எண்ண எண்ண
இனிமையாகும்
ஆனால்
எழுதமுடியாத
என்கவிதை இது!

உத்திரன்-இணுவில்.

## என் தாடியின் கதை

பெண்ணவள் வந்தாள் என்னை-தன்
மன்னவன் என்றாள்
என்னவன் என்றாள் என்னை-தன்
கண்ணெனச் சொன்னாள்.
***
பார்வையின் பாசம் கண்டு
பரவசம் கொண்டேன் அன்று
பாவியின் வேசம் கண்டு
பரிதவிக்கின்றேன் இன்று
***
காலங்கள் ஓட கன்னி மனம்மாற
காளை என் வாழ்வு கவிழ்ந்தது
கண்ணோரம் கரு வளையமும் சூழ
காதோரம் கருந் தாடியும் வளர்ந்தது.

பரந்தனூர் சி. சுரேஷ்-கனடா.

## வறண்ட இதயத்தின் புலம்பல்

வளமான வார்த்தைகள்!
வரைய மறுக்கும் என் கரங்கள்
வறண்டு செல்லும் எம்மவர்
வாழ்வதனை எண்ணியா?
எங்கோ தொலைத்துவிட்ட
என் வண்ணக் கனவுகள்-வாசல்கூட
வரமறுத்து தொலைதூரம் ஓடுவதாலா?
இல்லை-வந்து சேர்ந்த நட்புகளும் பகிர்ந்த
வறுமையின் தாக்கங்களாலா?
வலிந்து நான் தேடுகிறேன் ஒரு விடை
வரவில்லை!
வாழ்வின் வாசலை வலிதாக்கிட
வரைகிறேன்-மனம் உறைகிறேன்!
வளமாய் ஒரு சொல் வரமறுப்பது ஏன்?
வாழ்வுப் படகை வலிமையாய் தாக்கிடும்
வகையற்ற வரம்பை மீறிய துன்பங்கள்தானே!
வார்த்தைகளைக் கோர்த்து-நான்
வரைந்து கொண்டே இருப்பேன்
வளமான ஒரு கவி வரும்வரையில்
வலுவிழக்காது போராடும் என் கரங்கள்.........


எஸ். ஜெயா-
பேராதனைப் பல்கலைக் கழகம்.

## நில்-கவனி-முன்னேறு

பலவீனர்களுக்குப் பாதையில் கிடக்கும் கல் தடையாக இருக்கும். அதுவே உள்ளம் உறுதி படைத்தவர்களுக்கு முன்னேறிச் செல்ல படிக்கட்டாக அமைகிறது.

எப்போதும் செயலாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். வேலையின்றி ஒரு போதும் இருக்கக்கூடாது. செயலற்ற சோம்பல் நிலையில்தான் கெட்ட எண்ணங்கள் உதிக்கும்.

பொறுமையுடன் இருப்பது கசப்பானது தான்; ஆனால் அதனுடைய பலனோ இனிப்பானது.



யார் வேண்டுமானாலும் தவறு செய்யலாம். ஆனால் ஒரு முட்டாளைத்தவிர வேறு யாரும் அதையே தொடர்ந்து செய்து கொண்டிருக்க மாட்டார்கள்.

நல்ல தூக்கம் வருவதற்கு சுத்தமான மனச்சாட்சியை போல உதவும் சுகமான தலையணை வேறு எதுவுமில்லை.

சந்திரனிடத்திலும் களங்கம் இருக்கத்தான் செய்கிறது என்று கூறி தவறு செய்து கொண்டே இருக்காதே. களங்கமுள்ள இடத்திலும் சுடர் இருப்பதை உணர்ந்து நட.

தன்னைப் பற்றி பெருமையாக நினைத்துக் கொண்டிருப்பவர் சுற்றிலும் உள்ள நிலைக்கண்ணாடிகளிலே திரும்பத் திரும்ப தன்னுடைய பிரதிபிம்பத்தையே காண்கிறார். இரண்டு காதுகள் இருந்தும் ஒரே நாக்கே இருப்பதால் பேசுவதை விடக் கேட்பதே அதிகமாக இருக்கவேண்டும்.

குற்றம் செய்து விட்டால் மறைக்காதே; வெளியில் கூறு. அது நீ செய்யக்கூடிய பல குற்றங்களைத் தடுத்து விடும்.

செல்வம் போதுமான அளவில் இருந்தால் அது உன்னைத் தூக்கிச் செல்லும். அதிகமாகி விட்டால், நீதான் அதனைத் தூக்கிச் செல்ல வேண்டும்.

நீ சிரிக்கும் போது உலகமெல்லாம் உன் சிரிப்பில் கலந்து கொள்கிறது. ஆனால் அழும்போது நீ தன்னந்தனியாகவே அழுகிறாய்.


எவ்வளவுக்கெவ்வளவு அறியாமை உன்னிடம் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு உன்னுடைய ஆத்திரம் பொங்கி விடுகிறது.

கடன் கொடுப்பதைவிடத் தானம் கொடுப்பது மேல். இரண்டினால் விளையும் நஷ்டமும் ஒன்றே. பணக்காரராக சாவதற்காக ஏழையாக வாழ்வதுதான் முட்டாள் தனத்தில் எல்லாம் மிகப்பெரியது.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். நௌபர்,
வயது: 20
முகவரி: ஹிஜ்ரா வீதி,
அறுகம்பை,
பொத்துவில்.
பொழுது போக்கு:
கிரிக்கெட், வானொலி.



பெயர்: பி. சுமதி,
வயது: 17
முகவரி: சிதம்பரபுரம்,
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை, பேனா நட்பு.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

15.10.2000 முதல் 21.10.2000வரை

### மேடம்:
எண்ணிய கருமங்கள் சில ஈடேறும். பண வருவாய் அளவுக்குக் கிடைக்கும். கல்வி வசதிகள் சிறப்படையும். பயணங்களால் சோர்வு ஏற்படும்.
அதிஷ்ட நாள் : சனி, ஞாயிறு
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 07
அதிஷ்ட திகதி : 16, 17

### இடபம்:
முக்கியமான விடயங்கள் தொல்லையைத் தரும். தொழில் நிலையில் சிக்கல்கள் தோன்றும். உடல் நிலையும் பாதிப்புறும். இந்த வாரம் கவனமாக இருத்தல் நலம்.
அதிஷ்ட நாள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 06
அதிஷ்ட திகதி : 19, 20

### மிதுனம்:
மகிழ்ச்சியான சம்பவங்கள் இடம்பெறும். இனசன சேர்க்கை, தொழில் சிறப்படையும். பண வரவு தாராளமாக அமையும்.
அதிஷ்ட நாள் : வெள்ளி, திங்கள்
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண்: 08
அதிஷ்ட திகதி : 15, 17

### கடகம்:
காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படும். உடல் நிலையும் பாதிப்படையும். கடன் பிரச்சனைகள் அதிகரிக்கும். பெண்களாலும் பிரச்சனைகள் வந்துசேரும்.
அதிஷ்ட நாள் : சனி, வியாழன்
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண்: 05
அதிஷ்ட திகதி : 18, 21

### சிம்மம்:
எடுத்த காரியங்கள் வெற்றியளிக்கும். பண வசதி அதிகரிக்கும். குடும்பப் பொறுப்புகளும் தலையெடுக்கும். நோய் துன்பங்கள் விலகும்.
அதிஷ்ட நாள்: புதன், வியாழன்
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 03
அதிஷ்ட திகதி: 16, 19

### கன்னி:
குடும்பத்தில் அமைதி குலையும். பிரச்சனைகள் அதிகரிக்கும். பாரிய பணச் செலவுக்கு இடமுண்டு. அத்த நட்சத்திரப் பெண்கள் எச்சரிக்கையாக இருக்கவும்.
அதிஷ்ட நாள் : வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 02
அதிஷ்ட திகதி: 15, 20

### துலாம்:
செய் தொழிலில் பளு அதிகரிக்கும். பண வசதிகள் பெருகும். குடும்பத்தில் சில சிக்கல்கள் தோன்றி மறையும். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம்.
அதிஷ்ட நாள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : மண்நிறம்; எண்: 09
அதிஷ்ட திகதி : 19, 20

### விருட்சியம்:
புதிய முயற்சிகள் கைகொடுக்கும். நண்பர்கள் உதவி கிடைக்கும். எடுத்த காரியம் வெற்றி பெறும். மகிழ்ச்சி நிலவும் தூர இடத்துச் செய்திகள் நன்மை தரும்.
அதிஷ்ட நாள் : திங்கள், புதன்
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 04
அதிஷ்ட திகதி : 15, 21

### தனுசு:
கூட்டுத் தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சகோதர வழி உதவிகள் கிட்டும். தூர இடத்துக்கான பயண திட்டங்கள் சரிவரும். உறவினர்கள் கைகொடுப்பார்கள்.
அதிஷ்ட நாள் : புதன், வியாழன்
அதிஷ்ட நிறம்: இள நீலம்; எண்: 01
அதிஷ்ட திகதி: 15, 19

### மகரம்:
செய்தொழில் இடமாற்றம் நன்மை தரும். நண்பர்கள் உதவிகள் கிட்டும். பணவரவு குறையும். குடும்பத்தில் சில நல்ல பலன்கள் ஏற்பட இடமுண்டு.
அதிஷ்ட நாள் : திங்கள், புதன்
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 03
அதிஷ்ட திகதி: 18, 20


### கும்பம்:
கவனமாக நடமாடவேண்டியவாரம். வாகனத்தால் விபத்துக்கள் ஏற்படலாம். எடுத்த காரியங்கள் கை கூடாது. வாக்குவாதங்கள் அதிகரிக்கும். அவிட்ட நட்சத்திரப் பெண்களுக்கு பலசிக்கல்களுக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : ரோஸ் நிறம்; எண்: 05
அதிஷ்ட திகதி: 19, 29

### மீனம்:
நோய் துன்பங்கள் குணமடையும். கல்வி முயற்சிகள் வெற்றி தரும். எதிர்ப்பார்த்த உதவிகள் கிட்டும். பெண்களுக்கு இனிப்பான செய்திகள் கிட்டும்.
அதிஷ்ட நாள் : வியாழன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : மஞ்சல்; எண்: 03
அதிஷ்ட திகதி : 15, 19

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## காஸ் அடுப்பு பராமரிப்பு



**பெ**ரும்பான்மையான வீடுகளில் இப்போது சமையல் வாயு (காஸ்) அடுப்புகளில் தான் சமைக்கிறார்கள்.

இப்படியானவர்களுக்கு காஸ் முடிந்து விட்டாலோ அல்லது அடுப்பு பழுதாகி விட்டாலோ தொல்லைதான். கீழ்க்கண்ட வழிகளைக் கையாண்டால் காஸ் அடுப்பு பழுதாவதில் இருந்து தடுத்து விடலாம்.

காஸ் முடிந்தவுடன் நிறையப் பேர் வேறு சிலிண்டர் மாற்ற மாட்டார்கள். அதைப்படுக்க வைத்துச் சாய்த்து, இன்னமும் 10 நிமிடங்கள் எரியட்டுமே என்று நினைப்பார்கள். இதனால் தூசு போய் அடைத்துக் கொள்ளும். பாதுகாப்பு வகையிலும் இது நல்லதல்ல. இதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

விரைவாகச் சமையலாக வேண்டும் என்று தீயைப் பெரிதாக எரிய விடுவார்கள். கொதிவரும் போது இப்படித் தீயைப் பெரிதாக வைக்கும்போது எல்லாமே பேர்னருக்குள் போய்விடும் இதனால் உள்ளே நீர் தங்கி துருப்பிடிக்க வழிவகுக்கும். பலர் வாரமொருமுறை அடுப்பைச் சுத்தம் செய்கிறேன் என்று தனித்தனியாக கழற்றி கழுவ ஆரம்பித்துவிடுவார்கள். இதுவும் தவறு. வெளிப்புறம் பேர்னர் என்பவற்றைச் சுத்தமாக வைத்திருந்தாலே போதும். மொத்தமாகக் கழற்றும்போது தவறுகள் ஏற்படுமானால் மிகவும் ஆபத்து. எனவே இதையும் தவிர்க்க வேண்டும்.

பேர்னருக்குள் அடைப்பு இருந்தால் பலர் ஊசி போட்டுக் குத்துவார்கள். இதனால் ஓட்டை பெரிதாகி அதிக காஸ் வரும். அணைக்கும் போது 'பக்' என்ற சத்தம் வரும் இதையும் தவிர்ப்பது நல்லது.

இவற்றோடு காஸைச் சிக்கனப்படுத்த பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

காஸைப் பெரிதாக எரிய வைக்கக் கூடாது. கொதி நிலைக்கு வந்த உடனேயே குறைத்து வைக்க வேண்டும்.

சமையலைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். நினைத்து நினைத்து காஸை எரிய விட்டால், காஸ் விரைவில் முடிந்து விடும்.

பருப்பு போன்றவற்றைப் பொங்க விடுவதால் பேர்னர் உள்ளே துருப்பிடித்து தீ சிவப்பு நிறத்தில் எரியும். இது காஸ் வீணாவதாக அர்த்தம். இவற்றை எல்லாம் தவிர்த்தாலே காஸும், அடுப்பும் அதிக நாட்கள் உழைக்கும். ▪

## பழங்கள் சாப்பிடுங்கள்

**ஆப்பிள்:** நரம்புத்தளர்ச்சியைப் போக்கக் கூடியது.

**பப்பாளி:** தாய்ப்பால் அதிகம் சுரக்கவும் உணவு செரிக்கவும் நல்லது.

**மாம்பழம்:** கண்களுக்கும் தோலுக்கும் நல்லது.

**திராட்சை:** நீரிழிவுக்காரர்கள் அடிக்கடி சாப்பிட நல்லது.

**பேரீச்சை:** இரும்புச்சத்து அதிகமுள்ளது. குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் மிக நல்லது.

**ஒரேஞ்ச்:** புத்துணர்ச்சி கொடுக்கக் கூடியது.

**செவ்வாழை:** அம்மை, ரைஃபோயிட் வருவதைத் தடுக்கும்.

**சப்போட்டா:** ஆண்மைக்கும், சமிபாட்டிற்கும் நல்லது.

**அன்னாசி:** புகைபிடிப்பவர்களுக்கு இது மிகவும் நல்லது.

**தர்ப்பூசணி:** கோடையில் தாகம் தீர்க மிகவும் நல்லது.



**தக்காளி:** ஏழைகளின் ஆப்பிள். இதனாலும் உடலுக்குப் பயன்கள் பல.

**பூவாழை:** உணவு சமிபாட்டிற்குக் கைகண்ட மருந்து.

**கொய்யா:** குடல்புண்ணுக்கு நல்லது.

**மாதுளை:** கனிப்பொருட்கள் அதிகமுள்ள இது உடலுக்கு மிகமிக அவசியம்.

## திருமணங்கள்

உலக அளவில் திருமணம் பற்றி அண்மையில் ஆய்வு ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திருமண ஆய்வை அமெரிக்காவில் சிக்காக்கோ பல்கலைக்கழகம் நடத்தியிருக்கிறது.

இந்த ஆய்வில் பெற்றோர் மூலம் நடைபெறும் திருமணங்கள் தான் முதலிடம் பெறுகின்றது.

உலகில் பெற்றோர் மற்றும் நண்பர்கள் உறவினர்களால் நடத்தப்படும் திருமணம் 96 சதவீதம் என்று தெரியவந்துள்ளது. மீதி உள்ள 4 சதவீத திருமணங்கள் தான், பெற்றோருக்குத் தெரியாமல் நடத்தப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ▪


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IK

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 21-10-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது புவனா

58

## குற்றச்சாட்டும் கோபதாபமும்

**மோ**னிக்கா, கிளின்ரனுடன் சென்ற மார்ஷா ஸ்கொட்டைக் கண்டதும் கடும் கோபமுற்றாள். தன்னுடைய மனோ நிலையை எடுத்துக்கூற பெட்டி கியூரியும் அகப்படவில்லை.

ஒவல் அலுவலுகத்தை வெள்ளை மாளிகையின் வாயிலில் நின்று பார்த்தபோது, மார்ஷா ஸ்கொட் வெளியேறிப் போவதையும் மற்றுமொரு பெண் ஒவல் அலுவலகத்துக்குள் நுழைவதையும் கண்டாள்.

இளமையும் அழகும் மிக்க எலினார் மொண்டேல் என்ற CBS தொலைக்காட்சி நிருபர் தான் கிளின்ரனைக் காணச்சென்று கொண்டிருந்தாள்.

கிளின்ரனைக் காண்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படி ஏற்கனவே கியூரியிடம் தொலைபேசியில் கேட்டபோது, அவருடைய சட்டத்தரணிகளுடன் கலந்துரையாட வேண்டியிருப்பதனால் கிளின்ரனை மோனிக்கா சந்திப்பதற்கு அன்று வாய்ப்பிருக்காது, என்று கியூரி கூறியிருந்தார். 'என்னைச் சந்திப்பதற்கு மட்டும் நேரம் போதவில்லை, வேறு இரு அழகிகளைச் சந்திப்பதற்கு மட்டும் அவருக்கு அவகாசம் கிடைத்ததோ?' என்று எண்ணிப் பொருமினாள். அவ்விடத்தை விட்டு உடனே வெளியேறி தெரு முனையிலுள்ள பொதுத் தொலைபேசிக் கூண்டுக்குச் சென்று கியூரிக்கு தொடர்பேற்படுத்தினாள். வெள்ளை மாளிகையைச் சுற்றிப் பார்க்க வந்தவர்களை அப்போதுதான் அனுப்பிவிட்டு கியூரி அலுவலகத்தினுள் நுழைந்ததும் மோனிக்காவின் தொலைபேசி அழைப்புத்தான் கிடைத்தது. வாயில்வந்த வார்த்தைகளாலெல்லாம் மோனிக்கா கியூரியைத் திட்டித்தீர்த்தாள். ஜனாதிபதியைச் சந்திக்க அவருடைய சட்டத்தரணிகள் வருகிறார்கள் என்று பொய்யைக் கூறிவிட்டு வேறு இரு அழகிகளைமட்டும் கிளின்ரனுடைய அறைக்குள் அனுப்பிவைக்க கியூரியால் எப்படி முடிந்தது, என்று கேட்டாள்.

மோனிக்காவின் வார்த்தைகள் கியூரியை மிகவும் பாதித்துவிட்டன. அவர் அழுதும் விட்டார். உடனடியாக எழுந்து சென்று கிளின்ரன் ஒவலில் தனிமையில் இருக்கும் நேரம் பார்த்து மோனிக்கா கூறியவற்றையெல்லாம் அவரிடம் கியூரி சொன்னாள். இதனால் கிளின்ரன் குழப்பமடைந்தார்.

தனது இருப்பிடம் திரும்பிய மோனிக்கா, 'பேஜரில்' ஒரு தகவல் இருப்பதை அறிந்தாள். பெட்டி கியூரியிடமிருந்தே அந்தத் தகவல் வந்திருந்தது. அமைதியாக இருக்கும்படி கியூரி திரும்பத்திரும்பக் கேட்டிருந்தாள். இதனைத் தொடர்ந்து மீண்டும் தொலைபேசியில் கியூரியுடன் மோனிக்கா தொடர்பு கொண்டாள். எப்படியும் கிளின்ரனைக் காண்பதற்கு அல்லது அவருடன் தொலைபேசியில் பேசு வதற்காகவாவது ஏற்பாடு செய்து தரும்படி கோரினாள் மோனிக்கா. அப்போது உள்ள நிலையில் கிளின்ரனுடன் பேசினால் மோனிக்கா தன்னைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் தவறான வார்த்தைகளைப் பயன் படுத்துவாள் என்பதனால், 'இப்போது உன்னைக் கிளின்ரனுடன் பேச அனுமதிக்க மாட்டேன்!' என்று கூறிவிட்டார். அதுதவிர உண்மையில் அப்போது கிளின்ரனைப் பார்ப்பதற்கு சட்டத்துறை தலைமை அதிகாரி ஒவல் அலுவலகத்துக்கு வந்திருந்தார்.

ஒன்றன்பின் ஒன்றாக வெறுப்பூட்டும் தகவல்களே வந்து கொண்டிருப்பதைப் பொறுக்க முடியாத மோனிக்கா, நியூயோர்க்கில் உள்ள தனது தாயாரிடம் உடனடியாகச் செல்வதற்கு ஆயத்தமானாள். பயணப் பையில் சில துணிமணிகளை அடுக்கிக் கொண்டு வாடகை வண்டியில் ஏறி விமானநிலையம் சென்று இறங்கினாள். பயணச்சீட்டைப் பெறுவதற்காக அதற்கான கருமபீடம் சென்று, பணத்தை எடுப்பதற்காக பையைத் திறந்தாள். துணுக்குற்றாள். பணப்பையை, அப்போதிருந்த பதற்றத்தில் தனது வீட்டிலேயே விட்டுவிட்டு வந்திருப்பதை உணர்ந்தாள். உடனடியாக வீடு திரும்பினாள்.

வீடு திரும்பும் போதே மோனிக்காவின் மனோநிலை ஓரளவு அமைதியடைந்திருந்தது. கியூரியுடன் தொடர்பு கொண்டு, "நான் இப்பொழுது பதற்ற நிலையிலில்லை. அமைதியடைந்து விட்டேன். ஆகவே இப்போதாவது அவருடன் பேசுவதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள்!" என்று கோரினாள். கியூரியும் கிளின்ரனுடன் தொலைபேசி தொடர்பினை ஏற்படுத்திக் கொடுத்தாள்.

மோனிக்கா கிளின்ரனைப்பற்றி ஏற்கனவே சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கள் சிலவற்றை கியூரி, கூறியிருந்தமையினால், தொலைபேசியில் மோனிக்காவின் குரலைக் கேட்டதும் கொதித்தெழுந்தார். "இத்தனை காலமும் என்னை இவ்வளவு கீழ்த்தரமாக எவருமே நடத்தியதில்லை. நீதான் என்னை மிக மட்டரகமாக நினைத்துவிட்டாய். எலினார் மொண்டேல் என்பவரை என்னுடன் இணைத்து அவதூறு கூற உன்னால் எப்படி முடிந்தது? அவள் என்னுடைய நீண்டகால சிநேகிதி. ஆனால் எங்களுக்குள் எந்தவிதமான தப்பான உறவுகள் ஒன்றுமே இருந்ததில்லை. உண்மையில் அவளுடைய வருங்காலக் கணவரைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தவனும் நான்தான்.



என்னுடைய குடும்பத்தவர், மிக நெருங்கிய நண்பர்கள், என் அலுவலக ஊழியர்கள் ஆகியோர்களுடன் நான் செலவிட்ட நேரத்தைவிட உன்னுடன் தான் அதிகமான நேரத்தைச் செலவிட்டிருக்கிறேன். அவ்வாறிருக்கும் போது இத்தகைய குற்றச்சாட்டை உன்னால் என்மீது எப்படிச் சுமத்த முடிந்ததும்? தவிர, நான் எவருடன் எவ்வாறு நடக்கிறேன் என்பதைப்பற்றி குற்றம் சுமத்துவது உமக்கு வேண்டாத ஒன்று. நான் எவருடன் எப்படி நடந்தாலும் அதைப்பற்றி விமர்சிக்க உனக்கு எதுவித அதிகாரமும் கிடையாது?" என்று பொரிந்து தள்ளினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட மோனிக்கா மீண்டும் கொதிப்படைந்தாள். கிளின்ரன் கலிபோர்னியா சென்றிருந்த போது அங்கு எலினாரை ஒரு நாளிரவு முழுவதும் அவருடைய அறையிலேயே வைத்திருந்துவிட்டு அதிகாலை வேளையில் தான் எலினார் வெளியேற அனுமதித்ததை சுட்டிக்காட்டி தொலை பேசியிலேயே அழுதாள். பொறுமையிழந்த கிளின்ரன்! "ஏற்கனவே நான் சொன்னேனே இவற்றைப்பற்றியெல்லாம் உனக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. உனக்கு மட்டும் தான் கோபம் வருமா? பெட்டி கியூரியிடம் தேவையற்ற வார்த்தைகளையெல்லாம் பேசுவதற்கு உனக்கு என்ன அருகதை இருக்கிறது? நான் முக் கியமான அலுவலாக இருக்கும் போது நீ என்னுடன் தொடர்பு கொள்ள விரும்பி அதற்கு முடியாத நிலையேற்பட்டால் நீ கோபம் கொண்டு தேவையற்ற பிரச்சனைகளை உருவாக்கலாமா?" என்று கூறியதும் இடைமறித்த மோனிக்கா, "நான் உங்களைப் போன்றவர்களிடமிருந்து ஒரேயடியாக விலகிப் போக வேண்டும் என்ற திட்டத்துடன் நியூயோர்க் பயணமாக எண்ணினேன். இதனைச் சொல்லி விட்டுப் புறப்படத்தான் நினைத்தேன். ஆனால் என்மீது மிக கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி வேதனைக் குள்ளாக்குகிறீர்கள். இதற்கான காரணம் என்னவென்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை," என்றாள்.

கிளின்ரன் தனது தொனியைக் குறைத்து, "இவையெல்லாவற்றுக்கும் நீ தான் காரணம்!" என்று கூறிவிட்டு தொடர்ந்து "எமக்கிடையில் உறவு ஏற்பட்ட சந்தர்ப்பத்தின், அத்தகைய உறவு சந்தர்ப்ப வசத்தால் நிடிக்க முடியாத நிலையேற்பட்டால் எத்தகைய பிரச்சனையையும் உருவாக்கப் போவதில்லை என்று கூறினாய்!" என்று கூறியதும் மோனிக்கா, "ஓ நான் இன்று பிரச்சனைக் குரியவளாகி விட்டேனோ?" என்று கத்தினாள்.

தொலைபேசியினூடாக இருவருக்குமிடையில் மொத்தம் 56 நிமிடங்கள் இந்தச் சண்டை நீடித்தது.

இதன் பின்னர் இருவரும் ஓரளவு அமைதி அடைந்தனர். தொடர்ந்து தன்னை ஒவலுக்கு வந்து உடனே பார்க்கும் படி கிளின்ரன் சொன்னார். நத்தார் பெருநாளுக்காக கிளின்ரனுக்கு வாங்கி வைத்திருந்த பரிசுப் பொருட்களுடன் மதியம் 1 மணிக்கு மோனிக்கா வெள்ளை மாளிகையை அடைந்தாள். அவை பெரும் பையில் வைக்கப்பட்டு அவளால் கொண்டு செல்லப்பட்டன. இலண்டனுக்குச் சென்றிருக்கும் போது கிளின்ரனுக்காக வாங்கிய கழுத்துப்பட்டி, காப்பிகுடிக்கும் மக் ஒன்று, பழங்காலத்தைய சிகரெட் பைப் ஒன்று போன்ற பொருட்கள் அந்தப் பொதியில் காணப்பட்டன.

(வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**விந்துல வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**திருமதி. அன்னமேரி,**
507, நுவரெலிய வீதி, லிந்துல.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இளவரசனின் கர்வம்

பாப்பா முரசு சிறுகதை

விஜயபுரி என்று ஒரு நாடு இருந்தது. இந்த நாட்டை விஜய ராகவர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தார். மன்னனுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான்.

ஒரு மகன் என்பதனால் இளவரசன் எதை கேட்டாலும் பெற்றுக் கொடுத்து வந்தார் மன்னன் எந்த விதத்திலும் இளவரசன் துன்பப்படக் கூடாது என்று கட்டளையிட்டு இருந்தார் மன்னன்.

செல்லமாக வளர்க்கப்பட்டதால் கர்வமும் சிறுவயதில் இருந்தே இளவரசனுடன் ஒட்டிக் கொண்டது. அமைச்சரின் மகன் ஜெயராமன் இளவரசன் தினகரவர்மனுக்கு தோழனாக இருந்தார்.

இருவரும் ஒன்றாக விளையாடி மகிழ்ந்தனர். அவ்வப்போது இருவரும் சண்டையிட்டுக் கொண்டும் இருந்தனர். இளவரசனின் அடாவடித்தனமும் திடீர் என்று ஆத்திரப்படும் சுபாவமும் தான் சண்டைக்குக் காரணம்.

இளவரசன் ஆயிற்றே என்ற எண்ணம் அமைச்சர் புத்திரனை மவுனமாக்கி விட்டது. வருடங்கள் ஓடிக் கொண்டே இருந்தன. இளவரசனும் மந்திரி புத்திரனும் இளைஞர்களாகி விட்டனர்.

மந்திரி புத்திரன் ஜெயராமன் புத்திசாலி. தன் கர்வத்தால் மடத்தனமாக செயல்களை செய்து வந்தார் இளவரசன். அதை பலமுறை கண்டித்து இளவரசனிடம் வாங்கி கட்டிக் கொண்டிருந்தான் ஜெயராமன்.

இளவரசனின் மடத்தனமான செயல்களை கண்டு வெறுப்படைந்த ஜெயராமன் பல தடவை இளவரசனுடன் உள்ள நட்பை முறித்துக் கொள்ள நினைத்தார். ஆனால் தந்தையின் கட்டளைக்கு இணங்கி இளவரசனுடன் கொண்ட நட்பை தொடர்ந்தார்.

ஒரு நாள் ஜெயராமனை அழைத்து வேட்டைக்கு போக வேண்டும் என்றார் இளவரசன். இளவரசனுடன் வேட்டைக்கு போக மனமில்லாத ஜெயராமன் உடல் நலம் சரியில்லை என்று பொய் சொன்னார்.

ஆனால் இளவரசன் விடுவதாக இல்லை. வேறு வழியின்றி வேட்டைக்கு போக ஒப்புக் கொண்டார்.

அடுத்த நாள் இருவரும் வேட்டைக்கு புறப்படத்தயாராயினர். சற்று நேரத்தில் இரு வரும் காட்டை நோக்கி புறப்பட்டனர். இள வரசன் ஏகப்பட்ட அம்புகளை எடுத்து சென்றபோது ஜெயராமன் ஒரே ஒரு வாள் மட்டும் எடுத்துக் கொண்டார்.

அதை கண்ட இளவரசனுக்கு சிரிப்பு வந்தது. சிரித்துக் கொண்டே காட்டை நோக்கி குதிரையை விரட்டினான் இளவரசன். ஜெயராமனும் இளவரசன் பின்னால் குதிரையை ஓடவிட்டார்.

காட்டுக்குள் புகுந்தபோது இளவரசன் அம்புகளை ஒவ்வொன்றாக எடுத்து எய்து காட்டையே ஒரு கலக்கு கலக்கத் தொடங்கினார். சிறிய மிருகங்களை ஒவ்வொன்றாக கொல்லத் தொடங்கினார். முயல்கள் கூட இளவரசனிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை.


இளவரசனின் செயலை கண்ட ஜெயராமனுக்கு ஆத்திரம் வந்தது. "இளவரசரே, கைவசம் உள்ள அம்புகளால் சிறிய மிருகங்களை கொன்றால் கொடிய மிருகங்களை எப்படி வேட்டையாடுவது?" என்றார் ஜெயராமன்.

அதை கேட்ட இளவரசன் ஆத்திரத்துடன் ஜெயராமனை பார்த்து விட்டு மீண்டும் வேட்டையாடுவதை தொடர்ந்தார். சிறிது நேரத்தில் இளவரசனின் அம்புகள் முழுவதும் முடிந்து விட்டன.

வெகுநேரம் ஆகிவிட்டதால் மதிய உணவுக்காக மரத்தடியில் உட்கார்ந்தனர். உணவு அருந்திக் கொண்டு இருந்தபோது காட்டுக்குள் ஒரு சலசலப்பு இதைக்கேட்டு இருவரும் திடுக்கிட்டனர். அப்போது காட்டுக்குள் இருந்து பெரிய சிங்கம் ஒன்று பாய்ந்து வந்தது. இளவரசனிடம் ஒரு அம்பு கூட இல்லை. உடனே ஜெயராமன் தன்னிடம் இருந்த வாளை உருவி சிங்கத்தின் கழுத்தில் ஓங்கி வெட்டினார். தலை துண்டான சிங்கம் இரத்த வெள்ளத்தில் செத்து சாய்ந்தது. "ஏகப்பட்ட அம்புகளை எடுத்து வந்து அதை எல்லாம் வீணாக்கி விட்டேன். ஜெயராமன் எடுத்து வந்த ஒரே ஒரு வாள் உயிரை காப்பாற்றி விட்டதே!" என்று கூறியபடி ஜெயராமனை கட்டித் தழுவினார் இளவரசன் அவர் தன் அறியாமையை நினைத்து வெட்கப் பட்டு அன்றிலிருந்து கர்வம் கூடாது என்ற முடிவுக்கு வந்தான்.







கிளி இருக்கும் இடத்திற்கு அருகே, உள்ள மாமரத்தில் மாம்பழங்கள் பழுத்துக் கிடக்கின்றன. அந்த மரத்தை அடைய கிளிக்கு வழிகாட்டுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **21.10.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **364**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 362

**பரிசுக்குரியவர்:**
எம்.என்.எம்.றியாஸத்,
வாழைச்சேனை அந்நூர் தேசிய கல்லூரி, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ச.ரேவதி, தமிழ் மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை,பசறை. | பி.கிசோக்குமார், கிரான்வி தமிழ் பாடசாலை, அக்கரப்பத்தனை. |
| எஸ்.கவிஷாலினி, இந்து தேசியகல்லூரி, புஸ்ஸல்லாவ. | ப.ஷாலினி கிறிஸ்டினா, நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்தியாலயம்-கொழும்பு |
| என்.எம்.நிஸாம், அல்-ஹிறா, வித்தியாலயம், காத்தான்குடி-05. | B. இஸ்மத் பானு இக்பால், முன்வதுகொடை முஸ்லிம் வித்தியாலயம், தந்துரை. |
| ஜோயல் சாள்ஸ் சற்குணசிங்கம், கருதாவளை இராமகிருஸ்ண வித்தியாலயம்,களுவாஞ்சிக்குடி. | வினோத் சிவா, சென் தோமஸ் கல்லூரி, கல்கிசை. |
| ஆர்.சாமிளா அநூசிகா, புனித மரியாள் கல்லூரி; அவிசாவளை. | ஜீனியா , நஸ்ரியா மத்திய கல்லூரி, சிலாபம். |

## சிறப்பு


நியூகினியா நாட்டில் இருக்கும் சொர்க்கப்பறவைகள் இனத்தில் ஆண் பறவைகளுக்கு 21/2 அடி நீளத் தோகைகள் இருக்கும். இவை பல்வேறு நிறங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். ஆண்பறவையின் தோற்றம் மிகவும் வசீகரமாக இருக்கும். ஆனால் பெண் பறவை இதற்கு நேர் எதிர். இதற்கு அழகான தோகையும் கிடையாது. தோற்றமும் கிடையாது.

இதேபோல் ஆண் சிங்கத்திற்குக் கம்பீரம் தரும் பிடரிமயிர் உண்டு. பெண் சிங்கத்திற்கு இல்லை.

பெண் மயிலை விட ஆண் மயில்கள் அழகாகவும் சிறிய தலைகள் கொண்டதாகவும் இருக்கும். இதைவிட, ஆண் மயிலின் வண்ணத் தோகை பெண் மயிலுக்கு இல்லை.





## செய்து பாருங்கள்

### யானை முகமூடி

**தேவையான பொருட்கள்:**

பேப்பர் தட்டு, சில வர்ணங்கள், ரப்பர் பாண்ட், பென்ஸில், பசை மற்றும் கடதாசி மட்டை.

**செய்முறை:**

★ பேப்பர் தட்டிற்கு கறுப்புக் கலந்த சாம்பல் நிறத்தில் வர்ணம் தீட்டவும்.

★ படத்தில் உள்ளதுபோல் துதிக்கை, தந்தம், காது, மூக்கு போன்றவற்றை கடதாசி மட்டையில் வரைந்து அதற்கும் மேலே கொடுத்த வர்ணத்தைத் தீட்டி, பேப்பர் தட்டில் ஒட்டிக் கொள்ளவும். இப்போது யானை முகம் தயார்.

★ பேப்பர் தட்டில் இருபுறமும் ஓட்டை போட்டு ரப்பர் பாண்ட் இணைத்து முகத்தில் கட்டிக் கொள்ளவும்.

## விறு விறு தொடர்

அவள் திகைத்து அந்தப் பணக் கட்டைப் பார்த்தபடி, "ம்" என்றாள்.

"செய்வியா?"

"கண்டிப்பா! இவ்வளவு பணம் மொத்தமா நான் பார்த்ததே இல்லை. எந்த மண்டபம்? எத்தனை மணிக்கு? எல்லாம் விவரமாச் சொல்லுங்க!" என்றாள் ஆர்வமாக.

ரஞ்சித் சொல்லத் துவங்கினான் பொறுமையாக.

**அ**ப்ஸராவிடம் காலை ஆறு மணிக்கே கல்யாண மண்டபத்திற்கு வந்து விடும்படியும் அங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் விபரமாய் சொல்லி விட்டுப் புறப்பட்டார்கள் பரத்தும், சுசீலா வும்.

பரத் காருக்கு வந்ததும் சுசீலா, "ஹோட்டல்ல உங்களை உசுப்பி விடற மாதிரி இன்னொரு லெட்டர் வச்சிட்டுப் போயிருக்கிற அந்த ரஞ்சித்தைப் பிடிச்சிட முடியும்னு நம்பிக்கை இருக்கா பரத்?" என்றாள்.

"ஷ்யூர்?"

# 17 சீலா சசீலா

மாறு வேஷத்திலயும் ரெண்டு விதமாகவும் பார்த்திருக்கிற பொண்ணு அந்த பிரஸ் ரிப்போர்ட்டர் அப்ஸரா. அவளை இந்த ரூம்ல உக்காந்து எல்லா டி.வி. ஸ்கிரீனையும் மாத்தி மாத்தி பார்க்கச் சொல்லியிருக்கேன். அவனை மாதிரி சாயல்ல லேசான சந்தேகம் யார் மேல ஏற்பட்டாலும் சொல்லச் சொல்லிருக்கேன்!"

"வெரிகுட். அவங்க எப்போ வாறாங்க?"

"ஆறு மணிக்கு இங்கே இருப்பாங்க."

"நம்ம எல்லாருக்கும் வயர்லெஸ் செட்ஸ் புரோவைட் பண்ணிடுங்க சார்."

"ஓகே. ஏன் பரத், இந்த மண்டபத்தில நாம் முழு ஏற்பாடுகளும் செஞ்சி அவனைப் பிடிக்கிறதுக்காகக் காத்திருப்போம்னு அந்த ரஞ்சித் எதிர்பார்க்க மாட்டானா?" என்றாள் சுசீலா.

"ஸோ?"

"அவன் கண்டிப்பா இங்க வருவான்னு சொல்ல முடியாது!"

"இல்லை சுசீ, ஹோட்டல்ல மறுபடியும் சவால் விடற மாதிரி லெட்டர் எழுதி வெச்சிருந்தானே, அது அவனோட திமிரைத்தான் காட்டுது. வெறுமனே ஆகாஷைக் கொலை செய்றது மட்டுமே அவனுக்கு இருந்திருந்தா இப்படி முன்கூட்டி ஒரு தடவை வேஷம் போட்டுக்கிட்டு வந்து வெள்ளைப்

"என்ன விஷால், இவ்வளவு டல்லாயிட்டே?"

"பயமா இருக்கு பரத். ஆகாஷ் ரொம்ப நல்லவன். அவனுக்கு எதுவும் ஆயிடக் கூடாது."

"கவலைப்படாதேய்யா. பார்த்துப் பார்த்து முழு பாதுகாப்பு ஏற்பாடுகளும் செஞ்சிக்கிட்டிருக்கோம்."

"அவனைப் பிடிச்சிடுவே இல்லை?"

சிரித்தபடி வந்த சுசீலா, "உங்கண்ணனைக் காப்பாத்தறதுக்காக ரஞ்சித்தைப் பிடிக்கிறாரோ இல்லையோ, என்னோட போட்டிருக்கிற சவால்ல ஜெயிக்கிறதுக்காகவாவது பிடிச்சிடுவார் சார், கவலைப் படாதீங்க!" என்றாள்.

"அதென்ன சவால்?"

"தீபிகா கழுத்தில ஆகாஷ் தாலி கட்டறதுக்குள்ளே அந்த ரஞ்சித்தைப் பிடிச்சிக் காமிக்கிறேன்னு சொல்லியிருக்கார். அப்படி செஞ்சிட்டா சிம்லாவுக்கு ஒரு பர்சனல் டூருக்கு இவரோட நான் வர்றதா சொல்லியிருக்கேன்."

"பரத், கண்டிப்பா நீ அவனைப் பிடிச்சிடுவே! என் கெஸ்ட்டா சிம்லால என் கெஸ்ட் ஹவுஸ்லயே எத்தனை நாள் வேணும்னாலும் நீங்க தங்கலாம்!" என்றான் விஷால்.

"சுசீ, சவால்ல ஒரு சின்ன திருத்தம்."

"என்ன?"

"கல்யாணம் முடிஞ்சி இவங்க எல்லாம் சென்னைய்ய விட்டுப் புறப்பட்டுப் போறதுக்கு முன்னாடி ரஞ்சித்தைப் பிடிக்கிறேன். விஷால், உங்க பிளான் எப்படி?"

"நான், அண்ணன், அப்பா, அண்ணி இன்னும் முக்கியமா ஏழெட்டு சொந்தக்காரங்க மட்டும் இன்னிக்கு ஈவினிங் ஆறு மணி ஃபிளைட்ல டெல்லிக்குப் போறோம். டெல்லில எங்க பிசினஸ் ஃபிரண்ட் வீட்ல பார்ட்டி இருக்கு. நாளைக்கு டெல்லி சிம்லா."

"அப்போ ஏர்போர்ட்டுக்கு எத்தனை மணிக்குப் புறப்படுவாங்க?"

"நாலு மணிக்கு இங்கேர்ந்து புறப்பட்டாதான் சரியா இருக்கும்!"

"இப்போ முகூர்த்தம் எத்தனை மணிக்கு?"

"ஒம்போது டு பத்தரை!"

பரத் தன் வாட்ச்சில் நேரம் பார்த்து, "விஷால், நாங்க பார்த்துக்கறோம். போய் ரெண்டு மணி நேரமாவது தூங்கி ரெஸ்ட் எடுத்துட்டுவாயேன்!" என்றான்.

"அப்படிச் சொல்லித்தான் அப்பாவையும், ஆகாஷையும் தூங்க அனுப்பிச்சே, பரத், உன்கிட்ட சொல்றதுக்கு என்ன? அந்த ரஞ்சித்தை எங்கப்பாதான் தூண்டி விட்டிருப்பாரோன்னு நினைக்கிறேன்."

"ஏன் அப்படிச் சொல்றே?"

விஷால் தான் ஏன் தன் அப்பாவை சந்தேகப்படுகிறேன் என்று விபரமாகச் சொன்னான்.

"ஐஸீ!" என்று யோசித்தான் பரத், "அப்போ உங்கப்பாவையும் தீவிரமா கண் காணிக்கச் சொல்லணும்."

"பரத்!" என்றாள் சுசீலா, "இவர் சொல்ற மாதிரி ரஞ்சித்தை இப்படி ஒரு கலாட்டா பண்ண வைச்சி, ஆகாஷை பயமுறுத்தி கல்யாணத்தை நிறுத்தறது அவரோட நோக்கமா இருந்தா.... இப்போ அந்த நோக்கம் நிறைவேறலை. ஆகாஷ் பிடிவாதமா இந்தக் கல்யாணம் நடந்தேயாகணும்னு சொல்லியாச்சு. அதனால் 'நீ எந்த நடவடிக்கையும் எடுக்க வேணாம்'னு ரஞ்சித்துக்கு இவங்கப்பா ரகசியமா தகவல் கொடுத்திருப்பாரு. அவன் இங்கவரவும் போறதில்லை. எந்த அசம்பாவிதமும் நடக்கவும் போறதில்லை."

"இதெல்லாம் இவங்கப்பாவோட ஏற்பாடுதான்னு நமக்கு ஊர்ஜிதமா தெரியாதே! அதனால பாதுகாப்பு ஏற்பாடுகள்ல எந்த அலட்சியமும் காட்ட முடியாது!" என்ற பரத் தன் சிகரெட் பாக்கெட் எடுத்துத் திறந்து பார்த்து அதில் சிகரெட் தீர்ந்து போயிருப்பதைப் பார்த்தான்.

"சரி, விஷால்... நீ சுசீலாக்கூட பேசிட்டிரு. நான் இப்ப வந்துடறேன்!" என்று மண்டபத்துக்கு வெளியே மெதுவாக நடக்கத் துவங்கினான் பரத்.

பரத் சாலைக்கு வந்து அலங்கரிக்கப்பட்டு ஜெனரேட்டர் உபயத்தில் சரம் சரமாக வெளிச்சக் கோடுகள் அமைந்த விளக்குகளைக் கொஞ்சம் நேரம் ரசித்துவிட்டு தூரத்தில் இருந்த பெட்டிக் கடையை நோக்கி மெதுவாக நடந்தான்.

சாலை அமைதியாக இருந்தது. காற்றில் குளிர் இருந்தது. ஒரு பால் பூத்தில் வேன் நின்று அதிலிருந்து பிளாஸ்டிக் தொட்டில்களில் பால் பக்கெட்டுகளைத் தூக்கி போட்டுக் கொண்டிருந்தார்கள். சுவர்களில் நள்ளிரவில் போஸ்ட்டர்கள் மாறி வேறு ஹீரோஸ் வேறு ஹீரோயின்களைக் கட்டியணைத்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடர்ந்து வரும்)



"எப்போ? அவன் ஆகாஷைக் கொலை செஞ்சதுக்கு அப்புறமா?"

"ஏய்! என்ன, கிண்டலா?"

"ரஞ்சித்தை தீபிகா கழுத்துல தாலி ஏறதுக்குள்ளே பிடிக்கணும் பரத்!"

"யெஸ்!"

"உங்க கண்ணுல தூக்கம் வழியுது. எனக்கென்னவோ நீங்க கோட்டை விட்டுடுவீங்களோன்னு கவலையா இருக்கு."

"சேலன்ஞ்?" என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டினான் பரத்.

"சேலன்ஞ்?" என்றாள் சுசீலா- அவளும் பதிலுக்கு கட்டை விரலைக் காட்டி.

"பந்தயம் என்ன? எல்லா வேலையையும் மூட்டைக்கட்டி வெச்சிட்டு சிம்லா போகலாமாம்? நீ என் கூட வரணும்: ஒரே காட்டேஜ்ல தங்கணும். சிம்லா வித் சுசிலா! இதுதான் பந்தயம். என்ன சொல்றே?" என்றான் பரத்.

"ரைட்!" என்றாள் சுசீலா.

**நி**யூட்டன் தலைமையில் போலீஸ் படை அதிகாலை நான்கு மணிக்கு பயங்கர சுறுசுறுப்புடன் அந்தக் கல்யாண மண்டபத்தில் இயங்கிக் கொண்டிருந்தது.

கல்யாண மண்டபத்தின் முகப்பில், பார்க்கிங் பகுதியில், மண மேடைக்கு அருகில் சாப்பாட்டுக் கூடத்தில் என்று எங்கும் வீடியோ கமிராக்கள் ரகசியமாக அமைக்கப்பட்டன.

அவற்றின் இதயத் துடிப்புகளை கவனிக்கத் தனியாக ஓர் அறை ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு கேமிராவுக்கும் ஒரு மானிட்டர் வைக்கப்பட்டிருந்தன.

அந்த அறையில் நின்ற பரத் நியூட்டனிடம், "மொத்தமா ஒரே ஆபீசைப் போட வேணாம் சார். ஒவ்வொரு மானிட்டரை கண்காணிக்கிறதுக்கும் ஒருத்தரைப் போட்டுடறது பெட்டர்!" என்றான்.

"சரி."

"நம்ம ஆபீஸர்ஸ் அவனை ஃபோட்டோலதான் பார்த்திருக்காங்க. அவனை சமீபத்தில சாதாரண தோற்றத்திலயும்,

## மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

புடவை எல்லாம் கொடுத்துட்டுப் போவானா? அவன் உணர்ச்சிப் பூர்வமான கொலைகாரன் இல்லை! வேடிக்கை விரும்புற ஸேடிஸ்ட்! ஈகோ உள்ள மனுஷன். இந்தக் கொலையை ஒரு சவாலா நடத்திக் காட்டணும்னு அவனுக்குள்ளே துடிப்பு இருக்குது. அதனால அவன் கண்டிப்பா ஏதோ ஒரு பிளானோட இங்கே வருவான்னு நான் எதிர்பார்க்கறேன்!" என்றான் பரத்.

"அப்புறம் பரத்...." என்றார் நியூட்டன். "நீங்க கேட்ட புல்லெட் புரூஃப் ஜாக்கெட் டிப்பார்ட்மெண்ட்லேர்ந்து வரவழைச்சிட்டேன்!"

ஆகாஷ் கோட்டுக்கு உள்ளே அந்த ஜாக்கெட் போட்டுக்கச் சொல்லப் போறேன் சார். எந்த வகையிலும் ரிஸ்க் எடுக்கக்கூடாது."

"பரத், கொலைகாரன் ஆகாஷ் கழுத்துக்கு கீழே குறிவச்சா அந்த ஜாக்கெட் காப்பாத்தும். முகத்துக்கு, தலைக்கு குறி வெச்சா?" என்றாள் சுசீலா.

"ஆகாஷைச் சுத்தி வலிமையான பாதுகாப்பு வளையம் இருக்கறதால ரஞ்சித் எந்த முயற்சி செஞ்சாலும் அதை க்ளோஸ் ரேன்ஞ்சில நடத்த முடியாது. அவன் கொலைக்கு ஆயுதமா துப்பாக்கியைத் தான் பயன்படுத்தப் போறான்னு கூட நமக்குத் தெரியாது. அப்படி ஒரு வேளை அவன் துப்பாக்கியை யூஸ் செஞ்சா தூரத்திலேர்ந்து குறிவைக்கிறப்போ கழுத்துக்குக் கீழே தான் குறிவைப்பான்."

"யூ ஆர் ரைட் பரத்!" என்றார் நியூட்டன்.

அந்த அறையிலிருந்து வெளியேறிய பரத் மண்டபத்தின் ஹாலில் ஒரு நாற்காலியில் பிரமை பிடித்தவன் போல அமர்ந்திருந்த விஷால் அருகில் வந்து மற்றொரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.


# நிஜமும் நிழலும்

'**மே**ன் இன் ஏன் அயர்ன் மாஸ்க்' என்றோர் ஆங்கிலப்படம். அந்தப் படம் கடல் கடந்து, இந்தியாவுக்குள் அதுவும் தமிழ்நாட்டுக்குள் நுழைந்து, 'உத்தம புத்திரன்' என்ற பெயரில் பி.யூ.சின்னப்பா இரு வேடங்களில் நடித்து வெளிவந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, இதே படம், இதே பெயரில் சிவாஜி கணேசன் இருவேடங்களில் நடித்து வெளிவந்து சக்கைபோடு போட்டது.

சினிமாவாக வந்த இந்த கதை, நிஜத்தில் நடந்த ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது.

அந்த நிஜம் என்ன என்று பார்ப்போம்!

∴பிரான்ஸ் நாட்டு தலைநகரான



## உத்தம புத்திரன்

பாரீஸில், பாசில்லா என்றொரு சிறைச்சாலை உண்டு. இந்த சிறைச்சாலைக்கென்று ஒரு சரித்திரமே உண்டு. பிரெஞ்ச் புரட்சியின்போது, புரட்சியாளர்களை இங்கு அடைத்து வைத்து கொடுமை செய்தனர். 'கில்லட்' எனப்படும் கொலைக் கருவி இந்த சிறைச்சாலையில்தான் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது. இந்த சிறைச்சாலையில் ரத்தம் ஆறாக ஓடியதும், பல தலைகள் உருண்டதும் யாராலும் மறக்கவே முடியாது.



இப்படி ரத்தக்கறை படிந்த சிறைச்சாலைக்கு, சிறை அதிகாரியாக பொறுப்பேற்க, செப்.18, 1698ல், பெனின்டி அவர்ஜீன் என்பவர் வந்தார்.

சிறைச்சாலை வழக்கப்படி, சிறைக் கைதிகள் இவருக்கு அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டனர். ஓர் அறைக்குள் இரும்பு முக மூடி அணிந்த, ஒல்லியான மனிதன் ஒருவன் இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்த பெனின், அந்த கைதியைப் பற்றி விசாரித்தார்.

அவரைப் பற்றி எந்தக் குறிப்பும் சிறைச்சாலை குறிப்பேடுகளில் காணப்படவில்லை. 'அரசாங்கக் கைதி... பத்திரமாக பாதுகாக்கவும்' என்று மட்டுமே இருந்தது.

நவ.19, 1703ல் அந்த கைதி இறந்து போனான். அவனது பெயர் என்னவென்று தெரியாமல், மார்ஷீல் என்று இவர்களாகவே பெயர் சூட்டி, வயது 45 என்று கணித்து, செயின்ட் பால் என்ற இடுகாட்டில் புதைத்து விட்டனர்.

அந்த கைதி இருந்த அறையை தலைகீழாகப் புரட்டி, தரை, சுவர் எல்லாவற்றையும் சுரண்டி புதிதாக சிமெண்ட் பூசினர். அவனது உடைகள், அவன் பயன்படுத்திய பொருட்களை தீயிட்டு கொளுத்தினர்.

இந்த விஷயங்கள் வெளியே வர, சரித்திர ஆராய்ச்சியாளர்கள், அந்தக் கைதியைப் பற்றி துருவ ஆரம்பித்தனர். பல கதைகள் கிளம்பின.

∴பிரான்ஸ் நாட்டு வாரிசான 14ம் லூயிதான் அவன் என்றும், சூழ்ச்சிக்காரர்களால், கைதியாக்கப்பட்டு சிறைச்சாலைக்குள் தள்ளப்பட்டான் என்றும் கூறினர். அவன் அரசரின் வைப்பாட்டியின் மகன். அவனுக்கு அரசுரிமை கிடைக்கக் கூடாது என்பதற்காக கைதியாக்கப்பட்டான் என்றெல்லாம் கூறினர்.

∴பிரான்ஸை ஆண்ட 13ம் லூயி- ஆனி தம்பதியருக்கு, செப்.9, 1638ல் இரட்டை குழந்தை பிறந்தது. இந்த இரட்டையரில் மூத்தவன் தான் 14ம் லூயி. அடுத்த வாரிசுரிமை இவனுக்குத் தான் என்று கூறினர். அப்போது ∴பிரான்ஸில் உச்சக்கட்ட உள்நாட்டு கலகமும், குழப்பமும், அரசுரிமைக்காக போட்டியும் இருந்த காலகட்டம். தன் மகனுக்கு ஆபத்து நேருமோ என்று, இங்கிலாந்திலிருந்த அவனது அத்தை ஜென்ரிட்டா மரியாவிடம் மகனை ஒப்படைத்து வளர்க்கச் செய்தார் மன்னர்.

அரசர் 13ம் லூயியின் மனைவியின் தம்பி, விஷம் கொடுத்து அரசரைக் கொன்று விட்டான். இரட்டையரில் மற்றொருவனை தன் பொறுப்பில் வளர்க்க முடிவு செய்து, அவனை மது, மாது போன்ற கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாக்கி, நாட்டுரிமையை தன் வசமாக்கிக் கொண்டான்.

இங்கிலாந்தில் வளர்ந்த 14ம் லூயி, பிரெஞ்ச் படையில் சாதாரண படைவீரனாக சேர்ந்தான். உருவ ஒற்றுமை 14ம் லூயியை காட்டிக் கொடுத்துவிடவே, அரசுரிமைக்கு போட்டியிடுவானே என்று வீண் பழி சுமத்தி, தலையில் ஒரு இரும்பு கவசத்தை மாட்டி சிறையில் தள்ளினர் சூழ்ச்சிக்காரர்கள்.

அரச குடும்பத்தின் மீது விசுவாசம் கொண்ட லெப்டினன் ஒருவர், சிறையில் வாடும் 14ம் லூயிக்கு உதவி செய்தார். நல்ல உடை, சாப்பாடு, படுக்கை வசதி செய்து கொடுத்தார். ஒரு கட்டத்தில் டஸ்கர் என்ற படைவீரன் ஒருவன், லூயியை தப்ப வைத்து, தான் அந்த இடத்தில் இருந்து சிறை தண்டனையை அனுபவித்ததாகவும் கூறுகின்றன.

அரசியல் சூதாட்டம் ஆழம் காண முடியாத கடல் போன்றது. பல உண்மைகள் அமிழ்ந்து போவது தான் நிதர்சனம்.

சரி, சரித்திர ஆராய்ச்சியாளர்களைக் குழப்பும் விஷயங்கள் எவை?

பதினான்காம் லூயி, உண்மையில் அரசு வாரிசுதானா? இரட்டையரில் ஒருவரா? அல்லது மற்றவர்கள் கூறுவது போல் வைப்பாட்டியின் மகனா? 14ம் லூயியின் தம்பி அரச பதவிக்கு வந்தானா? அவனது தாய் மாமன் கதி என்ன ஆனது? சிறைக்குள் ஆள் மாறாட்டம் நடந்தது உண்மையா? அப்படியானால், தப்பியோடிய 14ம் லூயி என்ன ஆனான்? இரும்பு முகமூடியுடன் சிறையில் இறந்தது யார்?

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 24

இரண்டாவது உலகப்போர் நடைபெற்று முடிந்த ஒரு வருடமான பின்னர் கல்லடி கடற்கரையில் வினோதமான ஒரு பொருள் கரையொதுங்கிக் கிடக்கிறது என்று மட்டு நகரில் கதை பரவியது. நகர மக்களெல்லாம் கடற்கரைக்குச் சென்று வேடிக்கை பார்த்தனர். ஏறத்தாழ ஒருவாரம் வரை மக்கள் கூட்டம் கடற்கரையில் கூடியது.

கரையொதுங்கிய பொருள் என்ன என்பதை எவரும் அறிய முடியவில்லை. அதனருகே சென்று தொட்டுப் பார்க்கவும் எவருக்கும் துணிவில்லை. பொலிஸாரும் வந்து பார்த்துவிட்டுச் சென்றனரே தவிர, அப்பொருளின் அருகே சென்று ஆராய்ந்து பார்க்க முடியாதிருந்தனர்.

ஒரு குட்டி விமானம் போல் அது காட்சியளித்தது. ஆனால் இறக்கைகள் காணப்படவில்லை. அதன் வால்பகுதியும் ஒரு விமானத்தின் பின்பகுதிபோல் தான் காட்சியளித்தது. உருக்கினால் உருவாக்கப்பட்ட இதன் நீளம் சுமார் 8 அடியிருக்கும்.

அப்போதிருந்த அரசாங்க அதிபர் கச்சேரி அலுவலர்கள் சிலருடன் ஆராச்சியார் துரைராஜா அவர்களையும் அழைத்துக் கொண்டு தனது மோட்டார் வண்டியில் அந்த விநோதப் பொருளைப் பார்க்கச் சென்றார். அந்தப் பொருள் கிடந்த இடத்திலிருந்து சற்றுத் தொலைவிலேயே எல்லோரும் நின்று பார்த்தனர். ஆராச்சியார் திடீரென முன் பாய்ந்து சென்று அந்தப் பொருளை ஒரு சுற்றுச் சுற்றி வந்தார்; அரசாங்க அதிபர் தடுத்தும் அவர் கேட்கவில்லை. அதனைத் தொட்டும் பார்த்துவிட்டார்.

ஆராச்சியாரின் துணிச்சல் சுற்றி நின்ற அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இதன் பின்னரே அவர்களும் அந்தப் பொருளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தனர்.

கச்சேரி திரும்பியதும் அரசாங்க அதிபர், தனது அதிகாரிகளையும் பொலிஸ் தலைமை அதிகாரியையும் அழைத்து ஒரு மாநாடு நடத்தினார். கடலில் மிதந்து வந்த அந்தப் பொருளை என்ன செய்வது என்பது தான் எல்லோருடைய கேள்வியாகவும் இருந்தது. அந்தப் பொருளால் எந்தவிதமான அபாயமும் இல்லை என்பதை அறிந்ததும் மட்டக்களப்பில் கொல்லராகப் பணிபுரியும் சிலர் அதனை அபகரித்துச் சென்றுவிடக்கூடும் என்று கூட ஐயம் ஏற்பட்டது. இறுதியாக அந்தப் பொருளை ஏலத்தில் விட்டு விற்றுவிடலாம் என்று முடிவாயிற்று.

அடுத்துவந்த ஞாயிற்றுக்கிழமை கல்லடி கடற்கரையில் அந்தப் பொருளை ஏலத்தில் விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. மாலை 4 மணிக்கு மேல் ஏலம் விடப்படும் என பறை அறைதல் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட வேளையில் மக்கள் கூடினர். அப்போது பிரசித்த ஏலக்காரராக இருந்த திரு.எஸ்.ஏ.செல்வநாயகம் அவர்கள் ஏலத்தை நடத்தினார். ஆரம்பவிலையாக 10 ரூபா விலை கூறப்பட்டது. இரண்டொருத்தர் ஏலம் கேட்டுக் கேட்டு ஐம்பது சதமாகக் கூட்டிய போது பதின்மூன்று ரூபாய்யை அடைந்தது- வெகுநேரம் வரையில் அதே தொகையில் நிக்க, ஆராச்சியார் துரைராஜா அவர்கள், "பதின் மூன்று ரூபாய் இருபத்தி ஐந்து சதம்!-" என்றார்.

அங்கே நின்றவர்கள் எவருமே ஆராச்சியார் அவர்கள் ஏலத்தில் குதிப்பர் என்று எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் அவரைப் பார்த்து நகைத்தனர். அவருடன் போட்டி போட எவரும் முன்வரவில்லை. பதின்மூன்று ரூபாய் இருபத்தி ஐந்து சதத்துக்கு அந்தப் பொருள் ஆராச்சியார் துரைராஜா அவர்களின் சொத்தானது.

எல்லோரும் கலைந்து சென்றனர். கல்லடியிலேயே ஒரு மாட்டு வண்டியை ஏற்பாடு செய்த ஆராச்சியார், அங்கு நின்றிருந்த ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களுடைய உதவியுடன் ஒன்றரை மணிநேரம் போராடி அந்தக் குட்டி விமானத்தை வண்டியில் ஏற்றினார்.

அன்றிரவு எட்டரை மணிக்கு வண்டிங் ஒழுங்கை மட்டக்களப்பு வாவிக்கரையை வந்து தொடும் சந்தியில் இருந்த அரச மரத்தின் கீழ் அந்தப் பொருள் இறக்கி வைக்கப்பட்டது. அதனை இறக்கி வைப்பதற்கு ஊரே திரண்டது.

பதின் மூன்று ரூபாய் இருபத்தி ஐந்து சதத்துக்கு கொள் முதல் செய்யப்பட்ட அந்தப் பொருளை கொண்டு வந்து சேர்த்த வண்டிக்காரருக்கு கூலியாக இருபது ரூபாய் தரவேண்டுமென்று வண்டிக்காரார் வாதிட்டார்.


அந்தச் சத்தியிலிருந்து இரண்டாவதாக இருந்த ஆராச்சியாரின் வீட்டுக்கு வண்டிக்காரரை அழைத்துச் சென்ற ஆராச்சியார், அவருக்கு தன்னிடமிருந்த சாராயத்தை வார்த்துக் கொடுத்தார். இரவு உணவும் கொடுத்தார். அவருடைய கையில் அவர் கூலியாகக் கேட்ட ரூபாய் இருபதையும் கொடுத்தார். ஆனால் வண்டிக்காரரோ பத்து ரூபாய் மட்டும் எடுத்துக் கொண்டு மீதி பத்து ரூபாவை ஆராச்சியாரிடம் கொடுத்துவிட்டு சந்தோசமாகத் திரும்பினார்.

வாவிக்கரையோரத்தில் அந்தக் 'குட்டி விமானம்' தொடர்ந்து பல நாட்கள் காட்சிப் பொருளாகக் கிடந்து நூற்றுக்கணக்கானோரை ஈர்த்தெடுத்தது.

கச்சேரி முடிந்து தனது வழமையான சீலாமுனைப் பயணத்தையும் முடித்துக் கொண்டு வீடு திரும்பும் ஆராச்சியார், தனது மீசையை முறுக்கியபடி அந்தக் குட்டி விமானத்தின் அருகில் நின்று உரையாடுவது வழக்கமாகிவிட்டது.

"எதற்காக இந்தப் பொருளை இத்தனை விலை கொடுத்து (அக்காலத்தில் இருபது ரூபா என்றால் அதற்குரிய மதிப்பே வேறுதான்) வாங்கினீர்கள்? இதனை வைத்து என்ன செய்யப் போலவதசாக உத்தேசம்?" என்றெல்லாம் ஆராச்சியாரிடம் பலரும் கேட்பார்கள்.

அவர் கூறும் பதில் ஒன்று தான்: "உலகப் போர் நடந்தது; ஜப்பான்காரன் குண்டு போட்டான்; கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன... என்றெல்லாம் இனிமேல் வரும் காலங்களில் நம் மக்கள் கதைப்பார்கள். எனக்கு ஒரேயொரு மகன் இருக்கிறான். அவனுக்குக் கல்யாணமாகி பிள்ளைகள் பிறந்தால், என் மகன் என்னுடைய பேரப்பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போய் இந்தப் பொருளைக் காட்டுவான். 'நாங்கள் சிறுவர்களாக இருக்கும் போது உலகப் போர் நடந்தது. அந்தப் போரில் இதே போன்ற பொருட்களெல்லாம் பாவிக்கப்பட்டன!" என்று காட்டி விளக்கம் கூறுவான். ஆகவே இதனை இரண்டாவது உலக மகா யுத்தத்தின் ஞாபகச் சின்னமான வருங்காலத்திலுள்ள எல்லோரும் வந்து பார்ப்பார்கள் அல்லவா? என்று அவர் கூறும் விளக்கம் உண்மையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகவே கருதமுடிந்தது.



## கலைவாணருடன் ஏற்பட்ட நெருக்கம்



சீத்தா எலியாவிலுள்ள சீதை அம்மன் கோயில் அருகே காணப்படும் அருவியின் பக்கத்தில் கலைவாணர் மற்றும் மதுரம் அம்மையாருடன் கட்டுரையாளர்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் என்றால் சினிமாப் பிரியர்களுக்கு, இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெல்லமாக இனிக்கும். 1945ம் ஆண்டுக்கு பின்னர் வெளியான தமிழ்த்திரைபடங்களில் இவ்விருவரும் கொடிகட்டிப் பறந்தனர்.

அங்க சேஷ்டைகள் எதுவுமில்லாத வகையில் தரமான நகைச்சுவையை படங்களில் இவ்விருவரும் இணைந்து வழங்குவார்கள். மக்களுக்கு வேண்டிய போதனைகள் நிறைந்த தரமான நகைச்சுவையாக இருக்கும். இவ்விருவரும் இணைந்து நடிக்கும் படம் என்றால் அதற்கான வசூல் நிச்சயம் மலை போல் கிடைக்கும்.

மட்டக்களப்பு விபுலாநந்த அடிகளாருக்கான மணிமண்டபம் ஒன்றினை அமைப்பதற்கு கலைவாணர் என்.எஸ்.கே.அவர்களின் நாடாகக் குழுவினரை அழைத்து நாடகங்கள் நடத்தி நிதிவசூல் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தின் அதிபராகவிருந்த திரு.எஸ்.அம்பலவாணர் அவர்கள் சென்னை சென்று கலைவாணர் அவர்களுடன் பேசி அவருடைய குழுவினரை இலங்கை தருவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

கொழும்பு மாநகரில் இரு நாடகங்களும் மட்டக்களப்பில் இரு நாடகங்களும் வைத்து பணம் திரட்டுவதென திட்டமிடப்பட்டது. ஆனால் ஆசிரியத் தொழிலைத்

**இரா. பத்மநாதன்**

தவிர வேறு எதுவிதமான அனுபவமுமே இல்லாத திரு.அம்பலவாணர் அவர்களால் இத்தகைய கலைப்பணியை மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது.

இக்காலகட்டத்தில் மட்டக்களப்பில் நாங்கள் பகுத்தறிவு இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்தோம். இயக்கப்பணிகளை மேலும் சிறப்புற நடத்துவதற்கு பணம் இருந்தால் உதவியாக இருக்குமே என்று கருதிக் கொண்டிருந்தோம்.

இக்காலத்தில் இலங்கைக்கு தமது நாடகக் குழுவினருடன் வரவிருக்கும் கலைவாணரின் உதவியை நாடலாமே என்று கொழும்பிலிருந்து எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு சொன்னார்.

இத்தகவல் கிடைத்த அன்றைய தினமே நான் கொழும்பு பயணமானேன். கலைவாணருக்கு எஸ்.டி.எஸ். அவர்களுடைய துணையுடன் ஒரு கடிதத்தை எழுதி சென்னையிலுள்ள கலைவாணரின் முகவரிக்கு அனுப்பிவைத்தேன். பத்து நாட்களில் கலைவாணரின் நாடகக்குழு நிர்வாகியிடமிருந்து எனக்கொருபதில் வந்தது. என்.எஸ்.கே. நாடகசபையைச் சேர்ந்த கலைஞர்கள் இலங்கையில் ஒரு மாதம் வரை தங்கியிருந்து பல நகரங்களிலும் நாடகங்களை நடத்தப் போவதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் நடைபெறவிருக்கும் நாடகங்கள் அனைத்துக்கும் திரு.அம்பலவாணர் அவர்களே பொறுப்பாளராக இருக்கிறார். ஆகவே அவரைக் கண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன்படி திரு.அம்பலவாணர் அவர்களை மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலுள்ள அவரது இல்லத்தில் கண்டு பேசினேன். அவர், மட்டக்களப்பில் விபுலாநந்த மணி மண்டபத்துக்காக தான் இரு நாடகங்களை மேடையேற்ற ஏற்பாடுகள் செய்துவருவதாகவும், கொழும்பிலும் கண்டியிலும் நாடகங்களை நடாத்துவதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும் கூறினார்.

மட்டக்களப்பில் இரு நாடகங்கள் நடை பெறவிருப்பதனால் மூன்றாவதாக மற்றொரு நாடகத்தை வைத்தால் போதுமான வசூலைப் பெற முடியாது என்பதனால் பதுளை நகரில் பகுத்தறிவு இயக்கத்துக்கான நாடகத்தை நடத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு திரு அம்பலவானர் அவர்கள் என்னிடம் கூறினார். மேடையேற்றப்படும் ஒவ்வொரு நாடகத்துக்கும் கலைவாணர் நாடகக் குழுவுக்கு ஆயிரம் ரூபாவும், அக்குழுவினரின் போக்குவரத்துச் செலவுக்காக ரூபாய் ஐநூறுமாக தன்னிடம் தரப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவர் குறிப்பிட்ட தொகையை அவரிடமே கொடுத்துவிட்டேன்.

கலைவாணர் தன்னுடைய நாடகக் குழுவுடன் இலங்கை வருகிறார் என்ற தகவலை செய்தித்தாள்கள் மூலம் அறிந்து கொண்ட கண்டி மகாத்மாகாந்தி நினைவுப்பள்ளியை நடத்திய ஒரு சாமியார் அப்பள்ளியின் நிதிக்காக ஒரு நாடகத்தை ஏற்பாடு செய்ய அவருடைய சகாவான வைத்திலிங்கம் என்பவரை திரு.அம்பலவாணரிடம் அனுப்பிவைத்தார். திரு. அம்பலவாணரோ கொழும்பிலும் கண்டியிலும் தான் நாடகங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருவதனால் வேறு எவருக்கும் நாடகம் நடத்த முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். இதனால் கோபமுற்ற திரு வைத்திலிங்கம் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்று என்.எஸ்.கே.அவர்களை நேரடியாகக் கண்டார்.

**(இன்னும் வரும்)**

---

# கலை உலகில் கருணாநிதி 04

கருணாநிதி சோப்புப் போட்டுக் குளித்தால், பாத்ரூமிலிருந்து வெளிப்படும் தண்ணீரில் சோப்புநுரை வருவதைப் பார்த்து விட்டு பெரியார், "என்னப்பா! அந்த திருவாரூர் பையன் தினமும் சோப்பு போட்டுக் குளிக்கிறான்! வாரம் ஒரு தடவை சோப்பு போட்டுக் கொண்டால் போதாதா? ரொம்ப ஆடம்பரம்!" என்பார்.

வெளியூரிலிருந்து பெரியாருக்கு பயணச் செலவு அனுப்பி கூட்டங்களுக்கு அழைத்தால், பெரியார் வருவார். மாணவர் மன்றம், இலக்கிய மன்றம் என்று இளைஞர்கள் காசு அனுப்பாமல், பெரியாரை கூட்டத்திற்கு அழைத்தால், அந்த ஊருக்கு கருணாநிதியை அனுப்பி, "போய் பேசி விட்டு வா," என்பார். திருவாரூருக்கே இப்படி கருணாநிதியை ஒரு முறை அனுப்பி வைத்தார்.

எட்டு மாத காலம் மட்டுமே 'குடியரசு' இதழில் பணியாற்றி விட்டு, பெரியாரின் 'சித்திரவதை' பொறுக்க முடியாமல் திருவாரூருக்கே திரும்பி விட்டார் கருணாநிதி. (ஆக.1945 செப்.30ல் 'குடியரசி'ல் சேர்ந்தவர், '46 மே மாதம் விலகி விட்டார்.)

ஆனால், கருணாநிதி, 'நெஞ்சுக்கு நீதி' நூலில், 'குடியரசு' பத்திரிகையில் நான் பணியாற்றிய போது 'ராஜகுமாரி' படத்திற்கு வசனம் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. பெரியாரிடம் சொன்னேன். "போய் வா!" என்றார். "போனேன்." என்று எழுதி உள்ளது ஏன் என்று புரியவில்லை!

காரணம், 1946மே 11, 12ல் மதுரையில் பெரியார் 'கறுப்புச் சட்டை மாநாடு' நடத்தினார். 'குடியரசி'லிருந்து திருவாரூருக்கு திரும்பிப் போய்விட்ட கருணாநிதி, பெரியார் மீது இருந்த கோபத்தால், இந்த மதுரை



மாநாட்டிலே போய் கலந்து கொள்ள வில்லை. திருவாரூரிலேதான் இருந்தார். இதற்கு இன்னொரு காரணம்-அப்போது அவருக்கு முதல் குழந்தை பிறந்து, அந்தக் குழந்தையின் கண்ணைக் காக்கா கொத்தி விட்டதால், குழந்தையை டாக்டரிடம் தூக் கிக் கொண்டு திரிந்தார். பிறகு அந்தக் குழந்தை இறந்து விட்டது. அதன் பிறகு பிறந்தவர்தான் மு.க.முத்து. ஆனால், அடுத்த ஒருவாரத்தில் (மே 17, 18) கும்பகோணத்தில் நடந்த 'திராவிடர் கழக மாநாட்டி'லேயும் கருணாநிதி கலந்து கொள்ளவில்லை! புறக்கணித்தார்!

இந்நிலையில்தான் ஏ.எஸ்.ஏ.சாமியிடமிருந்து கோவை ஜூப்பிட்டர் ஸ்டூடியோவிற்கு வருமாறு திருவாரூரில் இருந்த கருணாநிதிக்கு கடிதம் வந்தது. போனார். 'ராஜகுமாரி' படத்தில் உதவி வசன கர்த்தாவானார். உடனே ஊர் திரும்பி, தனது மனைவியையும் அழைத் துப் போய் கோவை சிங்கா நல்லூரில், ஈ. சூ.அண்ணாசாமி என்பவர் வீட்டில் ஒரு பகுதியில் குடித்தனம் இருந்தார்.

எம்.ஜி.ஆருக்கு பாரத் பட்டம் கொடுத்ததற்கான பாரா டு விழாவில் கருணாநிதி பேசியபோது, "எனக்கும், எம்.ஜி.ஆருக்கும் நீண்டநாள்' நட்பு உண்டு. இதை மிக நெருக்கமாக்கியது கோயம்புத்தூரில் பரவிய 'பிளேக்' நோய். அப்போது அவர் (கோவை) ராமநாதபுரத்தில், ஒரு சிறிய இல்லத்தில் இருந்தார். நானும், சிங்கா நல்லூரில் சிறிய இல்லத்தில் குடும்பத்துடன் இருந்தேன்.

'கோவையில் பிளேக் நோய் வேகமாகப் பரவ ஆரம்பித்ததும், நான் வீட்டில் உள்ளவர்களை ஊருக்கு அனுப்பிவிட்டு, எம்.ஜி.ஆர்., இருந்த வீட்டிற்கு வந்து விட்டேன். அப்போது அவர் ஜூப்பிட்டரின் 'முருகன்' படத்தில் பரமசிவனாகவும், 'ராஜகுமாரி', 'அபிமன்யு' படங்களிலும் நடித்துக் கொண்டிருந்தார். 'ராஜகுமாரி'யில் ஒரு சண்டைக் காட்சியில் நடித்துக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர்., நான் தயாரிப்பாளரிடம் 'கருப்புச்சட்டை அணிந்து எம்.ஜி.ஆர்., சண்டை செய்தால் நன்றாக இருக்கும்', என்று கூறினேன். எம்.ஜி.ஆரும் கருப்பு சட்டை அணிந்து சண்டை செய்தார்.

'படம் வெளிவந்தபின், எம்.ஜி.ஆர்., கருப்பு சட்டை அணிந்து சண்டையிடுவதைப் பார்த்து, ரசிகர்கள் காட்டிய உற்சாக ஆரவாரத்தைக் கண்டபின்தான், தயாரிப்பாளருக்கு என் திட்டம் புரிந்தது!' என்று சொன்னார்.

'ராஜகுமாரி'யில் (1947) 'வசன உதவி' என்ற டைட்டில் கார்டில் தன் பெயரைப் போடுவார்கள் என்று கருணாநிதி எதிர்பார்த்தார். ஏ.எஸ்.ஏ.சாமி போடவில்லை. அடுத்தபடமான 'அபிமன்யு'வில் போடுவதாக சொன்னார். 'அபிமன்யு'விற்கும் (1948) கருணாநிதி வசனம் எழுதினார். படம் வெளிவந்த அன்று ஆசையாக தியேட்டருக்கு போனார். திகைத்தார். 'அபிமன்யு'விலும் கருணாநிதியின் பெயர் காட்டப்படவில்லை. தயாரிப்பாளரிடம் கேட்டார்; 'நீ இன்னும் பிரபலமான பிறகுதான், உனக்கு டைட்டில் போடுவோம்,' என்றார் தயாரிப்பாளர் ஜூபிட்டர் சோமு.

வெறுப்புற்ற கருணாநிதி கோவையை விட்டு திருவாரூருக்கே திரும்பி விட்டார்.

அரங்கண்ணல் சொல்கிறார்: 'டைரக்டர் காசிலிங்கம் முயற்சியில் நண்பர் எம்.ஜி.ஆர்., அவர்களைக் கதாநாயகனாகப் போட்டு திருவல்லிப்புத்தூர் கோவிந்தன் என்பவர் திரைப்படம் எடுக்க விரும்பினார். அதற்கு கதையும், வசனமும் எழுதக் கருணாநிதி அவர்களுக்கு தந்தி கொடுத்து எம்.ஜி.ஆர்., வரச் சொல்லியிருந்தார். 'வேலைக்காரி' படம் வெற்றிகரமாக ஒடிக் கொண்டிருந்ததால் அதில் நடித்த திருமதி. வி.என்.ஜானகியை கதாநாயகியாக முடிவு செய்தார் காசிலிங்கம். இது மு.க., அவர்களின் இரண்டாவது சென்னை விஜயம். கதாசிரியர் மு.க., வை எவரெஸ்ட் ஓட்டலுக்கு எதிரிலிருந்த 'நாடார் மான்ஷன்' என்கிற விடுதியில் தங்க வைத்திருந்தார். விடுதலை அலுவலகத்துக்கு அருகிலே என்பதால், என் வேலை முடிந்ததும் அங்குதான் கிடப்பேன். மாலை வேளைகளில் மு.க.,வும், நானும் 'டிராம்' வண்டியியேறி யானை கவுனி மூலையில் சுபாஷ் சந்திர போஸ் ரோடிலிருந்த எம்.ஜி.ஆர்., வீட்டுக்குப் போவோம்.

**ஆர்.சி.சம்பத்**

*(வருவார்)*

# கள்ள வோட்டு



கட்டாரிலிருந்து பூண்டுலோயா
மெய்யன் நட்ராஜ்

சூலகருப்பனுக்கு இரவு தூக்கமே பிடிக்கவில்லை. விடிந்தால் தேர்தல். தன்னுடைய தலைவன் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராமல் கடந்த ஒரு மாதமாக பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தான். அந்தத் தொகுதியில் அவனுடைய தலைவருக்கு ஓரளவு மக்கள் செல்வாக்கு இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் அதனையும் மீறி இந்தத் தேர்தலில் யாருக்கு வாக்குப் போடுவது என்று மதில் மேல் பூனையாக இருப்பவர்களின் மனசை சாய்த்து அவர்களையும் தன்னுடைய தலைவனை ஆதரிக்கச் செய்யும் வகையில் கூட்டங்கள் ஏற்பாடு செய்வது, போஸ்டர்கள் ஒட்டுவது இன்னும் என்னென்ன செய்தால் தலைவர் அமோக வெற்றி பெறுவார் என்று எண்ணிப் பார்த்து என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் தன்னுடைய சகாக்களோடு கூடி செய்து முடித்திருந்தான்.

இடையிடையே எதிர்க் கட்சிகளின் பிரசாரக் கூட்டங்களுக்கு ஆட்கள் அதிகம் சேராமல் பார்த்துக் கொண்டும், எதிர்கட்சிக் காரர்களின் பதாகைகளை இரவோடு இரவாக கிழித்தெறிந்துவிட்டு தன்தலைவரின் பதாகைகளை கட்டுவதும், போஸ்டர்களை ஒட்டுவதுமாக ஓய்வில்லாமல் செய்ல்பட்டான். எதிர்க்கட்சிகளுக்கிடையில் பல உட்பூசல்களை ஏற்படுத்திவிட்டு, அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் வரவழைத்து சண்டைகளும் வர அந்தரங்கமான ஏற்பாடுகளும் செய்திருந்தான். தலைவர் கட்சிவிட்டு கட்சி தாவினாலும் தன்னை நம்பி கொடுத்த வேலையை சரியாக செய்து முடிக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு தன்னைத் தன் தலைவனுக்காகவே அர்ப்பணம் செய்து கொண்ட ஓர் உண்மையான தொண்டனாக தலைவருக்கு மிகவும் விசுவாசமாகவே இருந்தான்.

சென்ற தேர்தலிலும் தலைவரின் வெற்றிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவன் என்பதால் தலைவரே இம்முறை சூலகருப்பனை நேரில் சந்தித்து இம்முறையும் அவனுடைய ஒத்துழைப்பை கேட்டபோது, 'தன்மீது தலைவர் இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கின்றாரே' என்று எண்ணி மறுப்பு தெரிவிக்காமல் ஒப்புக் கொண்டான். தலைவரும் தேர்தல் பிரசாரத்திற்கு தேவையான எல்லா ஏற்பாடுகளுக்கும் சூலகருப்பனையே பொறுப்பாக நியமித்திருந்தார். அதனால் இம்முறை தேர்தல் பிரசார கூட்டங்களில் இவர்களின் கூட்டங்களுக்கே மக்கள் வெள்ளம் திரண்டு வந்திருந்தார்கள்! எப்படியும் இம்முறை தலைவரின் வெற்றி உறுதி என்பதை கடைசித் தேர்தல் கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தை வைத்தே மதிப்பீடு செய்து கொண்டான். இருந்தாலும் தேர்தல் நடக்கும் போது செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலையை சரியாக செய்து முடிக்க வேண்டுமே என்ற ஆதங்கத்தில் தான் அவனின் நித்திரை விழிகளை விட்டு ஓடிப்போயிருந்தது.

எழுந்து வந்தவன் எல்லா வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் இது விசயமாய் ஏற்பாடு செய்து வைத்துள்ள தமது சகாக்களோடு கூடி மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்தி விட்டு வந்து மீண்டும் கட்டிலில் சாய்ந்தான். ஒரு சில மணித்தியாலங்கள் கூடச் சரியாக உறங்கியிருக்கமாட்டான். அதற்குள் விடிந்து விட்டதுபோல் ஒரு பிரமை எழ விழித்துக் கொண்டு கடிகாரத்தில் மணி பார்த்தான். அது 5 மணி என்றது. அதற்கு மேலும் உறங்குவது சரியில்லை என்று எழுந்து போய் குளித்துவிட்டு வந்து வாக்குச் சாவடிக்குப் போகத்தயாரானான். முதலில் தன்னுடைய வாக்காளர் அட்டையை எடுத்து சட்டைப்பையில் வைத்துக் கொண்டு, குடும்பத்தில் எல்லோரிடமும் "நேரத்தோடு வந்து வாக்களித்து விடுங்கள்!" என்று கூறிவிட்டு தேர்தல் பிரசாரத்திற்காக தலைவர் தந்த வேனில் ஏறி வாக்குச் சாவடிக்குச் சென்றான். அவனுக்கு முன்பே அவனுடைய சகாக்கள் பலர் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். இவனைக் கண்டதும் எல்லோரும் அருகில் சுற்றி வந்தனர். பிறகு இவன் கையிலிருந்து ஆளுக்கு ஒரு லிஸ்ட் விநியோகமானது.

அந்த லிஸ்டில் வாக்களிப்பு நிலையத்திற்கு வரமுடியாதவர்கள். அண்மையில், இறந்து போனவர்கள், சொந்த விவகாரமாய் வெளியூர் போய் விட்டவர்கள் என்று அன்றைய தினத்தில் வாக்களிக்க முடியாதவர்களின் பெயர்கள் இருந்தன. முதல் வேலையாக வயது போனவர்களை அழைத்து வந்து வாக்குப் போடச் செய்யவேண்டும் என்று எண்ணி தனது சகாக்கள் மூலம் ஊரின் சந்து பொந்துகளுக்கெல்லாம் தலைவர் ஏற்பாடு செய்து தந்த வாகனத்தை அனுப்பினான். அவனுடைய சகாக்களும் செயலில் இறங்கி நண்பகல் பன்னிரண்டு மணிக்குள் ஓரளவு வயதானவர்கள், நடக்க முடியாதவர்கள், ஊனங்கள் எல்லோரையும் வாக்களிக்கவைத்து விட்டார்கள்.

அதன்பின்பு அவர்களின் லிஸ்ட் பிரகாரம் அன்றைய சூழ்நிலையில் வாக்களிக்க முடியாதவர்களின் வாக்காளர் அட்டையை சேகரித்து அதை கள்ளத்தனமாக இட்டுவிடும் முயற்சியில் இறங்கினான். மலசலகூடத்திற்குச் சென்றாலும் கையோடு அடையாள அட்டை கொண்டு செல்ல வேண்டும் என்ற கடுமையான சட்டம் இருந்தும் வாக்களிப்பதற்கு வாக்களிப்பு நிலையங்களில் அது பிரதானம் இல்லை எனும் நிலை இருப்பதை பயன்படுத்திக் கொண்டு, ஆள்மாறாட்டத்திற்காக தான் தயாராக வைத்திருந்த ஆட்களைக் கொண்டு சமயம் பார்த்து அனுப்பிக் கொண்டிருந்தான். ஒருவாறு வாக்கெடுப்பு முடிவதற்கு ஒரு பத்து நிமிடத்திற்கு முன்பாக அவனது வேலையை திருப்தியாக செய்து முடித்திருந்தான்.

அந்த சமயத்தில்தான் அவனுக்கு இன்னும் அவனுடைய சொந்த வாக்கு இடாமல் இருப்பதே ஞாபகம் வந்தது. நேரத்தைப் பார்த்தான் இன்னும் ஐந்தே நிமிடங்கள் மாத்திரமே இருந்தன. "யார் யாரோட வாக்கை எல்லாம் போட்டு தலைவரை வெற்றிபெற பாடுபட்டு விட்டு என்னுடைய வாக்கை விட்டுவிடுவதா?" என்றவாறே வாக்களிப்பு நிலையத்தினுள் நுழைந்து தனது வாக்காளர் அட்டையை நீட்டினான். வாக்காளர் இடாப்பு புரட்டப்பட்டு சூலகருப்பனின் பெயர் தேடப்பட்டது! வாக்குச் சீட்டை வாங்கி தலைவரின் பச்சோந்திச் சின்னத்திற்கு நேராக புள்ளடி இடப்போகும் சந்தோசத்தில் நின்ற சூலகருப்பனிடம் "சூலக்கருப்பன் ஏற்கனவே வாக்களித் தாச்சு!" என்ற வார்த்தை மாத்திரம் வந்து அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊத்தியது! அதற்குள் வாக்கெடுப்பு நேரம் முடிந்து விட வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுவிட்டது. இனிமேல் எதையும் செய்ய முடியாது என்பதால் "நாம எத்தனையோ பேரோட வாக்கை எல்லாம் கள்ளத்தனமாய் போட்டோம். கடைசியில் என் வாக்கையே எவனே கள்ளத்தனமாய் போட்டு விட்டானே! பாவி!" என்று அவனது வாக்கை கள்ளத்தனமாய் போட்டவனை கெட்ட வார்த்தைகளால் அபிஷேகம் செய்தபடி வெளியேறினான்.

# "ஏ நேசிதனே....."



ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி.

எந்த செய்தியும் நல்ல செய்தி இல்லை என்பார்கள். தேர்தல் காலத்தில் இது வெகுவாகப் பொருந்தும். இன்று எத்தனை வன்முறைகள் என பட்டியலிட்டு வானொலி செய்திகள் வலம் வருகின்றன. எத்தனை பேர் சுடப்பட்டார்க்ள, காயப்பட்டார்கள், இறந்து போனார்கள் என்று பத்திரிகைகள் சுடச்சுட பிரசுரித்த செய்திகள் உண்மையில் ரகுவின் மனதைச் சுட்டன.

நாட்டையும் மக்களையும் இன்றுள்ள அவல நிலையையும் நினைக்க நினைக்க ரகுவுக்கு மனம் பாரமாகும். யார் காரணம்? அவரைக் கேட்டால், அவர் என்பார்; இவரைக் கேட்டால் அவரைக் காட்டுவார். ஒருவரையொருவர் குற்றம் சாட்டி சுட்டு விரலை உயர்த்துபவர்கள் தத்தம் தவறுகளைக் கண்டு கொள்வதேயில்லை. இது தவறென்று தெரிந்தாலும் அலட்டிக் கொள்வதில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பதவியும். பணமும் புகழும். மக்கள் எக்கேடு கெட்டுப் போனால் யாருக்கென்ன?

கண்கள் தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்த்தவாறிருக்க, ரகுவின் எண்ணங்கள் அரசியலை அசைபோட்டன. யாருக்கு போடுவது ஓட்டு? அவன் 'இதுதான் என் காட்சி' என்று பக்கம் சார்ந்திருப்பதில்லை. எந்தக் காட்சியாயினும் மக்களுக்கு உண்மை யான சேவைகளை ஆற்றி, தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமா இவரால்? என்று ஆராய்ந்து பார்த்தே முடிவெடுப்பான்.

"என்ன பெரியயோசனை? எந்தக் கோட்டையை பிடிக்கப் போகிறாய்?" என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். திரும்பிப்பார்த்தான். நண்பன் ரொஷான்! வழமைக்கு மாறாக உடையணிந்திருப்பதில் ஒரு வித்தியாசம் நண்பனில் தெரிந்தது. "என்னப்பா இந்தக் கலர்? கட்சியில் சேர்ந்து விட்டாயா? போஸ்டர் ஒட்டப் போகிறாயா? எதற்கும் இதே கலரில் ஒரு தொப்பியையும் மாட்டிக்கொள்!"

கேலியாகச் சொன்னான் ரகு.

நண்பன் முகத்தில் லேசான சிரிப்பு. அதிலும் வித்தியாசம். "ம் சரி ரொம்பச் சரி!" என்றவன் குரலில் கேலியில்லை. உண்மையில் குறிப்பிட்ட கட்சிக்கு தான் தொண்டு செய்யப் போவதாகவும் குறிப்பிட்ட நபரின் வெற்றிக்குப் பாடுபடப் போவதாகவும் சொன்னான். ரகுவுக்குள் அதிர்ச்சி அலைகள் பரவின.

"வேண்டாம் ரொஷான். காலம் ரொம்ப கொடுமையானது. உயிர்களுக்கு உத்தரவாதமில்லை. ஒதுங்கிக்கொள். அரசியல் வேண்டாம் என்பதில்லை. ஆனால் இப்போதுள்ள நிலமையில் நமக்கு சரிப்பட்டு வராது இதெல்லாம்!" ரகு எவ்வளவோ எடுத்துச் சொன்னான். ரொஷான் கேட்பதாயில்லை. அவன் மனதையும் மூளையையும் யாரோ நன்றாகச் சலவை செய்து விட்டார்கள்.

பின்னர் வந்த நாட்களில் ரொஷானை சந்திக்க முடியவில்லை. வீட்டில் கேட்டால் கவலையுடன் பெற்றோர் "வீட்டிற்கு வந்தே நாலைந்து நாட்கள்" என்று கண்ணீர் விட்டார்கள். அவன் மனைவி எதுவும் பேசாவிட்டாலும் அவள் இதயம் சுமையாயிருப்பது முகத்தில் தெரிந்தது.

ஏனிப்படி மாறிப் போனான். ரொஷான்? என் நண்பன், என் கொள்கை அவன் கொள்கை இரண்டும் ஒன்றே. எதுவாயினும் இருவரும் கலந்து பேசி முடிவெடுத்தே செயல்படுவோம். இன்று இப்படி ஒருதலைப் பட்சமான முடிவை எடுத்து விட்டானே. ஊரில் கேள்விப் படும் வன்முறைச் செய்திகளிலும் அவன் பெயர் அடிபடுகிறதே. எதுவும் நல்லதாயில்லை. இது நன்றாயில்லை. என்ன செய்வது? ரகுவுக்குப் புரியவில்லை.

மாறுவது தான் மனிதர்கள் குணம். இந்தத் தத்துவம் தெரியும். ஆனாலும் தன் நேசத்துக்குரியவர்களின் மாற்றம் மனதுக்கு வேதனை தரும். வெளியில் சொல்ல முடியாத கவலை தரும். வாழ வேண்டியது இளம் குருத்துக்களை தவறான வழியில் மூளைச் சலவை செய்து திசைத் திருப்பி விடும் 'பெரிசு'களை நினைக்க கோபம் கோபமாய் வந்தது. ஆனால் என்ன செய்ய முடியும்? எதுவுமேயில்லையே. இது அரசியல். போதை வஸ்து போன்றது. ஒருமுறை பழகி விட்டால், சுவை பட்டுவிட்டால் விடத் தோன்றாது. அதுவும் விடாது.

மழைதூறும் மாலையில், செய்தி வந்தது. கண்களில் நீரையும், இதயத்தில் இரத்தத்தையும் வரவைக்கும் செய்தி வந்தது. ரொஷானை யாரோ வெட்டி விட்டார்களாம். காயம் பெரிது, ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்திருக்கிறார்களாம். பிழைப்பது இறைவன் கையிலாம். தேர்தலில் யார் வெற்றி பெறுகிறார்களோ இல்லையோ ரொஷான் வாழ்க்கையில் தோற்றுப் போய்விட்டான். அது அவனின் மனைவியின் கண்ணீரில் தெரிந்தது.

# தொடரும் கதை

அதோ, ஓரமாக சால்வையை இடுப்பில் கட்டியபடி பவ்யமாக நிற்கிறாரே. அவர்தான் பெண்ணின் அப்பா ராமசாமி. பரிதாபமான முகம்-வளைந்த முதுகுப்புறம்-சோர்ந்து நிற்கும் மீசை. இத்தியாதிகளுடன் ராமசாமி ஒடுங்கி நிற்கிறார். தடதடக்கும் இதயம்-கெஞ்சி நிற்கும் விழிகள்- 'உம்' என்றால் இதோ காலில் விழ ரெடி என்பன போன்ற அங்கலட்சணங்களுடன் அவர் பக்கத்திலேயே தயங்கியபடி மனைவி கமலா. இருவருக்கும் துணையாக வெட்டி முறிக்கிறேன் பேர்வழி என்ற ஏதோ சப்தமாகப் பேசத் தொடங்கிய ராசன், அக்கா கமலாவின் கண்ணசைவில் வாயைக் கப்பென்று மூடிக் கொண்டார்.

ராமசாமி-கமலாவின் சீமந்த புத்திரி ராஜிக்கு இத்துடன் எட்டு வரன் பார்த்தாயிற்று. இதற்கு முன்னர் ஏழு மாப்பிள்ளைகளும் வேறு வேறு பிரச்சனைகளால் கை நழுவிப் போய் விட்டனர். ராஜிக்கு ஏழில் செவ்வாய் குற்றம் வேறு படாய்ப்படுத்திக் கொண்டிருந்தது. 'என்ன கஷ்ரப்பட்டாலும் இந்த மாப்பிள்ளையைப் பேசி முடித்து விட வேண்டும்' என்று நெஞ்சு தட தடக்க ஊரிலுள்ள அத்தனை கோவில்களுக்கும் நேர்த்திக் கடன் வைத்துக் கொண்டிருந்தாள் கமலா.

"பொடியனை யூனிவசிற்றியிலை படிப்பிக்க மட்டும் என்ன ஒரு காசே? ஒரு தோட்டக் காரன்ரை றேற் தான் அது. சொல்லிற னெண்டு குறை நினைக்காதேங்கோ. உந்தக் காசிலை தரையிலையே நடக்க முடியாது; பிறகேன் ஆகாயத்திலை பறக்க ஆசைப்படு றியள்? கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை யெண்டு உத்தியோக மாப்பிள்ளையும் வேணும்; காசும் தரேலாது எண்டால் இது எந்த ஊர் நியாயம் எண்டு கேக்கிறேன்?" என்று காறித் துப்பாத குறையாக எரிந்து விழுந்தாள் மாப்பிள்ளையின் தாயார்.

"என்னம்மா, நீங்களும் ஒரு பொம்பிளை. நீங்களே இப்படிப் பேசினால் நாங்கள் என்ன செய்யிறது?" என்று இழுத்தாள் கமலா.

"இதுக்கு மட்டும் குறைச்சலில்லை. நல்ல அம்மாவும் ஆட்டுக்குட்டியும். என்னைப் பார்க்க என்ன வயது போனவள் மாதிரியே இருக்கு?" என்று கழுத்தில் கிடந்த நெக்லஸை நிமிர்த்தியபடி முணுமுணுத்தாள் மாப்பிளையின் தாயார்.

"இது சரிவருமாப் போலை எனக்குத் தெரியேல்லை. வளவளவெண்டு பேசிக் கொண்டிராமல் வாங்கோ போய் உருப்படியான வேலையாப் பார்ப்பம். ஏதோ போட்டுக் கிடக்கிறதை எடுக்கிறமாதி மாப்பிளை எடுக்கத் திரியினம். இதுக்கு முந்திப் பேசின வீட்டிலை இருபது இலட்சம் காசாத் தாறம் எண்டவை. அதை விட வீடு, தோட்டம், துரவு எண்டு ஏராளம் சொத்து. என்ன,



அவ்வையூர் காந்தி அருணாசலம்-கனடா

ரெண்டு இலட்சம் முடிஞ்சுது. அவன் கட்டினாப் போலை என்ன! எங்களுக்கே தரப் போறான்? எல்லாம் உங்கடை பிள்ளைக்குத் தானே?" என்று மாப்பிள்ளையின் தகப்பன் அஸ்திவாரத்தைப் பலமாகப் போட்டார்.

"எங்கடை பெண்ணையும் செலவழிச்சுத் தான் யூனிவசிற்றியிலை படிப்பிச்சனாங்கள். அங்கை என்ன பொடியங்களுக்கு மட்டும் தான் காசு பெண்களுக்கு ஃப்ரீயா?" என்று நாக்கு நுனி வரை வந்த வார்த்தைகளை எச்சிலுடன் சேர்த்து மென்று விழுங்கிய ராமசாமி முகத்தைப் பவ்யமாக வைத்துக் கொண்டு, "அது எனக்கு விளங்குது பாருங்கோ. எனக்கும் பத்து லட்சத்தை உடனே பிரட்டிறதென்டால் கொஞ்சம் சிக்கலாயிருக்கு. போன முறை வயலும் மழையிலை நல்ல விளைச்சலில்லை. அது தான் கொஞ்சம் குறைச்சியளெண்டால்... ஹீ ஹீ!" என்று தலையைச் சொறிந்து கொண்டு வழிந்தார்.

"என்னது, பத்து லட்சம் கூடத் தரலாதே? இந்தக் காலத்திலை பத்து லட்சம் இந்தப் பொடிச்சி கொஞ்சம் சிவப்பா கண்ணுக்கு இலட்சணமாக் கிடக்கெண்டு பார்த்தம். அதுக்காகக் கண்ணை மூடிக் கொண்டு பாழுங்கிணத்துக்கை விழ முடியுமே? நான் இப்ப நினைச்சாலும் இந்த நிமிடமே இதை விட வடிவா, நல்ல சீனத் தோடை ஒரு பெண்ணை சுண்டிச் சுண்டி இப்ப கொண்டு வருவன். வா போவம்!" என்று மாப்பிள்ளை பக்கத்தில் தலையாரியாய் தெரிந்த ஒரு முதியவர் கை விரலைச் சொடக்குப் போட்டபடி எழுந்தார்.

"ஐயா! உங்கடை கையைக் காலைப் பிடிச்சுக் கெஞ்சுறன். தயவு செய்து போகாதேங்கோ. இப்படிப் பொருத்தமான ஒரு சாதகம் என்ரை பிள்ளைக்குக் கிடைக்காது. இப்ப அஞ்சு லட்சம் தாறன். மற்ற அஞ்சுக்கு இளையவளுக்கு வைச்சிருக்கிற காணியை உங்கடை பேருக்கே ஈடா எழுதுறன். என்ரை பொடியனுக்கும் ஒண்டு ஒண்டரை வரியத்திலை படிப்பு முடிஞ்சிடும். அத்தோடை காணியை மீட்டுப் போடுறன்!" எண்சான் உடம்பு ஒரு சாணாகக் கூனிக் குறுகிப் போய் வளைந்து நின்றார் ராமசாமி. பக்கத்தில் நின்ற கமலாவின் கண்கள் இயலாமையின் எல்லையில் நீரை இறைக்க ஆயத்தமாகத் தழும்பிக் கொண்டு நின்றன.

இரண்டு வருடங்கள் உருண்டோடி மறைந்தன. இப்போது சோபாவில் கால்மேல் கால் போட்டபடி கம்பீரமாக அமர்ந்திருக்கும் அந்தப் பெரியவரை உங்களுக்குத் தெரிகிறதா? நேர் கொண்ட பார்வை-நிமிர்ந்த ஆஜானுபாகுவான தோற்றம்-துடிக்கும் மீசை இத்தியாதிகளுடன் ராமசாமி அலட்சியமாக இருக்கிறார். ஆண் மகனின் தாயென்ற அகம்பாவம்-அஞ்சாத விழிகள்- ஆணவமான தோற்றத்துடன் மிடுக்காகப் பக்கத்தில் கமலா. இருவரும் இப்போது தங்கள் மகனை ஏலம் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு சதம் குறைந்தாலும் கல்யாணத்தை நடத்த முடியாது என்று தடிப்பான குரலில் இருவரும் பெண் வீட்டாரை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். பெண்மக்களைப் பெற்றவர்கள் பரிதாபத்துக்குரிய ஜீவன்களாகக் கையைப் பிசைந்தபடி முழித்துக் கொண்டிருக்க, ஆண் பிள்ளைகளைப் பெற்றவர்கள் நெஞ்சை நிமிர்த்தியபடி ஆணவத்துடன் பேரம் பேசும் இந்த சுவராஸ்யமான கதை உலகம் உள்ளளவும் தொடரும் கதை தானே? ■

# போதை தருவது எது...?


# இலக்கிய நயம்

"என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?"

மடியில் படுத்திருந்தபடியே, கூந்தலினுள் அளைந்துகொண்டிருந்த அவன் விரல்களைப் பிடித்து நிறுத்திவிட்டு லாவண்யா கேட்ட கேள்வி மிக அபத்தமாகப் பட்டது கபிலனுக்கு.

அவள் கைகளிலிருந்து தன் விரல்களை விடுவித்துக் கொண்டே மீண்டும் கூந்தலினுள் அளையவிட்டு, அந்த சுகத்தை கண்களில் பிரதிபலித்தபடி "ம்...." என்று முனகினான் கபிலன்.

சட்டென முகத்தை நிமிர்த்தி அவன் தோள்களைக் கட்டிக் கொண்டு,



"எவ்வளவு பிடிச்சிருக்கு?" என்று விழிகளை விரித்துக் கேட்டாள் லாவண்யா.

எவ்வளவு பெரிய விழிகள்! சமுத்திரத்தை இரு துண்டுகளாக்கி வைத்தது மாதிரி! 'இந்த விழிகளின் அளவு!' என்று சொல்லலாம். ஆனால் அது அவளுக்கு திருப்தி தராது என்று தோன்றியது. 'அம்மாவை உனக்கு எவ்வளவு பிடிக்கும்?' என்று கேட்டால், 'இவ்வளவு,' என்று இரண்டு கைகளையும் முதுகுவரை விரித்து காற்றை அளந்து கூறும் குழந்தையைப் போலச் சொல்லிவிட முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

"இந்த பிரபஞ்சத்தின் துகள்கள் தானே நாம். முழு பிரபஞ்சத்தின் அளவுக்கும் உன்னைப் பிடித்திருக்கிறது என் பிரியமே!" உவகையோடு அவன் பிடரியைப் பிடித்து இழுத்து நெற்றியில் முத்தமிட்டாள் லாவண்யா.

"தொட்டனைத் தூறும்...."

"மணற்கேணி" என்றாள் லாவண்யா.

"இல்லை. என் காதல்!" என்று அவளை அழுத்தமாகக் கட்டிக் கொண்டான்.

"ம்..." என்று அவள் முனகினாள்.

"தம்பூராவின் ஒற்றை நாதம் அந்தச் சூழலையே நாதப் பெருவெளியாக நிரப்புமே.... அதுபோல் உன் ஒற்றை முனகல் என் இதயம் முழுக்க நிரப்புகிறது. நிரம்பியிருக்கும் அந்த நாதம் காதல் அமுதமாய் நரம்புகள் எங்கும் பாய்கிறது...."

சொல்லிக் கொண்டே போனவனின் உதடுகளில் விரலை அழுத்தி "போதும்" என்றாள். "கள்ளுண்டவர் போலப் பேசுகிறீர்கள்... நரம்புகளில் ஓடுவது நாதம் போல் தெரியவில்லை... ஏதோ போதைப் பொருளாகவல்லவா தெரிகிறது," என்று சிரித்தாள்.

"அப்படியா? அப்படித்தானென்றால் உன் குரலிலிருந்துதான் போதை என் நரம்புகளுக்குப் போயிருக்கும். நீ தொட்டால், பேசினால் என் உடலெங்கும் தேன் பாய்ந்ததுபோல் தித்திக்கிறது. மீண்டும் மீண்டும் தேன் கேட்கிறது இதயம்..." என்று அவள் இதழ்களைத் தொட்டான்.

அவள் உடலை நெளித்து அவனோடு பிணைத்துக் கொண்டாள். சிணுங்கியது அவளா, வளையலா, கொலுசா என்று தெரியாத கிறக்கத்திலிருந்தான் கபிலன்.

"வயலினும் புல்லாங்குழலும் தரமுடியாத புத்துணர்ச்சியை உன் வளையலும் கொலுசும் தருகின்றன..." என்று முனகினான்.

அவன் காதல் மொழிகளைத் தொடர்ந்து கேட்கும் ஆவலில் அவள் "ம்" என்றாள்.

"தொடத் தொடக் காதல் உணர்ச்சி பெருகுவதுபோல உன் வளையல்களும் கொலுசுகளும் காதலைப் பெருக்கும் சாதனங்கள் தான் கண்ணே...."

"ம்..." என்றாள் அவள் விழிகளிலும் ஆவலைத் தேக்கி.

## தருவது முழடில்யன்

"அந்த உன் ஒற்றைச் சொல்லில் வெளிப்படுகிற காதல் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகிற சங்கீத போதையைத் தருகிறது....."

"வேறென்ன புலவரே" எகத்தாளமாக.

"கள்ளுண்டு மயங்க மயங்க, போதையேறியோர் மீண்டும் மீண்டும் கள்ளையே விரும்புவது போல, காதலும் வெளிப்பட வெளிப்பட மேலும் மேலும் இனிமை தருகிறது.

**களித்தொறும் கள்ளுண்டால்வேட்டற்றால்**
**காமம் வெளிப்படுந் தோறும் இனிது.**

(குறள்: 1145)

# ஸ்போர்ட்ஸ்

## பயிற்சியளிக்கும் ரொபின் சிங்



சூதாட்ட விவகாரத்தால் இந்திய கிரிக்கெட் அணி கலகலத்துப் போயிருக்கிறது. இதில் சம்பந்தப்படாதவர்களில் ரொபின் சிங்கும் ஒருவர் என்பது சற்று ஆறுதலான விஷயம்.

களத்தடுப்பில் பந்துகளைப் போக விடாது உருண்டு, புரண்டு தடுப்பதும் துடுப்பாட்டத்தின்போது விக்கெட்டுக்கிடையே ஓடி ஓட்டமெடுப்பதிலும் ரொபின் சிங்கிற்கு நிகர் அவரேதான்.

இந்திய அணி எப்போதெல்லாம் மளமளவென்று விக்கெட்டுக்களை இழந்து தத்தளிக்கிறதோ, அங்கு ரொபின் சிங் நின்று அணிக்காகப் போராடிக் கொண்டிருப்பார்.

இவையெல்லாம் கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் ரொபினுக்குத் தனி மரியாதையை உருவாக்கிக் கொடுத்துள்ளன. விமர்சகர்கள் மற்றும் இந்நாள், முன்னாள் வீரர்கள் ரொபினை வெகுவாகப் புகழ்கிறார்கள்.

உலகில் இன்று வெற்றிகரமாக உலா வரும் அவுஸ்திரேலிய கப்டன் ஸ்டீவ் வோவிடம், 'உங்களுக்குப் பிடித்தமான இந்திய வீரர் யார்?' என்று கேட்டதற்கு, தன்னைக் கவர்ந்தவர் ரொபின் சிங் என்று கூறியுள்ளார். அத்துடன் ஒவ்வொரு முறையும் தன் திறமையை வெளிப்படுத்திப் போராடக் கூடியவர் அவர் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரபல கிரிக்கெட் விமர்சகர் ஹர்ஷா போக்ளே, ரொபின் சிங்கைப் பற்றிக் கூறும் போது, 100 சதவீதம் ஈடுபாட்டுடன் விளையாடக் கூடியவர் என்று தெரிவித்துள்ளார்.

"35 வயதைத் கடந்து விட்ட ரொபின் இன்னும் சில வருடங்கள் விளையாடக் கூடும். அதன் பின், எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் நாடு முழுவதும் இருக்கும் கிறிக்கெட் ஆர்வமுடைய 100 இளைஞர்களைத் திரட்டுவேன். அவர்களுக்கு ரொபின் சிங்கைக் கொண்டும் பயிற்சி அளிக்கச் செய்வேன். அவர்களில் 10 பேர் ரொபின் சிங்கைப் போல் முழு ஈடுபாடு காட்டக் கூடியவர்களாக உருவாக்குவேன்!" என்று ஹர்ஷா கூறியுள்ளார்.

ஹர்ஷா கூறியதில் ஒரு சிறுபகுதி ரொபின் சிங் ஓய்வு பெற முன்னரே நிறைவேறப் போகிறது.

ஆம். கிரிக்கெட்டில் ஆர்வம் உள்ள இளைஞர்களுக்கு ரொபின் சிங் பயிற்சி அளிக்கப் போகிறார். இதற்கான ஏற்பாடுகளை முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் சஞ்சய் மஞ்ச்ரேக்கர் செய்கிறார்.

இதற்காக இந்தியாவில் அஹமதாபாத், புனே, மும்பாய், சென்னை ஆகிய நகரங்களில் இந்தக் கூட்டம் நடைபெற இருக்கிறது. இதில் கிரிக்கெட் அகடமிகளில் உள்ள வீரர்கள், பாடசாலை மாணவர்கள் பங்கு பெறுகிறார்கள்.

கிரிக்கெட் தொடர்பான சந்தேகங்களுக்குப் பதிலளிப்பதுடன் விளையாட்டு நுணுக்கங்களையும் ரொபின் சிங்கின் உதவியுடன் கற்றுக் கொடுக்கப் போகிறார் மஞ்ச்ரேக்கர். மஞ்ச்ரேக்கரின் சொந்த இடமான மும்பாயில் தான் பல கிரிக்கெட் ஜாம்பவான்கள் இருக்கிறார்களே. இவர் ஏன் ரொபின் சிங்கை அழைத்தார்?

"ரொபின் சிங் பெரிய திறமையானவராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் இதயத்தால் விளையாடக் கூடியவர். மன உறுதியுடனும் நாட்டுக்காக விளையாடுவதிலும் முன்னுதாரணம் இவர்தான். இன்றைய இளைஞர்களுக்கு முக்கிய தேவை அதுதான். அதனால் தான் ரொபின் சிங்கை அழைத்தேன்!" என்கிறார் மஞ்ச்ரேக்கர்.

# சிந்தியா பதில்கள்

✐ **ஒலிம்பிக்கில் நம் சுசந்திகா எப்படி?**

எம்.பிரியங்கா, கொழும்பு-13.

ஆனானப்பட்ட அமெரிக்க வீராங்கனைகளே மைதானத்தில் ஆடியும் அலைந்தும், விசிலுக்குமுன் ஓடித் திரும்பியும் பதற்றத்தைக் காண்பித்துக் கொண்டிருக்கையில், ஓடுவது என்றாலே எனக்கு ஊஞ்சலாடுவது மாதிரி என்பதுபோல, அலட்டிக் கொள்ளாமல் இவர் ஓடிமுடித்ததைப் பார்த்த போது தங்கம் எடுப்பதும் இவருக்கொன்றும் சிரமமில்லை என்றே தெரிகிறது.

வெண்கலம் வென்ற சந்தோஷத்தைவிட மயிரிழையில் வெள்ளிப் பதக்கத்தை விட்டதே நறநறவென்று மனதில் இன்னும் உறுத்திக்கொண்டு கிடக்கிறது.

✐ **அசரீரி என்றால் என்ன சிந்தியா?**

வீரசிங்கம் ஸ்ரீதரன், மல்லிகைத்தீவு.

நடக்கப் போவதை அறிவுறுத்தும் விதமாக வானத்திலிருந்து (எக்கோ எஃபெக்டுடன்) குரல் அவ்வப்போது கேட்டதாகச் சொல்லப்படுகிறது. நம்மாட்கள் அந்தக் காலத்தில் தலையிடி காய்ச்சலுக்கும் அண்ணார்ந்து வானத்தைப் பார்த்தபடி இருந்திருக்கிறார்கள், ஏதாவது அசரீரி சொல்லாதா என்று, இப்போது கலைஞரின் பராசக்தி வசனம் போல, "வானம் எப்போதடா வாய்திறந்து பேசியது முட்டாளே!" என்றுதான் நாம் கேட்க வேண்டும்.

✐ **சிந்தியா! காதல் துன்பமானதா? இன்பமானதா?**

வி.லவன், கரையாக்கந்தீவு.

உருதுக் கவிஞன் ஒருவன் சொல்வதைப் பாருங்கள்:

'இந்தத் துக்கம்
எனக்குப் பிடித்தது.
காரணம்
இது
நீ தந்தது!'

ஆமாம். துக்கமாக இருந்தாலும் பரவாயில்லை. காதலியின்/காதலனின் மூலம் வருவதாக இருந்தால் வரவேற்கத் தயாராக இருக்கும் இதயத் துடிப்புத்தான் காதல்.

✐ **முரளி இல்லாத இலங்கை அணி?**

ஆர்.கோபி, இங்குறு ஓயா.

சச்சின் 'அவுட்'டான இந்திய அணி போல.

✐ **உண்மைக்காக உயிரையும் விடலாமா?**

எம்.ஐ.எ.ப்.அமீர்கான், நாச்சியாதீவு.

விடுவதால் உண்மை நிலைத்துவிடாது என்று தெரிந்தும் எதற்காக உயிரை விட வேண்டும்? உலகம் தட்டையானது இல்லை, உருண்டையானது என்றும், பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்றும் கலிலியோ சொன்னபோது, அக்கால கிறிஸ்தவ மதகுருமார்கள் அவரை கோர்ட்டுக்கு இழுத்தார்கள். சொன்னதை வாபஸ் பெறுமாறும் இல்லாவிட்டால் மரண தண்டனையை ஏற்க வேண்டி வரும் என்று எச்சரித்தார்கள். உலகம் தட்டையானது என்றும், பூமியைச் சுற்றித்தான் சூரியன் வலம் வருகிறது. என்றும் பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது பைபிள் எப்படித் தவறாகும் என்பது அவர்



களது வாதம். கலிலியோ முட்டாள்தனமாக எதிர்த்து வாதிடவில்லை. கோர்ட்டில் அவர் சொன்ன பதில் கெட்டிக்காரத்தனமானது: "போப் அவர்களே, நீதிபதி அவர்களே, நீங்கள் விரும்பினால், பைபிள் சொன்னது சரிதான் என்று எழுதிக் கொடுக்கிறேன். பூமியைச் சுற்றித்தான் சூரியன் வருகிறது என்றும் எழுதித் தருகிறேன். ஆனால் சூரியனும் பூமியும் இதைக் கேட்கப் போவதில்லை. அவை தம்பாட்டில்தான் இயங்கப் போகின்றன!" என்றார். அவரைக் கோழை என்று ஏசிய மக்களிடம் கலிலியோ கூறியது இதுதான்: "என்னைச் சுற்றியுள்ள 99 சதவீத முட்டாள் ஜனங்களுக்காக நான் ஏன் என் உயிரை விட வேண்டும்?"

✐ **நம் நாட்டில் தமிழ் திரைப்படங்கள் தயாரிப்பதில் ஆர்வம் குறைவாக இருக்கிறதே. ஹீரோக்கள் இல்லாத காரணமா, நல்ல இயக்குநர்கள் இல்லாத காரணமா அல்லது தொழில்நுட்ப முன்னேற்றம் இல்லாத காரணமா?**

பெ.கோகிலன், மேபீல்ட், ஹற்றன்.

செலவை ஈடுகட்ட போதுமான ரசிகர்கள் இல்லாததே காரணம்.

✐ **சக்தி ரீ.வியில் 'செய்தி' என்பதை 'எதிரொளி' என்று மாற்றி விட்டார்களே... என்ன காரணம்?**

கே.வசந்த், கொழும்பு-15.

மற்ற அலைவரிசைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டத்தான். ஆனால், 'செய்தி'யை வேறு என்ன பெயரிட்டு அழைத்தாலும் அது நிலைக்கப்போவதில்லை. "எட்டு மணிக்கு சக்தியின் எதிரொளி கேட்டீர்களா?" என்றா நீங்கள் விசாரிக்கிறீர்கள்?

✐ **சுயசிந்தனையில் செயற்படாமல் பிறர் சிந்தனையில் செயற்படுபவர்களைப் பற்றி?**

ருமியா, பன்கொல்லமட.

'ரோபோ'க்கள். மனிதர்கள் போன்றிருந்தாலும் அவை மனிதர்கள் இல்லை.

✐ **சிந்தியா! எனது அபிமான நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் விலாசத்தை தரமுடியுமா?**

ரஜினி ரசிகன், கலஹா.

'ரஜினி ரசிகன், கலஹா' என்பதே உங்கள் விலாசமாக இருக்கும் போது, 'சூப்பர் ஸ்டார் சென்னை' என்று போட்டால் அவருக்குக் கடிதம் போய்ச் சேராதா என்ன? ம்... இல. 06, ஜார்ஜ் அவென்யூ, கஸ்தூரி எஸ்டேட், இரண்டாவது தெரு, சென்னை-86. அது அவரது வீட்டு முகவரி. அலுவலகம்: இல.18, ராகவவீரா அவென்யூ, சென்னை-86.

✐ **விஜய்-சிம்ரன் நடிக்கும் 'பிரியமானவளே' எப்போது வெளிவரும்?**

கே.தயாளன், பொன்னரசன்குளம்.

தீபாவளிக்கு.

✐ **நடிகைகளில் கூடுதல் கவர்ச்சி காட்டும் நடிகை யார்?**

எம்.பி.நிசால்தீன், பிறைந்துரைச்சேனை.

உங்களுக்கு எது கவர்ச்சியாகத் தெரிகிறது என்பது தெரிந்தால்தானே பதில் சொல்லலாம்.

✐ **கடைசியாக என்ன படம் பார்த்தீர்கள்?**

என்.எம்.நிஸாம், காத்தான்குடி-02.

'ரிதம்' கத்தியின்றி ரத்தமின்றி வரும் சுதந்திரம் போல, சண்டையை, சட்டையுரிப்பையெல்லாம் நம்பாமல் கதையை நம்பி வென்றிருக்கும் மற்றுமொரு படம். இரு மனங்களின் சலனங்களை கவிதையாகக் காட்டிவிட முயன்றிருக்கும் அக்கறைக்காக, இயக்குநர் விட்டிருக்கும் மற்றைய குறைகளைப் புறக்கணித்துப் பாராட்டி ரசிக்கலாம். அதிலும், பார்வையாலும் புன்முறுவலாலும் பல கவிதைகளை எழுதி நெஞ்சையள்ளும் மீனாவைப் பார்த்த பிறகு, சிம்ரன் ரசிகர் மன்றத்தைக் கலைத்துவிடலாம் என்று உத்தேசம்.



✐ **இப்போது வரும் பாடல்கள் பச்சை ஆபாசமாக இருக்கிறதே.... 'தின்னாதே என்னைத் தின்னாதே' பாடலை எழுதியவர் யார் என்று கூறுவீர்களா?**

தி.ரமேஷ், கொழும்பு-05.

'கண்டார் உயிருண்ணும் கண்களை' வள்ளுவனும் 'நெருக்கி உள்புகுந்து உருக்கி உயிரொடு உண்டு' போவதை கம்பனும் சொல்கிறார்கள். 'வேல்விழியால் எந்தன் விலாப் புறத்தில் கொத்தாதே! பாளைச் சிரிப்பில் பதைக்க உயிர் வாங்காதே! என்று பாரதிதாசன் பதறுகிறார். 'உப்பங்கழியிலுள் மீன்களை மீன்கொத்திப் பறவைகள் கொத்தி உண்பதுபோல சீவகன் மேனி அழகைப் பெண்களின் கண்கள் கொத்தி உண்டதை திருத்தக்க தேவர் எழுதுகிறார். புதுக்கவிதைக்காரர் கலாப்பிரியா, 'அவளது பார்வைகளை' இப்படி விவரிக்கிறார்: 'காயங்களுடன், கதறலுடன் ஓடி ஒளியுமொரு பன்றியைத் தேடிக் கொத்தும் பசியற்ற காக்கைகள்' இதைத்தான் பேச்சுத் தமிழில் சொல்கிறது அந்தத் திரைப் பாடல் வைரமுத்துவோடு என்ன கோபம் உங்களுக்கு?

# மன்னாதி மன்னன் 27

மூன்றாவது நாட்காலையில் போஜ மன்னர் தனது காலைக் கடன்களை முடித்து விட்டு ஆலயம் சென்று வணங்கினார். அங்கிருந்து அவருடைய மந்திரிப் பிரதானிகள் புடைசூழ, சிம்மாசனம் வைக்கப்பட்டிருக்கும் மண்டபத்தை வந்து அடைந்தார். அந்தச் சிம்மாசனத்தை மூன்று முறை வலம் வந்து வணங்கி விட்டு, முதலிரு நாட்களிலும் ஏறிய படிகளைக் கடந்து மூன்றாவது படியில் காலை எடுத்து வைத்தார்.

மூன்றாவது படிக்குப் பொறுப்பாயிருந்த கோமளவல்லிப் பதுமை, போஜராஜன் முன் தோன்றி, அவரை மேற்கொண்டும் முன்னேறிச் செல்லாமல் தடுத்தது.

"போஜமன்னரே எங்களுடைய வீர தீர பராக்கிரமசாலியான விக்கிரமாதித்த மாமன்னர் அமர்ந்து சிறப்புற ஆட்சி செலுத்திய இந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்து, பரிபாலனம் செய்ய உமக்கு அருகதை இருக்கிறதா, என்பதை முதலில் அறிந்து கொள்ளுங்கள். விக்கிரமாதித்தனுடைய ஆற்றலை வெளிப்படுத்தக் கூடிய கதையைக் கூறுகிறேன். முதலில் அதனைக் கேளுங்கள்!" என்று சொன்ன பதுமை கதையைக் கூறத் தொடங்கியது.

உஜ்ஜயினி மாகாளி பட்டணத்தில் எங்கள் மாமன்னர் விக்கிரமாதித்தன் ஆட்சி புரிந்த காலத்தில் வேதகோவிந்தன் என்ற பெயருடைய பிராமணன் ஒருவன் வசித்து வந்தான். இவனுக்கு குழந்தைகள் இல்லை. கணவனும் மனைவியுமாக தான தருமங்கள் செய்து, கோயில் குளங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தனர். இதன் பயனாக அத் தம்பதியினருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. பாராட்டிச் சீராட்டி தங்கள் மகனை வளர்த்து வந்தனர்.

மகனுக்கு ஏழு வயதாக இருக்கும் போது வேதகோவிந்தன் மகனையும் அழைத்துக் கொண்டு கடலில் நீராடச் சென்றான். அவ்வாறு கடலில் குளித்துக் கொண்டிருக்கும் போது ஒரு பெரிய சுறாமீன் நீருக்கடியிலிருந்து வேதகோவிந்தனின் மகனை விழுங்கி விட்டது.

தவமிருந்து பெற்றெடுத்த தன்மகன் மீனுக்கு இரையாகிவிட்டமையினால் வேதகோவிந்தன் சொல்லொணாத்துயரம் அடைந்து கதறியழுதான்.

"நாட்டின் நல்லாட்சி இருக்குமானால் நாட்டுமக்கள் எவரும் நூறு வயதுக்கு மேல் வாழ்வார்கள். ஆகவே இங்குள்ள ஆட்சி நல்லாட்சியாக இல்லாதிருப்பதனால்தான் என் மகன் இவ்வாறு சிறு வயதிலேயே மாண்டு போனான். ஆகவே எனது துன்பத்தை இந்நாட்டு அரசனே தீர்க்க வேண்டும்!" என்று கூறிக் கொண்டு அரண்மனையின் முன்வாயிலில் அமைக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியைப் போய் இழுத்து அடித்தான்.

விக்கிரமாதித்த மன்னர் அப்போது அரசவையில் அமர்ந்து அரச பணிகளில் ஈடுபட்டிருந்தார். ஆராய்ச்சிமணி அடிபடும் சத்தம் கேட்டதும் தனது மந்திரியாகிய பட்டியை அழைத்து, "அமைச்சரே! ஆராய்ச்சி மணி கட்டப்பட்டு இத்தனையாண்டுகளிலும் ஒரு போதும் அம்மணி அடிக்கப்படவில்லை. இன்று மணி அடிபடுகிறது. உடனே சென்று காரணத்தை அறிந்து வாரும்!" என்று கூறினார்.

பட்டி, ஆராய்ச்சி மணி இருக்குமிடத்தில் துக்கம் தாளாமல் அழுது புரண்டு கொண்டிருந்த வேதகோவிந்தனைக் கண்டார். அவனுடைய தலையிலிருந்து இரத்தம் பீறிட்டு வழிந்து கொண்டிருந்தது. வேதகோவிந்தனை அணுகிய பட்டி, மணியை அடித்தமைக்கான காரணத்தைக் கேட்டான்.

"அமைச்சரே! நல்லாட்சி நடைபெறுகின்ற ஒரு நாட்டில் நூறு வயதுக்கு முன்னர் எவரும் இறப்பதில்லை. ஆனால் எனது மகனுக்கு ஆக ஏழு வயது. அவனை கடலில் சுறாமீன் பிடித்து விழுங்கிவிட்டது. என் மகன் இறந்து போய் விட்டான். ஆகவே இந்த நாட்டில் நீதியான, நியாயமான ஆட்சி நடைபெறவில்லை என்றே கூற வேண்டும். இதனை, மாமன்னர் விக்கிரமாதித்தரிடம் கூறிவிட்டு எனது மண்டையை சபா மண்டபத்தின் தூணில் மோதி உயிர்விடப் போகிறேன்!" என்று பலத்த சத்தத்துடன் கூறி அழுதான்.

பட்டி, வேதகோவிந்தனை தூக்கி நிறுத்தி தன் தோளில் அணைத்தவாறு சபா மண்டபத்துக்குச் சென்று மன்னர் விக்கிரமாதித்தரிடம் நடந்த சம்பவத்தைக் கூறினார்.

வேதகோவிந்தன் தற்கொலை செய்து உயிரைப் போக்கிக் கொள்ளாமல் பாதுகாத்து வைத்திருக்கும்படி பட்டியிடம் கூறிவிட்டு வேதகோவிந்தனிடம் "பிராமணரே உம்முடைய மகன் இறக்கவில்லை. அவனை எப்படியாவது ஆறு மாதங்களுக்குள் கொண்டு வந்து உம்மிடம் சேர்த்து விடுகிறேன். ஆகவே கவலையை விட்டு விட்டு இருங்கள்!" என்று கூறி நேராக காளி கோயிலுக்குச் சென்று வணங்கினார்; பிராமணருடைய மகனை எப்படியாவது உயிருடன் காப்பாற்றத் துணைபுரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

காளிகாம்பாள் தோன்றி விபூதியும் எலுமிச்சம்பழ மொன்றும் கொடுத்தார்.

விக்கிரமாதித்தனும் அமைச்சர் பட்டியும் ஏற்கனவே செய்து கொண்ட உடன்படிக்கையின்படி நாட்டிலிருந்து ஆறு மாதங்கள் ஆட்சிபுரியும் காலம் அன்றைய தினம் விக்கிரமாதித்தனுக்கு முடிவடைகிறது. பட்டியிடம் ராஜ்ஜிய பரிபாலனத்தை ஒப்படைத்துவிட்டு, ஆறு மாதங்கள் காட்டில் சஞ்சரிக்க வேண்டிய காலம் அடுத்த நாள் தொடங்குகிறது.

## மீனின் வயிற்றுள் சிக்கிய சிறுவன்

பட்டியிடம் தனது முத்திரை மோதிரத்தை ஒப்படைத்துவிட்டு ஏனைய அரச பணிகளையும் ஒப்படைத்துவிட்டு வேதகோவிந்தனையும் அழைத்துக் கொண்டு நேராக கடற்கரைக்குச் சென்றார். வேதாளமும் அவர்களுடன் வந்து சேர்ந்தது. கடற்கரைக்கு வந்ததும் வேதகோவிந்தனிடம் விக்கிரமாதித்தன், அவரும் மகனும் குளித்த இடத்தைக் காட்டுமாறு கேட்டார். பிராமணர் இடத்தைக் காட்டினார். வேதாளத்துடன் இருந்த தனது மந்திரக் கம்பளத்தை வாங்கி அதனைக் கடலில் விரித்தார். அது தெப்பம் போல் மிதந்தது.

வேதாளத்திடம் வேதகோவிந்தனைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி



கூறிவிட்டு கம்பளத்தின் மீது விக்கிரமாதித்தன் ஏறினார். கடலில் சற்று தூரம் சென்றதும், தன்னுடைய மந்திர வாளால் கடலைக் கலக்கினார். அப்போது மிக வேகமாக சுறாமீன் ஒன்று வாயைப் பிளந்த வண்ணம் வந்து கொண்டிருந்தது. அதனைத் தனது வாளால் வெட்டி விடலாமா? என்று முதலில் யோசித்த விக்கிரமாதித்தன், ஒரு வேளை அந்த மீனின் வயிற்றுள் சிறுவன் இருக்கக்கூடும்; மீனை வெட்டினால் அவனும் இறந்து விடக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே மீனை வெட்டிக் கொல்வது நல்லதல்ல, என்று கருதிய போது அம் மீனின் திறந்திருந்த வாய்க்குள் விக்கிரமாதித்தன் போய்ச் சேர்ந்தார்.

சுறா மீனின் வயிற்றுக்குள் புகுந்த விக்கிரமாதித்தன் கண்ட காட்சிகள் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. ஒரு மாபெரும் நகரமே மீனின் வயிற்றுக்குள் விசாலமாக விரிந்திருப்பதைக் கண்டார். மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும் அங்கு காணப்பட்டன. விசாலமான வீதிகளும் மைதானங்களும் அங்கு காணப்பட்டன. இருப்பினும் அங்கு மனித நடமாட்டம் எதனையும் விக்கிரமாதித்தனால் காண முடியவில்லை. ஒரு வீதியின் வழியே வாளேந்திய படி சென்ற விக்கிரமாதித்தன் முன் ஒரு சிறுவன் வருவதைக் கண்டார். சிறுவனைத் தன்னிடம் அழைத்து விசாரித்தார். அப்போது தன்னுடைய வரலாற்றை அச் சிறுவன் சொன்னான்.

அவன் வேறு யாருமல்ல, வேதகோவிந்தனின் காணாமல் போன மகன் இவன் தான் என்பதைக் கண்டறிய அதிக நேரம் பிடிக்கவில்லை. அச்சிறுவனை விக்கிரமாதித்தன் தன் பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டார். தன்னுடைய மந்திர வாளினால் மீனின் வயிற்றைக் கிழித்து சிறுவனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தார். அவருடைய கம்பளம் கடலில் மிதந்தவண்ணம் இருந்தது. அந்தக் கம்பளத்தில் இருவரும் ஏறிக் கொண்டு ஏதோ ஒரு சைகை செய்தார். கம்பளம் மிக வேகமாக மிதந்து சென்றது. இறுதியில் புட்கரம் என்ற தீவை அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள்.

புட்கரத் தீவில் சம்பு நாதபுரம் என்றொரு நகரம் இருந்தது. இந் நகரிலிருந்து சம்புநாதன் என்ற அரசன் ஆட்சி புரிந்தான். இந்த அரசனுக்கு ஏலக்கரம்பை என்ற பெயரில் ஒரு மகள் இருந்தாள். போதிய கல்வி அறிவும், இளவரசிக்கு வேண்டிய சகல கலைகளையும் பெற்ற அழகியாக அவள் திகழ்ந்தாள்.

தாயைச் சிறுவயதிலேயே இழந்த தன் மகளை தகுந்த ஒரு மணவாளனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எண்ணிய மன்னன் சம்புநாதன், தன் மகளை அழைத்து " மகளே! நீ இப்பொழுது சகல கலைகளையும் பெற்ற பருவ மங்கையாகி விட்டாய். உன்னை தகுதியான ஒரு மணமகனிடம் சேர்த்துவைக்க வேண்டிய பொறுப்பில் நான் உள்ளேன். உன் மணவாளனாக நீ யாரையாவது வரித்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

இராஜகுமாரன்

இளவரசி தந்தையிடம், "அப்பா இவ்வளவு காலமும் நான் அரண்மனையிலேயே வாழ்ந்து வந்துவிட்டேன். தங்களையும் என் தோழிகளையும் அரண்மனையில் வாழும் ஏனையோரையும் தவிர வெளியுலகை நான் அறியமாட்டேன். ஆகவே ஐம்பத்தாறு தேசங்களிலிருந்தும் அரசர்களையும் இளவரசர்களையும் அழைத்து எனது சுயம்வரத்தை நடத்துங்கள். அப்போது எனக்குரிய கணவரை நான் தேர்ந்தெடுத்து என் மணாளனாக்கிக் கொள்வேன்," என்று கூறினாள்.

மன்னன் சம்புநாதன் தன் மகள் ஏலக்கரம்பையின் விருப்பப்படி எல்லா நாடுகளுக்கும் சுயம்வரத்திற்கான ஓலைகளை அனுப்பிவைத்தார்.

*(மன்னன் வருவான்...)*

# குஷ்வந்த் சிங் ஜோக்ஸ்

## வங்காளியா? பஞ்சாபியா?



தாடி வைத்த வங்காளி ஒருவருக்கும், சர்தார்ஜி ஒருவருக்குமிடையே கடுமையான வாக்குவாதம். இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக அதிகம் பாடுபட்டது பஞ்சாபிகளா அல்லது வங்காளிகளா என்பதுதான் வாதம்.

வாக்குவாதம் முற்றிக் கொண்டுபோக அவர்கள் ஓர் உடன்பாட்டுக்கு வந்தார்கள். அதாவது வங்காளி தனது மாநிலத்தின் சுதந்திரப்போராட்ட வீரர் ஒருவரது பெயரைச் சொன்னால், சர்தார்ஜியின் தாடி முடியொன்றைப் பிடுங்கலாம். அதேபோல் சர்தார்ஜி தனது மாநில சுதந்திரப்போராட்ட வீரரின் பெயரைச் சொன்னால் வங்காளியின் தாடியில் இருந்து ஒரு முடியைப் பிடுங்கலாம்.

வங்காளி முதலில் தொடங்கினார். சுபாஷ் சந்திரபோஸின் பெயரைச் சொல்லி சர்தார்ஜியின் தாடியிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கினார். அடுத்து சர்தார்ஜி பகத்சிங்கின் பெயரைச் சொல்லி வங்காளியின் தாடியிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கினார்.

இப்படியே தொடர்ந்து கொண்டிருக்க, வங்காளத் தேசபக்தர்களின் பெயருக்கு முடிவே இராதுபோல் இருந்தது. வங்காளி ஒவ்வொரு பெயராகச் சொல்ல, சர்தார்ஜியும் விடாமல் சொல்லிக் கொண்டு வந்தார்.

ஒரு கட்டத்தில் சர்தார்ஜிக்கு வேறு பெயர்கள் தெரியவில்லை. உடனே 'ஜாலியன் வாலாபாக்' (இங்குதான் வெள்ளையர்களால் பல இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்) என்று கூறி வங்காளியின் தாடி முழுவதையும் பிய்த்து விட்டார் சர்தார்ஜி.

## பாலம் தெரிகிறதா?

கேரள மாநில அமைச்சர் ஒருவர் பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்றார். அங்கு சர்தார்ஜி அமைச்சர் ஒருவரை அவர் சந்தித்தார்.

சர்தார்ஜி அமைச்சரின் வீட்டின் அழகையும் ஆடம்பரத்தையும் பார்த்து அவர் திகைத்துப் போனார். "இந்த சொகுசு பங்களாவைக் கட்ட எப்படி இவ்வளவு பணம் சேர்த்தீர்கள்?" என்று கேட்டார்.

"உண்மையாகவே அதைத் தெரிந்து கொள்ள விரும்பினால் நாளை அதைப்பற்றி விளக்கமாகச் சொல்கிறேன்!" என்றார் சர்தார்ஜி அமைச்சர்.



மறுநாள் சர்தார்ஜி அமைச்சர் தனது காரில் கேரள அமைச்சரை அழைத்துக்கொண்டு சென்றார். சிலமைல் தூரம் சென்றதும் ஓரிடத்தில் இருவரும் இறங்கினார்கள். சர்தார்ஜி அமைச்சர் கையை நீட்டிக் காட்டி "அதோ ஒரு பாலம் தெரிகிறதல்லவா?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்றார் கேரள அமைச்சர்.

"அதற்கான செலவில் பாதி என்கைக்கு வந்து விட்டது. அதைக்கொண்டு தான் ஆடம்பரமான வீட்டைக் கட்டினேன்!" என்றான் சர்தார்ஜி அமைச்சர்.

சில வருடங்களின் பின் சர்தார்ஜி அமைச்சர் கேரளாவுக்குச் சென்று, அமைச்சரைச் சந்தித்தார். அவர் குடியிருக்கும் வீட்டைக் கண்டதும் சர்தார்ஜி அமைச்சர் மலைத்துப் போய் விட்டார்.

"எப்படி இந்த அரண்மனையைக் கட்டினீர்கள்?" என்று கேரள அமைச்சரைப் பார்த்து அவர் கேட்டார்.

மறுநாள் சர்தார்ஜி அமைச்சரை தனது காரில் அழைத்துக் கொண்டு போனார் அவர்.

ஓரிடத்தில் இறங்கி தூரத்தில் கையை நீட்டிக் காட்டினார் கேரள அமைச்சர்.

"அதோ பாலம் இருப்பது தெரிகிறதா?" என்று கேட்டார்.

"பாலமா எங்கே?" என்று கேட்டார் சர்தார்ஜி அமைச்சர்.

"இருக்காது." அதற்கான முழு செலவும் என் கைக்கு வந்துவிட்டது. அதைக் கொண்டு தான் இந்த அரண்மனையைக் கட்டினேன்!" என்றார் கேரள அமைச்சர்.

## "சகோதரி என்று அழைக்காதீர்கள்!"

தமிழ்ப்பெண், தெலுங்குப்பெண், பஞ்சாபிப்பெண் ஆகிய மூவரும் ஒரே நாளில் இறந்து, எமதர்மன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள்.

நீதி விசாரணை தொடங்கியது.

"பூவுலகில் என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று தமிழ்ப் பெண்ணைப் பார்த்துக் கேட்டார் நீதிதேவன்.

"நான் நல்லவளாக இருந்தேன். கணவரிடம் விசுவாசமாக நடந்து கொண்டேன். மிகுந்த தெய்வபக்தி உடையவள் நான்!" என்றாள் அவள்.



"நல்லது. சொர்க்கத்தில் உனக்கு முதல் வகுப்பை அளிக்கிறேன்!" என்றார் நீதிதேவன்.

அடுத்து தெலுங்குப் பெண் சொன்னாள்.

"நான் சற்றுக் கோபக்காரப் பெண். இதனால் யாரையும் எடுத்தெறிந்து பேசி விடுவேன். இருந்தாலும் என் கணவருடன் அன்பாக நடந்து கொண்டேன்."

"உனக்கு சொர்க்கத்தில் இரண்டாம் வகுப்புத்தான்" என்றார் நீதிதேவன்.

பஞ்சாப்பெண் சொன்னாள்.

"நான் மிகவும் மோசமான பெண். என் கணவருக்கு விசுவாசமாக நான் நடந்து கொண்டதில்லை. பலருடன் தகாத உறவுவைத்திருந்தேன்!"

"சகோதரி இது மிகவும் மோசம்" என்றார் நீதிதேவன்.

"என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். தயவுசெய்து சகோதரி என்று மட்டும் அழைக்காதீர்கள்" என்றாள் அவள்.

"அப்படியானால் இன்று மாலை எனது அறைக்கு வந்துவிடு!" நீதிதேவன் தான் சொன்னார்.



பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு - 06 580230
3 SEA STREET, COLOMBO 11 · செட்டியார் தெரு, கொழும்பு · 336331
Website: www.lspik.com/arul




அழகான பொம்மைகள் சிறியவர்களை மட்டுமல்ல பெரியவர்களையும் ஆனந்தம் கொள்ளவைக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. ஸ்பொஞ்ச் எனப்படும் பலவர்ண பிளாஸ்டிக் பஞ்சினால் செய்யப்பட்ட இந்தப் பஞ்சவர்ணக்கிளி இந்திய நகரங்களில் வெகு பிரசித்தம். இந்த பொம்மைக் கிளியின் விலை 199 இந்திய ரூபாய்.

# பஞ்(சு)ச வர்ணக் கிளி





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11 · செட்டியார் தெரு, கொழும்பு · 323657


இது நடந்து முடிந்த ஒலிம்பிக் திருவிழாவின் ஒரு பகுதிதான். காலின் அடியே உயரமான பிளாஸ்டிக்கிலான கால்களைப் பொருத்திக் கொண்டு பெண்ணமபெரிய சப்பாத்துக்களுடன், கண்களைப் பறிக்கும் வர்ண உடைகளில் ஆட்டம் போடுகிறார்கள் இவர்கள்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தில் உள்ள ஒலிம்பிக் கிராமத்தில் நடந்த ஒத்திகை தான் இது. ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டபோது அவர்களை உற்சாகப் படுத்தியபடி ஆட்டம் போடுகிறார்கள் இவர்கள். இந்த கூடச்சரியான பயிற்சி எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் தடாலடியாக விழவேண்டும்.

# ஆட்டம்



# மேக்கப் புதிது



இந்தியாவின் புதுடில்லி, மும்பாய் நகரங்களில் இப்போது புதிதாகப் பரவியிருக்கும் மேக்கப் இதுதான். லிப்ஸ்டிக்கை இப்படி விதவிதமான வர்ணங்களிலும் வடிவங்களிலும் பூசி அசத்துகிறார்கள். விரைவில் நம் நாட்டுக்கும் இந்தப் புதிய மேக்கப் வரலாம்.

# காதலி



அசத்தலாகப் போஸ் கொடுக்கும் இந்த அழகியின் பெயர் தேஜஸ்வனி கோலாப்பூரி. மொடல் அழகியான தேஜஸ்வனி விளம்பரப் படங்கள் மூலம் நடிக்க ஆரம்பித்து இந்தித் திரையுலகில் நுழைந்திருக்கிறார்.

இந்தித் திரையுலகில் நுழைந்திருக்கும் தேஜஸ்வனி, இந்திய கிரிக்கெட் வீரர் ஒருவர் இதயத்திலும் நுழைந்திருக்கிறார். அந்த வீரர் யாருமல்ல, இந்திய துடுப்பாட்ட நட்சத்திரங்களில் ஒருவரான ராகுல் ட்ராவிட் தான் அவர்.

தேஜஸ்வனியைப்பற்றி இன்னொரு தகவல்: பிரபல இந்தி நடிகை பத்மினி கோலாப்பூரி இவரது அக்கா. பல வருடங்களுக்கு முன் இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் இந்தியாவுக்கு விஜயம் செய்த போது முத்தமிட்டுக் கிறங்கடித்தவர் தான் இவர்.

## 2வது 4வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



செல்வி.ஜெ.கனிஸ்ரா-18.08.2000

செல்வன்.ஜெ.ஜோன்சன்-29.09.2000

J.KANISTA (கனிஸ்ரா) 2000.08.18
J.JOHNSON (ஜோன்சன்) 2000.09.29

பம்பலப்பிட்டி இல. 21, நந்தனகார்டனில் வசிக்கும் ஜெயக்குமார் - அனோசா தம்பதிகளின் செல்வப் புதல்வி (J.Kanista) 2000.08.18 2வது பிறந்தநாளையும், செல்வப் புதல்வன் (J.Johnson) 4வது பிறந்த நாளையும் தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, யாழ்ப்பாணத்தில் இருக்கும் அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், அருந்தாமைத்தை அம்மம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், பெரியம்மா, பெரியப்பா, பிரான்ஸ் அத்தை, மாமா, மச்சாள்மார், மச்சான்மார், லண்டனில் இருக்கும் அத்தை, மாமா, சவுதியில் இருக்கும் அப்பம்மா, வவுனியாவில் இருக்கும் பாட்டி, அத்தைமார், மாமாமார், நீர்கொழும்பு

ஆயகலைகளும் பெற்று பல்லாண்டு நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்

தகவல்: ஜெயக்குமார் (அப்பா)



# கொண்டாட்டம்

பிரான்ஸின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த வியட்நாம் நாட்டை 1940ல் ஜப்பான் கைப்பற்றியது. ஜப்பானின் பின் துணையுடன் ஆட்சிபுரிந்த பாவேதாவை, ஹோசிமின் தலைமையிலான வியட்கோங் படை தோற்கடித்தது.

அடிமைதனை விட்டொழித்து ஆண்டுகள் 55 ஆகி விட்டன. சுதந்திரமான நாளைக் கொண்டாடுவதில் தான் எத்தனை ஆனந்தம்.

வியட்நாம் மக்கள் கடந்த செப்டெம்பர் மாதம் 2ம் திகதி சுதந்திர தினத்தைக் வெகு விமர்சையாகக் கொண்டாடினார்கள்.

அந்த ஆனந்த வெள்ளத்தில் பௌத்த துறவிகளும் மூழ்கித் திளைத்தனர். சுதந்திர தினக்கொண்டாட்டப் பேரணி ஒன்றில் வியட்நாம் கொடியைப் பிடித்தபடி சுதந்திர கோஷங்களை எழுப்பியபடி சென்ற துறவிகளின் ஒரு பகுதியினர் தான் இவர்கள்.